விலை ரூபா 20
பக்கங்கள் 32

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 216 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 15, புதன்கிழமை 29.06.2016

**பிரிட்டனின் ஒற்றுமையை கேள்விக்குறி ஆக்கியுள்ள** கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு
பக். 12

# அரசு வழங்கிய வாக்குறுதிகள் இடைநிறுத்தப்படும் அபாயம்

## எச்சரிக்கிறார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்; உறுதியான நடவடிக்கைகளில் போதிய வேகம் இல்லை எனவும் கண்டனம்

கொழும்பு, ஜூன் 29
இலங்கை அரசு துணிச்சலான சில நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் சிறுபான்மைச் சமூகத்தினர் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த உதவக்கூடிய ஏனைய உறுதியான நடவடிக்கைகளை, முன்னெடுப்பதில் போதிய வேகத்துடன் செயற்படவில்லை என்று கண்டித்துள்ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன்.
"அரசு அளித்த நிலைமாற்றுகால நீதி, ஆட்சிச் சீர்திருத்தம் மற்றும் பொருளாதார மறுமலர்ச்சி குறித்த வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இந்த வாக்குறுதிகள் இடைநிறுத்தப்படும் அல்லது சிதறடிக்கப்படும் அபாயம் உள்ளது" எனவும் அவர் எச்சரித்தார்.
இலங்கை தொடர்பிலான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் வருமாறு:
இலங்கையில் கடந்த செப்ரெம்பரில் ஏற்படுத்தப்பட்ட தேசிய அரசு தன்னை உறுதிசெய்துள்ளதுடன், சீர்திருத்தத்திற்கு அவசியமான அரசியல் சூழலை ஏற்படுத்தி பக்.27



## 26 தமிழர்கள் படுகொலை வழக்கு 20 ஆண்டுகளின் பின் விசாரணை

கொழும்பு, ஜூன் 29
திருகோணமலை குமாரபுரத்தில் 1996ஆம் ஆண்டு இராணுவத்தினர் நடத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டில் 26 பேர் சாவடைந்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு பல ஆண்டுகளின் பின்னர் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி இரவு நடைபெற்ற இந்தப் படுகொலைச் சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உள்பட 26 பேர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தச் சம்பவத்தில் மேலும் 39 பேர் காயமடைந்தனர்.
அந்த முறைப்பாட்டில், மதுபோதை பக்.28

முச்சந்தி முரளி



வாக்குறுதிகளை நிறைவேற்றிய வரலாறு உண்டோ இவர்களிடம் பாருங்கோ....

## கொத்துக்குண்டு விவகாரம் குறித்து சுயாதீனமான விசாரணை அவசியம்

ஜெனிவா, ஜூன் 29
உள்நாட்டுப் போரின் இறுதியில் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை அரசு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசேன்.
ஆணையாளரின் இலங்கை குறித்த பக்.27

## தென்கிழக்குப் பல்கலையில் 331 மாணவர் இடைநிறுத்தம்

### பகிடிவதை விவகாரத்தில் நிர்வாகம் அதிரடி

கொழும்பு, ஜூன் 29
பகிடிவதை விவகாரம் காரணமாக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த 331 மாணவர்கள், இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.
இவ்வாறு அறிவித் பக்.27

## வீதியில் சென்ற இளைஞனின் உயிரைப் பறித்தது ஹன்டர்




சாவகச்சேரி, ஜூன் 29
வேகக்கட் டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகிய ஹன்டர் ரக வாகனம் சைக்கிளில் பயணித்த இளைஞரை மோதித் தள்ளி விட்டு அருகில் உள்ள மதிலையும் உடைத்து நின்றது. வாகனத்தினால் மோதுண்ட இளைஞன் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று பி.ப. 3.30 மணியளவில் மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம்பெற்றது. பக்.27

## தமிழகத்திலிருந்து 36 அகதிகள் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 29
தமிழகத்திலிருந்து 36 இலங்கை அகதிகள் நேற்று நாடு திரும்பினர்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், கொழும்பு, திருகோணமலை மற்றும் வவுனியா உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நாடு திரும்பினர்.
இவ்வாறு அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு ஐ.நா. அகதிகளுக்கான முகவர் நிறுவனம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.
குறித்த அகதிகளுக்கு இலவச விமான பயணச் சீட்டுக்களை வழங்கியுள்ள ஐ.நா. அகதிகளுக்கான முகவர் நிறுவனம், அவர்களின் வாழ்வாதாரத்துக்கான ஆரம்பக் கொடுப்பனவையும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ)

## பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையிலேயே நிர்மாணியுங்கள்

### வவுனியா கமக்கார அமைப்புக்கள் நேற்றுப் போராட்டம்

வவுனியா, ஜூன் 29
பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையிலேயே அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
வவுனியா கமக்கார அமைப்புகள் இதனை ஏற்பாடு செய்தன. காமினி வித்தியாலயத்துக்கு முன்பாகப் போராட்டம் ஆரம்பமானது. மாவட்ட செயலகத்தில் முடிவடைந்தது. மாவட்டத்தின் மேலதிக செயலாளர் திரேஸ்குமாரிடம் மனுக்கையளிக்கப்பட்டது.
பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என்று நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கம் போராட்டம் நடத்தியது. (விரிவு 9 ஆம் பக்கத்தில்)




Digitized by Noolaham Foundation.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வரி செலுத்த வேண்டியது ஒவ்வொருவரின் கடமை

## யாழ். மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 28
மக்களின் வரிப்பணத்திலேயே இலவச கல்வி, வைத்தியம் மற்றும் அரச ஊழியர்களின் சம்பளம் என்பன வழங்கப்படுகின்றன. வரி செலுத்த வேண்டியது ஒவ்வொருவருடையதும் கடமையாகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள என்.எஸ்.ஆர். மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

வரிகளில் மறைமுக வரி, நேர்முக வரி எனக் காணப்படுகின்றன. ஏதோ ஒரு வகையில் நாம் வரிகளைக் செலுத்துகின்றோம். சிலபேர் வருமான வரிகளை செலுத்துவதற்கு பின்னடிக்கின்றார்கள். ஒவ்வொருவரும் தாமாகவே முன்வந்து வரி செலுத்த வேண்டும். வரி செலுத்துவது எமது உரிமைகளில் ஒன்று. வரி செலுத்துவதால் எமது மாவட்டமே உயர்ச்சியடையும் - என்றும் மாவட்ட செயலர் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்திய ஆணையாளர் எம். கணேசராசா தெரிவித்ததாவது:

ஒவ்வொருவரும் வரி செலுத்துவது என்பது சட்டப்படி ஒரு கடப்பாடு. வரி செலுத்தாவிடின் அது தண்டனைக்குரிய குற்றமாகும். வரி இல்லையென்றால் அரச இயந்திரம் இயங்கமுடியாது. தேசத்துக்கு செலுத்து வேண்டிய கடமைகளில் ஒன்றாக வரி செலுத்துவது அமைந்துள்ளது. ஒவ்வொரு அரச செயற்றிட்டங்களிலும் வரி செலவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய திணைக்களத்துக்கு உட்பட்ட வகையில் 2014 மற்றும் 2015ஆம் ஆண்டு வரி மதிப்பாண்டில் 37 பேர் சிறப்புரிமை அட்டை பெறுபவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இந்த கௌரவம் வழங்கப்படுகிறது. 12 பேர் தங்க சிறப்புரிமை அட்டையைப் பெறுகிறார்கள்.

10 இலட்சத்துக்கு மேற்பட்ட தொகையை வரியாகச் செலுத்துபவர்களுக்கு தங்க சிறப்புரிமை அட்டையும், 5 இலட்சத்துக்கு மேற்பட்ட தொகையை வரியாகச் செலுத்துபவர்களுக்கு வெள்ளி சிறப்புரிமை அட்டையும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

எமது மக்களின் அவசரதேவையை கருத்தில் கொண்டு வரி செலுத்தும் நடைமுறை இன்னும் ஓரிரு ஆண்டுகளில் கணினி மயப்படுத்தப்படவுள்ளது. அதற்குப் பின் பிராந்திய காரியாலயத்துக்கு வந்து சிரமப்படாமல் இணையம் மூலமாக வரியைச் செலுத்த முடியும்.

இதுவரை காலமும் எமது உள்நாட்டுத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் இதுவரைகாலமும் வாடகைக் கட்டடத்தில் இயங்கியது. தற்பொழுது மாவட்டச் செயலர் மற்றும் பிரதேச செயலரின் ஒத்துழைப்பின் ஊடாக நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு காணி வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வருட இறுதிக்குள் சொந்தக் கட்டடத்தில் எமது யாழ். பிராந்திய நிலையம் இயங்கும்- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர், யாழ். பிரதேச செயலர், தொழிலதிபர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி)

## அரச பஸ்கள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இலங்கை போக்குவரத்துச் சபையின் இரு பஸ்கள் மீது இரண்டு இடங்களில் வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். அதில் சாரதி ஒருவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் சந்தியில் வைத்து நேற்றுக் காலை 6.15 மணிக்குத் தாக்குதல் நடத்தப்பட்டது. வரணி கொடிகாமத்தைச் சேர்ந்த சாரதி காயமடைந்தார். மற்றைய சம்பவம் சண்டிலிப்பாய் சந்தியில் இடம்பெற்றது. அதில் பஸ் கண்ணாடிகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-4,106)

## சிறந்த பிரதேச செயலகங்களை இனங்காண நடவடிக்கை

தென்மராட்சி, ஜூன் 29
கடந்த வருடம் பொதுமக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கிய பிரதேச செயலகங்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகங்கள் தாம் வழங்கிய சேவைகள் தொடர்பான செயற்றிட்டங்களை காட்சிப்படுத்தல் மூலம் வெளிப்படுத்தி வருகின்றன.

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக மரம் ஒன்று நடப்பட்டு, அதன் கிளைகளில் செயலகத்தில் இயங்கும் பிரிவுகள் சுட்டிக்காட்டப்பட்டள்ளன. அந்தப் பிரிவுகளுக்குள் சிறிய மரங்களை நட்டு அப்பகுதியில் செயற்படும் பிரிவுகளும், மேற்கொள்ளப்பட்ட சேவைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த வருடம் வழங்கிய சேவைகளின் விவரங்களும் மரக்கிளைகளில் தொங்கவிடப்பட்டுள்ளன. (ற-ஜ-9)



வடக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் சேவைப் புறக்கணிப்பால் உரிய நேரத்துக்கு பாடசாலை செல்ல முடியாமல் மாணவர்கள் சிரமப்பட்டனர். பளை மத்திய கல்லூரியை சேர்ந்த மாணவர்களை, பளை பொலிஸார் தங்களுடைய பொலிஸ் ஜீப்பில் ஏற்றி வந்து பாடசாலையில் சேர்ப்பித்தனர். (ற-ஜ-ரி3)

## போதையில் சத்தமிட்டவருக்கு தண்டம்

மூதூர், ஜூலை 29
திருகோணமலை மூதூர் நீதிவான் மன்றத்துக்கு முன்பாக மதுபோதையில் சத்தம் போட்ட நபருக்கு மூவாயிரம் ரூபாய் தண்டப் பணமும் அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் ஆறு மாதம் சிறைதண்டனையும் விதிக்கப்பட்டது.

மூதூர், பாலநகரைச் சேர்ந்த நபருக்கே தண்டம் விதிக்கப்பட்டது.

பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் குறித்த நபரை கைது செய்து மூதூர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். குறித்த நபருக்கு நீதிவான் தண்டம் விதித்தார். (ற)

## 75 பவுண் நகைகள் கொள்ளை; வவுனியாவில் இருவர் சிக்கினர்

வவுனியா, ஜூன் 29
75பவுண் தங்க நகைகளுக்கு மேல் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் ஒருவர் மாற்று வலுவுள்ளவர் எனவும் அவரிடம் இருந்து சில தங்க நகைகளையும் மீட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் மாற்று வலுவுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணைகளில் கிடைக்கப்பெற்ற தகவலின்படி கொழும்பு செட்டித் தெருவில் ஒருர் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் குழுவாக இணைந்து கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார்கள். கடந்த காலங்களில் சுமார் 75 பவுண் நகைகளுக்கு மேல் இவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது என்று சந்தேகிக்கிறோம். வவுனியாவில் கொள்ளையடிக்கும் நகைகளை கொழும்பில் விற்றுள்ளார்கள் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது. நகைகளை வேறு நபர்களிடமும் கொடுத்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் பின்னர் இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் - என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

## நீர்ப்பாசன பொறியிலாளர் இடமாற்றத்தை நிறுத்தக்கோரி வவுனியாவில் கவனவீர்ப்பு



வவுனியா, ஜூன் 29
கொழும்பு அரசின் வவுனியா மாவட்ட நீர்ப்பாசன பொறியிலாளரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரி கமக்கார அமைப்புக்கள் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தின. நேற்றுக் காலை வவுனியா மாவட்ட செயலகத்தின் முன் போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திணைக்களத்துக்குப் புதிதாக கடமைகளைப் பொறுப்பேற்று திறம்பட செயற்பட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளரை, வவுனியா மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள உயர் அதிகாரி இடமாற்றம் செய்துள்ளார் என கமக்கார அமைப்பினர் குற்றஞ்சாட்டினர்.

போராட்டத்தின் போது நீர்ப்பாசன பொறியிலாளரின் இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்து மீண்டும் அந்த அதிகாரியே பொறியியலாளராக நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும், வவுனியா மாவட்ட செயலகத்தில் ஒன்று கூடி கவனவீர்ப்பு போராட்த்தை முன்னெடுத்த கமக்கார அமைப்பினர் வவுனியா மாவட்ட மேலதிக அரசஅதிபர்த.திரேஸ்குமாரிடம் மனுக்கையளித்தனர்.

பாவற்குளம், முகத்தான்குளம், செட்டிகுளம், இராசேந்திரகுளம், ஆகிய பகுதிகளின் கமக்ரா அமைப்பினர், அந்த பகுதிகளைச் சேர்ந்த கிராம அமைப்பினர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (ற-ஜ-21)

தேசிய போசணை மாதம் - ஜூன் - 2016
உயரத்துக்கு ஏற்ப உடல் நிறையைப் பேணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கம் வடிசாலை சீரமைப்புக்கு 112 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 29

பனம் சாராயத்தை உற்பத்தி செய்வதற்காக திக்கம் வடிசாலையை நவீனமயமாக்கி மீளச் செயற்படுத்துவதற்கு 112.5 மில்லியன் ரூபா நிதியை வழங்குவதற்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சினால் சமர்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

உற்பத்தி செய்யப்படும் மேலதிகமான கள் வீணாக்கப்படுவதனால், சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்றது. சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன், விரயமாக்கப்படும் மேலதிக கள்ளை வடிசாலையில் வினாகிரி, சத்திர சிகிச்சைக்கான ஸ்பிரிற், சாராயம் போன்ற உற்பத்திகளாக மாற்றுவதற்கு திக்கம் வடிசாலை 1984 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

திக்கம் வடிசாலையிலுள்ள இயந்திரங்களும், பொறித் தொகுதிகளும் தேய்மானமடைந்த காரணத்தால் அதனுடைய உற்பத்தித் திறனும், வெளியீடும் தரம் குறைவாகக் காணப்படுவதுடன் உற்பத்திச் செலவும் அதிகமாகக் காணப்பட்டது.

இவ்வாறான நிலையில் மீள்குடியேற்ற அமைச்சரினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. நவீன இயந்திரத் தொகுதியுடன் கூடிய பொறித் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கும் வடிசாலையை மீளச் செயற்படுத்தவும் 112.5 மில்லியன் ரூபா கிரயத்தில் மீள் செயற்படுத்துகை கருத்திட்டம் முன்னெடுக்கப்படுவதன் அவசியம் அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது.

அமைச்சரவை இதற்கான நிதி அங்கீகாரத்தை மீள்குடியேற்ற அமைச்சுக்கு வழங்கி, பனை அபிவிருத்திச்சபை மூலம் இதனை



முன்னெடுத்து பனைத்துறையில் தங்கி வாழும் சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதுடன் திறைசேரி நிதியில் செயற்பாட்டு, பராமரிப்பு செலவுகளுக்குத் தங்கியிராமல் சுயாதீனமாக வருமானம் ஈட்டல் மூலம் முன்னெடுக்கப்படவேண்டுமெனவும் விதந்துரைக்கப்பட்டது – என்றார்.

(வ-5)

# விசாரணைக்கு அழைத்து பொலிஸார் சித்திரவதை

## வல்வெட்டித்துறை இளைஞன் குற்றச்சாட்டு

விசாரணைக்கு என்று கூறி அழைத்து பொலிஸ் நிலையத்தில் வைத்து போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் ஒருவர் கடுமையாகத் தாக்கியுள்ளதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு தாக்கியதாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர், 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். ஆனால் குறித்த இளைஞன் முறைப்பாடு ஒன்று தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கும் வல்வெட்டித்துறைப் பொலிஸ்நிலையப் பெறுப்பதிகாரி, அது ஒரு பெரிய விடயம் அல்ல எனக் குறிப்பிட்டார்.

இமையாணன் கிழக்கு பாடசாலை வீதியைச் சேர்ந்த நற்குணம் லிசாந்தன் (வயது– 22) என்ற இளைஞனே இவ்வாறு காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

"நேற்று முன்தினம் மதியம் தனது மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த பொலிஸ் அதிகாரி, நான் தொலைபேசியில் உரையாடியது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனக்கூறி, மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்சென்றார். வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அவர் போக்குவரத்துப் பிரிவில் பணிபுரிகிறார். பொலிஸ் நிலையத்தில் வைத்து எனது அலைபேசியிலிருந்து பிறிதொரு நபருக்கு அழைப்பு ஏற்படுத்தியதாகத் தெரிவித்தார். அத்துடன் 2 பேரது விடயங்களில் நான் தலையிட்டதாகவும் கேட்டுக் கடுமையாகத் தாக்கினார். அவர் தாக்கும் போது மற்றொரு பொலிஸ் அதிகாரி அங்கிருந்த பொருள்களில் தட்டிக் கொண்டிருந்தார். எனக்கு அடிக்கும் சத்தம் வெளியே தெரியாதிருப்பதற்காக அவ்வாறு செய்திருக்கலாம் என்று கருதுகிறேன். பின்னர் மாலை 6.30 மணியளவில் விடுவித்தனர். காயங்கள் மற்றும் வலிவேதனையால் மந்திகை வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்குச் சென்றேன். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுளேன்" – என்றார் லிசாந்தன்.

"பெண் ஒருவரினதும் ஆண் ஒருவரினதும் படம் ஒன்று இணையங்களில் வெளியாகியுள்ளதாகவும், அதனை நீக்குவதாக இருந்தால் 50 ஆயிரம் பணம் கேட்டதாகவும் அதனால் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் பெண் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். அதனால் குறித்த இளைஞன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அது பெரிய விடயமல்ல" – என்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஆனால், பொலிஸ் பொறுப்பதிகாரியின் கருத்தை லிசாந்தன் மறுத்துள்ளார். "நான் கப்பம் கோரவில்லை. யார் கப்பம் கோரியது என்றும் எனக்குத் தெரியாது. அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம். கப்பம் கோரியதாகப் பொலிஸார் பொய்யான குற்றச்சாட்டை முன் வைக்கின்றனர்." இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித் துறைப் பொலிஸார் வைத்தியசாலைக்கு வந்து முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். மனிதஉரிமைகள் ஆணைக் குழுவுக்கும் அறிவித்துள்ளோம்" என்று லிசாந்தன் தெரிவித்தார்.

(வ-4,108,ரி4)

# மினிமுத்து சுறா வைத்திருந்த மீன் வியாபாரிக்கு அபராதம்



யாழ்ப்பாணம், ஜூன் 29

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட மினிமுத்து இன 13 அடி நீள சுறாவை வைத்திருந்த வியாபாரி ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த வியாபாரிக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றம் ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் மீனவர் ஒருவரினால் 13 அடி நீளமும் 3 அடி அகலமும் ஆயிரம் கிலோ எடையுமுடைய மினி முத்து இன சுறா பிடிக்கப்பட்டது. அதனை அவர் கடலுணவு மொத்த வியாபாரி ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

இந்தச் சுறாவை விற்பனையாளர் கொண்டுசெல்லும் வழியில், கடற்படையினர் கண்டு உரியவரைக் கைது செய்து பளைப் பொலிஸாரிடம் கையளித்தனர். அத்துடன், குறித்த சுறாவையும் பறிமுதல் செய்தனர். பளைப் பொலிஸார் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் பாரப்படுத்தினர்.

இவ்வாறு பாரப்படுத்தப்பட்ட வியாபாரியை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தினர். குறித்த வியாபாரிக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததோடு, சுறாவை அழிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

(வ-101)

வேலைக்கு ஆள் தேவை
நல்லூர் அருகில் இயங்கும் மருந்தகம் மற்றும் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு O/L படித்த பெண் பிள்ளைகள் தேவை.
076 5239171, 077 9459445

Win Repair
A/C களும், சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு – 077 9648942

Personal Class
தரம் 03- A/L வரையான மாணவர்களுக்கு ஆங்கிலம், சிங்களம், Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர் ஒழுங்கு செய்து தரப்படும். பிரபல ஆசிரியர்
தொடர்பு: 072 171 9052

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 28.06.2016 | வெற்றி வாரம் 1997 | வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 27 43 45 53
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 5,271,000/-
2016-07-01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

நியத்த ஜய
வெற்றி வாரம் : 474
திகதி : 28-06-2016
வர்ணம் : மஞ்சள்
04 19 57 60 P
எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை ரூ.10,874,300/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி ஷனிதா
வெற்றி வாரம் 023 2016-06-28
அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ.85,557,140/-
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
C 12 17 35 57
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 011 4 824 824

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்
திரு
செல்லையா அன்ரன் செல்லநாயகம்
(Spl Trd R.C, B.A)
இலங்கை அதிபர் சேவை தரம்III (SLPS III) இற்கு பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல பதவிகளைப் பெற்று கல்விச் சேவையில் உயர்நிலையை அடைய வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிகழகம்
யா/பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.ம.வி

அழகுக் கலை பயிற்சி வகுப்புக்கள்
ஆஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்திருக்கும் பிரபல அழகுக்கலை நிபுணர்
திருமதி தர்சினி றஞ்சன் அவர்களால்
மணப்பெண் அலங்காரம்,
சிகை அலங்காரம்
முக அலங்காரம்
போன்ற அலங்கார வகுப்புக்கள் (Workshop) நடத்தப்படவுள்ளன.
வகுப்புக்கள்
03.07.2016 ஞாயிறு தொடக்கம்
08.07.2016 வெள்ளி வரை
இலவச அறிமுக வகுப்புக்களும் அதனைத் தொடர்ந்து குறைந்த கட்டணத்தில் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.
தொடர்புகளுக்கு:
திருமதி தர்சினி றஞ்சன்
தொ.பே.இல: 0711103612 / 021 222 5158
e-Mail: harishi09@gmail.com
179/5, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறைந்த ஆசிரியருக்கு பிணை அச்சுறுத்திய இருவருக்கு மறியல்

பாடசாலையில் வைத்து காதில் அறைந்து செவிப்பறையைக் கிழியச் செய்த ஆசிரியரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் மன்றம் அனுமதி வழங்கியது. எனினும் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவனை வைத்தியசாலையில் வைத்து அச்சுறுத்திய குற்றச்சாட்டில் இரண்டு ஆசிரியர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு பாடசாலைக்கு வெளியே இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக ஆசிரியர் காதில் அறைந்துள்ளார். கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தினால், செவிப்பறை வெடித்து இரத்தம் வழிந்த நிலையில் மாணவன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் கடந்த 17 ஆம் திகதி மாலை வைத்தியசாலைக்குச் சென்ற பாடசாலையின் இரு ஆசிரியர்கள் உண்மையை வெளியில் யாருக்கும் சொல்லக் கூடாது. குறிப்பாக ஊடகங்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என மாணவனை அச்சுறுத்திச் சென்றுள்ளனர். இந்த நிலையிலேயே சம்பவம் தொடர்பில் மாணவனின் பெற்றோர், மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறுவர் நன்னடத்தைப் பிரிவு மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறையிட்டனர்.

இதனையடுத்தே விசாரணைகளை மேற்கொண்ட நீதிமன்ற சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரும் பொலிஸாரும் பாதிக்கப்பட்ட மாணவன் மற்றும் அறைந்த வேளையில் அங்கு நின்ற மாணவர்களிடம் சாட்சியங்களை பதிவு செய்தனர்.

இதன்பின்னர் குறித்த மூன்று ஆசிரியர்களையும் அழைத்து பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். இந்த நிலையில் அறைந்த ஆசிரியருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த ஆசிரியரை ஜூலை ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மறுநாள் ஆசிரியரின் சார்பில் சட்டத்தரணி பிணை மனு கோரி நீதிமன்றில் விண்ணப்பித்தபோது நீதிவான் பிணை மனுவை நிராகரித்தார்.

நேற்று மீண்டும் ஆசிரியரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி பிணை மனு சட்டத்தரணியால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன், தாக்கப்பட்ட மாணவனை வைத்தியசாலையில் வைத்து அச்சுறுத்திய குற்றச்சாட்டில் இரண்டு ஆசிரியர்களை நேற்று பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். இருவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ- 9)

## பாடசாலை அதிபர் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவனைக் கடுமையாகத் தண்டித்தார் என வழங்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் பாடசாலை அதிபரை நேற்று பொலிஸார் கைது செய்தனர்.

பாடசாலைக்கு வராதமைக்கான காரணத்தை அதிபரிடம் வெளிப்படுத்தச் சென்ற போதே அதிபர் தண்டித்தார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அதிபரிடம் விசாரணைகள் இடம்பெறுவதாகத் தெரிவித்த பொலிஸார், அதன் பின்னரே மேலதிக நடவடிக்கைகள் தொடர் பில் தெரிய வரும் எனக் குறிப்பிட்டனர். (வ -101,103)

## மகிந்தவை தோற்கடித்தவர் பசில் -டிலான் பெரேரா

பசில்ராஜபக்ச இந்தியாவின் உளவுப்பிரிவானறோவுடன் இணைந்து மகிந்தவைத் தோற்கடித்தார். இதனை விமல் வீரவன்ச ஊடகங்களைச் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஹாலி - எல பகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது- முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் நாங் கள் தொடர்ந்து இருந் தோம். அவருடன் செயற்பட்டோம். ஜனாதிபதி தேர்தல் அண்மித்த காலப் பகுதியில் பசில் ராஜபக்சவின் நடவடிக்கைகளால் 24 மணித்தியாலயத்தில் அனைத தும் மாறிவிட்டன மகிந்த ராஜபக்சவை தேர்தலில் தோல்வியடையச் செய்வதறகாக பசில் ராஜபக்ச இந்திய றோ அமைப்புடன ஒன்றிணைந்து செயற பட்டனா என்று விமல வீரவனச ஊடகங்களை சுட்டிக காட்டித் தெரிவித்திருநதார்.

மகிந்த ராஜபக சவை நெருககடி யில் தள்ளி விட்டு, வெளி நாட்டில தஞசமடைந்து சிறிலங்கா சுதந்திர கட்சியை பிளவு படுத்தும் நோக்கில் அவர் கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது முயற்சித்தார். அது வெற்றியளிக்கவில்லை- என்றார். (ற-ஜ-5)

சிங்கள வகுப்பு
பேச, எழுத, வாசிக்க
அடிப்படையிலிருந்தே
077 706 6000, 077 132 7818

விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

காணி விற்பனைக்கு
கொக்குவில் மேற்கு, K.K.S வீதி, முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1¾ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
077 0110 121

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைக்கு எமது தனியார் நிறுவனத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குத் தேவை. பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது நேரடியாக சமுகமளிக்கவும் (J 2494) (14,17,18)
076 824 6633
021 568 5705

காணி விற்பனைக்கு உண்டு
வடமராட்சி வல்லிபுரத்தில் வல்லிபுரக் கோயிலுக்கு போகும் பாதையில் இருகாணிகள் இரு இடங்களில் 3½ பரப்பு வீதம் விற்பனைக்கு உண்டு.
077 784 5854, 021 373 5681

வீடு வாடகைக்கு விடப்படும்
பத்தமேனி, அச்சுவேலி பஸ்நிலையம் முன்பாக சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
004 915 145 825 799
077 1972701

காணி விற்பனை
வடமராட்சி உபய கதிர்காமத்தில் கந்த முருகேசனார் வீதியில் 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
071 263 8729, 077 573 7954, 011 263 2212

2016ஆம் ஆண்டிற்கான விண்ணப்பம் கோரல்
ACCA (Association of Chartered Certified Accountants)
(சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சம்மேளனத்தின் பரீட்சை)
இக் கற்கை நெறி மூன்று நிலைகளை கொண்டது
A/L பூர்த்தி செய்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இக்கற்கை நெறியினை தொடர முடியும்
ACCA - 03 கட்டாய பாடங்களையும் 02 தெரிவுப் பாடங்களையும் கொண்டது (12 மாத காலம்)
DEGREE: Degree Level – 06 பாடங்களை கொண்டது (12 மாத காலம்)
DIPLOMA: Diploma Level – 03 பாடங்களை கொண்டது (06 மாத காலம்)
விண்ணப்ப முடிவு திகதி – 2nd July 2016
மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு ரூ 40,000 (Registraetion&Subscription Fee) வரையிலான கட்டண சலுகை வழங்கப்படும்
AAT,மாணவர்களுக்கு பாட விலக்களிப்பு மற்றும் அதற்குரிய கட்டணச் சலுகையும் வழங்கப்படும்
149 2/1 K.K.S Road, Jaffna
0773 722 104
K-AIMS BUSINESS SCHOOL

JAFFNA COLLEGE ANNUAL PRIZE GIVING 2016
Chief Guest
Dr.R.W.Alexander Jesudasan (Ph.D.&D.Sc)
(Principal, Madras Christian College)
on Wednesday The 29th June 2016
at 4.30 p.m in the Quadrangle.
You are Cordially Invited.
Vaddukoddai. Principal.

Patrician Institute
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்
Vacancy
வெல்டர் தேவை (WELDER)
எமது நிறுவனத்திற்கு வெல்டர் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
Patrician Institute
61, ST. PATRICK'S ROAD,JAFFNA
T.P: 021 222 6148


அரியாலை சனசமூக நிலையம்
67ஆவது ஆண்டு நிறைவு விழா -2016
வடமாகாண ரீதியிலான மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி
அமரர் கந்தையா துரைராஜா
ஞாபகார்த்தமாக அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ள 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 7 பேர் பங்குபற்றும் சுற்றுப்போட்டி.
விண்ணப்ப முடிவு திகதி:- 06.07.2016, புதன் இரவு 9 மணி
பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.
தொடர்பு: 077 021 0723, 077 601 3550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம்களை அகற்றி படையை பலவீனப்படுத்தவில்லை அரசு

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

முகாம்களை அகற்றி பாதுகாப்பு படைகளைப் பலவீனப்படுத்துகின்றது என்று அரசு மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிக்கின்றேன். இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஹிங்குராங்கொடை ரஜரட்ட வித்தியாலயத்தில், பாதுகாப்புத் தரப்பினருக்கான 'ரணவிரு' அட்டை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஓய்வுபெற்ற அல்லது சேவையில் உள்ள எந்தவொரு படையின ரையும் தனிமைப்படுத்த இடமளிக்கப் போவதில்லை. பாதுகாப்பு படைகளின் தரத்தையும், பலத்தையும் மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசு அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பாடுபடும்.

இந்த அட்டையை அறிமுகப்படுத்துவதன் ஊடாக அரசு படையினரின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

நாட்டுக்காக உயிர்த் தியாகம் மேற்கொண்ட மற்றும் உடல் அவயவங்களை இழந்த படையினரதும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களதும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதை அரசு ஒருபோதும் புறக்கணிக்காது. படையினரின் பொதுவான பிரச்சினைகள் மற்றும் தனிப்பட்ட மனக் குறைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பாதுகாப்பு படைகளைப் பலவீனப்படுத்தி பாதுகாப்பு படை முகாம்களை அகற்றுகின்றது என்று அரசு மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிக்கின்றேன்.

கொஸ்கம வெடிப்புச் சம்பவமானது, பாதுகாப்பு படைகளின் மனோபலம் குன்றியதால் நிகழ்ந்தது என்று தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார். அவ்வாறான ஒரு வெடிப்பு நிகழ்வு இடம்பெற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவல்ல. இதற்கு முன்னரும், இதனிலும் பார்க்க சக்தி வாய்ந்த வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றது. எவரேனும் அவ்வாறான ஒரு விளக்கத்தை முன்வைப்பாராயின் அது அவரது சிந்தனை பற்றி ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும் - என்றார். (ற-ஐ-5)

# மகிந்தவின் புதிய கட்சியின் தேசிய மாநாடு ஜூலையில்

கொழும்பு, ஜூன் 29

மகிந்த ராஜபக்ச தலைமையிலான புதிய கட்சியின் முதலாவது தேசிய மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை முன்னாள் அமை ச்சர் பசில் ராஜபக்சவே மேற்கொண்டார்.

பசிலின் தலையீட்டை கூட்டு எதிரணியில் உள்ளவர்கள் பலர் விரும்பவில்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு மகிந்த ராஜபக்ச தலைமையில் புதிய அரசியல் கட்சி ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை கூட்டு எதிரணியினர் முன்னெடுத்து வருகின்றனர். கிராம, நகர மட்டங்களில் மக்களை சந்தித்து புதிய கட்சிக்கான உத்தியோகத்தர்கள் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய கட்சிகள் அமைக்கும் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவும் இந்தச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். பசிலின் தலையீட்டை கூட்டு எதிரணியைச்சேர்ந்த பலர் விரும்பாது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

புதிய கட்சியின் முதலாவது தேசிய மாநாடு அடுத்த மாதம் கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று அறிய முடிகிறது. (ற-ஐ-5)

# வேப்பங்குளம் இளைஞர்களால் சிரமதானப்பணி முன்னெடுப்பு

வவுனியா, ஜூன் 29

சமூக சேவையை நோக்கமாகக் கொண்டு வவுனியா வேப்பங்குளத்தைச் சேர்ந்த இளைஞர்களால் வவுனியா தட்சனன் குளம் மற்றும் குளத்தை அண்டிய வீதிகள் கடந்த வாரம் துப்புரவாக்கப்பட்டன.

வவுனியா தட்சனன் குளம் மற்றும் குளத்தை அண்டிய வீதியானமன்னார்-பண்டாரிக்குளத்தைஇணைக்கும் வீதி ஆகியவற்றில் பற்றைகள் படர்ந்து போக்குவரத்துக்குத் தடையை ஏற்படுத்தின.



பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலர் இந்த வீதியைப் பயன்படுத்துவதால், வவுனியா வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பற்றைகளை வெட்டி அகற்றி சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

தட்சனன் குளத்தில் பொதுமக்களுடைய வீட்டுக் கழிவுகள் காணப்பட்டதால், குளத்தையும் இளைஞர்கள் துப்புரவு செய்தனர்.

சமூக சேவையை மையமாகக் கொண்டே இந்த சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களே இந்த வீதியை அதிகமாக பயன்படுத்துகின்றனர். அவர்களுடைய பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளுக்காகவே சிரமதானப் பணிகளை மேற்கொள்கின்றோம். இங்கு உள்ள இந்தக் குளம் மிகவும் கழிவுகள் கொட்டப்பட்டு அசுத்தமாகக் காணப்படுகின்றது. வீட்டுக்கழிவுகள் உட்பட குப்பைகள் போடுவதை பொது மக்கள் நிறுத்த வேண்டும் - என்று சிரமதானத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவித்தனர். (ற-ஐ-21)

## அனைவருக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை

"நாட்டுக்கு ஒளியேற்றுவோம்" என்ற திட்டத்தின் கீழ், வடமராட்சி கிழக்கில் மின் விநியோகத்தை இதுவரைக்கும் பெறாதவர்களுக்கு, மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மின்சார விநியோகத்தை பெற்றுக் கொள்ளாத மக்கள், கிராம சேவகரிடம் இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, மின்சாரத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என்று பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப்பிரதேசத்தில்சகலருக்கும் மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதற்கு பிரதேச செயலகம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மீளக் குடியமர்ந்த பிரதேசங்களிலும் மின்சாரத்தை இந்தத் திட்டத்தின் கீழ் விநியோகிப்பதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற-ஐ-17)

# சாதனை புரிந்த மாணவர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிப்பு

தென்மராட்சி, ஜூன் 29

மட்டுவில்தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ் வித்தியாலயத்தில் விளையாட்டு நிகழ்வுகளில், சாதனை புரிந்த வித்தியாலய மாணவர்களைக் கௌரவிக்கும் வர்ண விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை வித்தியாலய அரங்கில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி பி.கிருஷ்ணபிள்ளையும், கௌரவ விருந்தினராக வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.ஶ்ரீகாந்தாவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை போட்டிகளில் சாதனை படைத்த தடகள வீர.வீராங் கனைகளுக்கான வர்ண விருதுகளை பிரதம விருந்தினரும், சாதனைகள் படைத்த வித்தியாலய கரப்பந்தாட்ட அணிகளின் வீரர்களுக்கான விருதுகளை சிறப்பு விருந்தின ரும், கௌரவ விருந்தினரும் வழங்கினர்.

தென்மராட்சிக் கல்வி வல யத்தில் கடந்த 1998 தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரை உடற் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும், உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி யாழ். கல்வி வலயத்துக்கு இடமாற்றலாகிச் சென்று ஓய்வு பெற்ற கந்தையா குமாரசாமிக்கு வர்ண விருது வழங்கப்பட்டது. (ற-ஐ-9)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சிவசுப்பிரமணியம் நேதாஜி
BFA(Hons),PGDE, SLPS III
எம் கல்விச் சாலை தன்னில்
சித்திரக்கலை ஆசானாய்
சிறப்புடனே பணியாற்றி
நிர்வாகக் கடமையிலும்
நும் திறனை வெளிக் கொணர்ந்தீர்
அதிபராய்ப் பதவி உயர்வு பெற்றநீர்
மென்மேலும் உயர் பதவிகள் பல பெற்று
நிறைவாக வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நல்லுறவு மன்றம்
யா/நவாலி மகா வித்தியாலயம்.

மன மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்
மூன்றாம் தரம் SLPS III
திரு.யேசுதாசன் மகிந்தன் (மட்டுவில்)
திரு. இளயதம்பி இலங்கேஸ்வரன் (நவாலி)
திரு. தம்பிமுத்து றமேஸ் (நவாலி)
செல்வி சுகந்தி அருளானந்தம் (நவாலி)
செல்வி மோகனதாஸ் செல்வமகள் (நவாலி)
ஆகியோர் 09.05.2016 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.
இவர்களை மென்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
திரு.திருமதி லியோன் புஸ்பராணி
ஆரோக்கிய வாச வைத்தியசாலை (நவாலி)

உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



இலங்கை கணக்காளர் சேவைக்கு பதவி உயர்வு பெற்ற கணக்கியல் ஆசிரியர்
திரு. கணேசலிங்கம் தர்மசீலன்



இலங்கை அதிபர் சேவைக்கு பதவியுயர்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியர்
திரு. கிருஷ்ணசாமி சந்திரகுமார்

எமது கல்லூரியில் ஆசிரியர்களாக பணியாற்றி பதவியுயர்வுகள் பெற்ற ஆசிரியர்கள் இருவரையும் மனமகிழ்ந்து வாழ்த்தி நிற்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனுக்கு பரப்புரை செய்ய பிரதிநிதிகள் சென்றமை தவறு

## டியூ குணசேகர கூறுகின்றார்

பிரிட்டனில் நடத்தப்பட்ட கருத்து வாக்கெடுப்புக்கு பொது நிதியைச் செலவிட்டு, பரப்புரை செய்வதற்காக பிரதிநிதிகளை அனுப்ப அரசுக்கு நெறிமுறை உரிமை எதுவும் கிடையாது. இவ்வாறு முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார். அவர் தெரிவித்துள்ளதாவது-

பொது நிதியைப் பயன்படுத்தி பிரிட்டனில் நடந்த கருத்து வாக்கெடுப்புத் தொடர்பாக பரப்புரை செய்வதற்கு இரண்டு பிரதிநிதிகளை அனுப்பியிருந்தார் பிரதமர் ரணில். இது இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையைப் பொறுத்த வரையில் ஒரு மோசமான முன்னுதாரணம். எதிர்காலத்தில் இலங்கையில் நடக்கும் தேர்தல்களில் பரப்புரை செய்வதற்கு பிரித்தானியர்களுக்கும் நாம் அனுமதி கொடுக்க வேண்டியிருக்கும்.- என்றார். (ற-ஐ-5)

# அதாவுல்லாவுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு ஜனாதிபதி முடிவு!

கொழும்பு, ஜூன் 29

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா உள்வாங்கப்பட்டு, அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என்று நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

அதற்காக இராஜாங்க அமைச்சர் ஏ.வி.எம்.பௌஸி தனது பதவியிலிருந்து விலகவுள்ளார். அவருக்கு மேல்மாகாண ஆளுநர் அல்லது வெளிநாட்டுத் தூதுவர் பதவி வழங்கப்படலாம் என்று அறிய முடிகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய காங்கிரஸ், கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது, மகிந்த ராஜபக்சவுக்கு தனது ஆதரவை வழங்கியிருந்தது. பொதுத்தேர்தலில் அதாவுல்லா தரப்பால் ஓர் ஆசனத்தையேனும் கைப்பற்ற முடியாமல் போனது. இதையடுத்து மைத்திரி அணியில் இணைவதற்கு பச்சைக்கொடி காட்டப்பட்டது.

அதாவுல்லாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுவதற்கு சிலர் போர்க்கொடி தூக்கியிருந்தாலும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன ஐக்கிய தேசியக் கட்சியுடன் சங்கமித்துள்ளதால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பலப்படுத்தும் நோக்கிலேயே தேசிய காங்கிரஸுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

ஹிஸ்புல்லா, அதாவுல்லா உட்பட மேலும் சில முஸ்லிம் தலைவர்களை நம்பியே எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி களமிறங்கவுள்ளது.

அதாவுல்லாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கு வதற்காக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதற்கு பௌஸி இணங்கியுள்ளார். பௌஸி விரும்பினால் மாத்திரமே பதவியைத் துறக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார் என்றும் ஜனாதி பதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரி வித்தன. இதற்குப் பதிலீடாக மேல்மாகாண ஆளுநர் அல்லது வெளிநாட்டுத் தூதுவர் பதவியொன்று அவருக்கு வழங்கப்படலாம். பௌஸியின் புதல்வருக்கும் முக்கிய பதவியொன்று கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற-ஐ-5)

# பரிசளிப்பு விழா

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி ச.வேணுகா தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் கலந்து கொள்வார். (ற-ஐ-ரி)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 31.05.2016 அன்று இறையடி சேர்ந்த

அமரர் அப்பர் உமாபதிசிவம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (30.06.2016) வியாழக்கிழமை கச்சாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால்

அத்தருணம் தாங்கள் தங்களது குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம். அத்துடன் எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாக வந்து ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக் கும் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான எமது நன்றி அறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம். (Gen/2468) (11,17,19) குடும்பத்தினர்.

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலிப்பூக்கள்



திருமதி
செல்லம்மா கணபதிப்பிள்ளை

தாயின் மடியில்
13.12.1936

தெய்வ பாதத்தில்
29.06.2003

தெய்வத்தினுள் சேர்ந்த தெய்வமே !!
அன்னையே ! அம்மாவே ! பிரிவுத்துயர்
என்னும் தீ எப்பவும் ஆறாதம்மா
என்றுமே உங்களை மறவோம் தாயே !
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.26/2, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
என்றும் மறவாத குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு



திருமதி
பரமேஸ்வரி விக்னேஸ்வரமூர்த்தி
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - மந்திகை)

மலர்வு 17.07.1950
உதிர்வு 11.07.2015

தாய் என்ற சொல்லின் தனிநிகராய் விளங்கி
ஊர் போற்ற என்றும் உண்மையுடன் வாழ்ந்து
கனிவான உங்கள் வார்த்தைகளால் இனிதாகப் பணியாற்றி
மண்ணகம் விட்டுச் சென்று ஆண்டு ஒன்று ஆனதுவோ
எம்மை விட்டுப் போனது - உங்கள் உடல் மட்டும் தானம்மா,
எம் வெற்றியின் சுவடுகளில் உங்கள் உயிர் நின்று வாழ்த்துதம்மா
ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
எம் நினைவுகளில் என்றும் நீங்காது வாழ்வீர்கள் அம்மா......
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம் .
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.
பெல்லாவத்தை,
புலோலி தெற்கு, புலோலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் எச்.ஐ.வி. பரிசோதனை 75 முகாம்களில் நேற்று நடத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்.மாவட்டத்தில் "இன்றே பரிசோதியுங்கள்" எனும் தொனிப் பொருளில் நேற்று எச்.ஐ.வி. பரிசோதனை 75 இடங்களில் முன்னெடுக்கப்பட்டது. பிற்பகல் வரை சுமார் 5 ஆயிரம் பேர் பரிசோதனை செய்து கொண்டனர்.




இவ்வாறு யாழ்ப்பாண பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி திருமதி தாரணி குருபரன் தெரிவித்தார்.
தேசிய எச்.ஐ.வி. பரிசோதனைத் தினத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.
யாழ்.போதனா வைத்திய சாலையிலும் மற்றும் பல இடங்களிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலருக்கும் விசேட எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
போதனா வைத்தியசாலை பாலியல்தடுப்புநோய் சிகிச்சைப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.
வடபகுதியில் எச்.ஐ.வி. தொற்று ஏற்படக்கூடிய ஆபத்து அதிகளில் காணப்படுவதால் பரிசோதனை செயற்றிட்டத்தையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.
யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் பரிசோதனை முகாம்கள் அமைக்கப்பட்டன. ஆரம்ப நிகழ்வு யாழ் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.
யாழ்.மாவட்டத்தில் இதுவரை எச்.ஐ.வி.தொற்றுக்குள்ளான 25 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். முன்னைய வருடங்களில் இனங்காணப்பட்டவர்களுடன், 2014 ஆம் ஆண்டு 12 பேர் புதிதாக இனங்காணப்பட்டனர். 2015 ஆம் ஆண்டு ஒருவரும் இந்த வருடம் 4 பேரும் புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர்.
2014ஆம் ஆண்டு இனங்காணப்பட்டவர்களில் 2 பேரும் இந்த வருடம் இனங்காணப்பட்டவர்களில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். அவர்கள் பல்வேறு நோய்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டு தாமதமாக வைத்தியசாலைக்கு வந்தவர்களாவர். அவர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தி பரிசோதனை அறிக்கை வருவதற்கிடையில் – அதாவது அவர்கள் வைத்தியசாலைக்கு வந்த சில நாள்களில் உயிரிழந்தனர். அவர்கள் எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தமை பின்னரே தெரிய வந்தது.
யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது 21 பேர் இந்நோய்க்கான சிகிச்சை பெற்று வருகின்றனர்.
நாடளாவிய ரீதியில் இதுவரை 2 ஆயிரத்து 377 பேர் எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை பதிவுகள் ஊடாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 376 பேர் உயிரிழந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 78 பேர் குழந்தைகள். அவர்களுக்கு தாயின் பாலூட்டலால் தொற்று ஏற்பட்டுள்ளது.– என்று மருத்துவர் தாரணி தெரிவித்தார்.
நேற்று 75 இடங்களில் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டாலும், சகலரும் அதில் பரிசோதனை செய்துகொள்ள முடிந்திருக்காது. இதுவரை பரிசோதனை செய்யாதவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவில் காலை 8.30தொடக்கம்மாலை4 மணி வரை எச்.ஐ.வி. உள்ளதா என்பதனைக் கண்டறிவதற்கான குருதிப் பரிசோதனையை மேற்கொள்ள முடியும்.
யார் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறாரோ அவ்ரது பரிசோதனை அறிக்கையை அவர் மட்டுமே பார்க்க முடியும். உறவினர்களோ, நண்பர்களோ எவரும் பார்க்க முடியாது. பரிசோதனைக்கு உட்படுபவர்களது இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 377 பேர் என்று பதிவு செய்யப்பட்ட தரவுகள் கூறுகின்றபோதும், அந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 200 தொடக்கம் 5 ஆயிரத்து 600 வரை இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. (ற-4,10)

## காணிகளை பதிவு செய்யுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்து

முல்லைத்தீவு, ஜூன் 29
உரத்துக்கான பணத்தை பெற்றுகொள்ள வேண்டுமானால் விவசாயிகளுடைய காணிகளை பதிவு செய்ய வேண்டும் என்று ஒட்டு சுட்டான் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.
ஒட்டுசுட்டான் கம நலசேவை நிலையத்தின் காணி இடாப்புத் திருத்தம் தற்போது நடைப் பெறுகின்றது. அந்தந்த கிராம கமக்கார அமைப்பின் அனுசரணையுடன் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
காணி இடாப்பு திருத்தங்களின் போது, விவசாயிகள் அனைவரும் தத்தமது காணிகளைப் பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் உரத்துக்கான பணத்தை இலகுவாக பெற முடியும்.– என்று அவர் தெரிவித்தார். (ற-ஜ-500)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட, ஓட்டோ உரிமையாளர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள், வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறும் என்று மாகாண போக்குவரத்துப் பிரிவு ஆணையாளர் கு.பிரபாகரமூர்த்தி தெரிவித்தார். (ற-ஜ-9)

BAJAJ RE THREE WHEELER

இன்றைய காலக்கட்டத்தில் சிறந்த முதலீடு

கையில் பணம் கொஞ்சம் கிடைத்தவுடன் அதனை வளமான ஒன்றில் முதலீடு செய்வதாகும்...
எவ்வளவுதான் முதலீடுகளில் முதலீடு செய்தாலும் பலன் இல்லை அவை எங்களுக்கு சிறந்த பெறுபேறுகளை தராவிட்டால்...
இரு தடவை யோசிக்காமல் உங்கள் கையில் உள்ள பணத்தினை
பஜாஜ் முச்சக்கரவண்டி ஒன்றிற்கு முதலீடு செய்யுங்கள்...



டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி லிமிட்டட்
விலை ரூபா 638,500 /= இவ்விலை முன்னறிவித்தலின்றி மாறுபடலாம். நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
0114 700 600 | info@dpmco.com | www.dpmco.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணியில் பிரதி செவ்வாய் பற்சிகிச்சை

வரணி, ஜூன் 29

வரணி பிரதேச வைத்திய சாலையில் பற் சிகிச்சை வழங்க விசேடமாக பிரதி செவ்வாய்க் கிழமை தோறும் பல் மருத்துவர் வருகிறார். காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பல் மருத்துவரின் சேவை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பற்சிகிச்சை நிலையம் வேள்ட் விசன் நிறுவனத்தின் சுமார் 30 லட்சம் ரூபா மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது. அண்மையில் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள மேலதிக பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (ற-ஜ-122)

## சட்டவிரோதமாக மின் உபயோகித்த கச்சாய் வாசிக்கு தண்டம்

தென்மராட்சி, ஜூன் 29

சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற கச்சாய் வாசிக்கு, சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மின்சார சபையால் விதிக்கப்படும் பாவனைக் கட்டணத்தை செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் கச்சாய் பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது, மின்சார சபையின் அனுமதியின்றி மின்சாரம் பெற்ற ஒருவரைக் கைது செய்து நேற்று முன்தினம் வழக்குத்தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் தண்டம் விதித்தார். (ற-ஜ-9)

# இணைத்தலைவர்கள் இரணைதீவு செல்ல பாதுகாப்பு அனுமதி தேவை

## கடற்படையினர் விடாப்பிடி

யாழ்ப்பாணம், ஜூன் 29

இரணைதீவுக்கு இணைத் தலைவர்கள் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இரணைதீவில் தங்கி நின்று தொழில் செய்வதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்திருந்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் பேசப்பட்டது. இரணை தீவுக்கு நேரில் சென்று ஆராய்வது என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்கள் முடிவெடுத்திருந்தனர். ஜூன் 26 ஆம் திகதி அங்கு சென்று பார்வையிடத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அன்று இணைத் தலைவர்கள் இரணைதீவுக்குச் செல்லவில்லை. அந்தப் பகுதி மக்கள் இணைத் தலைவர்களை கடுமையாக விமர்சித்திருந்தனர்.

இணைத்தலைவர்கள் இரணை தீவுக்குச் செல்வதற்கு பூநகரி பிரதேச செயலாளர் ஊடாக கடற்படையினரிடம் வேண்டுகோள் முன்வைத்தனர். கடற்படையினர், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று வந்தால் மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்று பதிலளித்துள்ளனர்.

இணைத் தலைவர்கள், தாம் மக்கள் பிரதிநிதிகள் என்பதை மீளத் தெரியப்படுத்தியபோதும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்றே கடற்படையினரால் பதிலளிக்கப்பட்டது.

'நாட்டின் ஒரு பகுதிக்குச் செல்வதற்கு இன்னமும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கேட்கின்றார்கள். நான் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதைத் தெரியப்படுத்திய பின்னரும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்கின்றார்கள். இதனால்தான் இரணைதீவுக்கு குறித்த தினத்தில் செல்ல முடியவில்லை' - என்று இணைத் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார். (ற-ஜ-5-101)

## அறுகுவெளியில் கொட்டப்படும் எச்சங்களால் துர்நாற்றம்

தென்மராட்சி, ஜூன் 29

கேரதீவு அறுகுவெளிப் பகுதியில் இரவு வேளைகளில் கால்நடைகளின் எச்சங்கள் கொட்டப்படுகின்றன. அதனால் எழும் துர்நாற்றத்தால் அந்தப் பகுதிக் குடியிருப்பாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இரவிரவாக வாகனங்களில் கொண்டு வரப்படும் மிருகங்களின் எச்சங்கள் அறுகுவெளி கடலேரியை அண்டிய பகுதிகளில் கொட்டப்படுகின்றன. அதனால் அயலில் உள்ள குடும்பங்கள் அதிலிருந்து எழும் துர்நாற்றத்தைச் சகிக்க முடியாமல் தவிக்கின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

# இருப்பவர்கள் இல்லாதோரின் இடர்களை களைய வேண்டும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இருப்போர் இல்லாதோரின் இடர்களைக் களைய முன்வர வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய 'மணிமேகலை உணவுக் கூடம்' திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

இன்று தமிழ் மக்களிடையே கொடுக்கும் பழக்கம், கொடை அளிக்கும் பழக்கமானவை முக்கியத்துவம் பெற்று வருகின்றன. வெளிநாட்டில் உள்ளவர்கள் இங்குள்ளவர்கள் உருப்படியாகச செலவு செய்யும் படியாகக் கொடைகளை வழங்க வேண்டும். வெறும் ஆடம்பரச் செலவுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. எம்மைச் சுற்றித் தேவைகள் தாண்டவமாடுகின்றன. வறுமை வாட்டுகின்றது. இருப்போர் இல்லாதோரின் இடர்களைக் களைய முன்வர வேண்டும்.

நாங்கள் 'உதவிப் பாலம்' என்ற ஒரு கொடை அலகை உருவாக்கியுள்ளோம். பெரிய கொடைகளை எதிர் பாராமல் எத்துணை சிறிய கொடையாக இருந்தாலும் மக்கள் மனமுவந்து தரும் உதவிகளை அல்லற்படும் மக்களுக்குப் பிரித்துக் கொடுத்து அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி வருகின்றோம். நாங்கள் கொடுத்த ஒரு சிறு தொகைப் பணத்தி ஒரு வயது முதிர்ந்த அம்மையார், அதுவும் உற்றார் உறவினர்களைப் போரில் பறிகொடுத்த ஒருவர், தனது வாழ்க்கையை மறுசீரமைப்புச் செய்து கொண்டார்.

புதன்கிழமைகளில் மக்கள் என்னை நாடி வருகின்றார்கள். அன்று குறைகேட்கும் நாள். இந்த அம்மையார் ஒருசிறு பணத் தொகையைக் கேட்டார். நீங்கள் எனக்குக் கொடை உதவி செய்யத் தேவையில்லை. கடனாகவே தாருங்கள் என்றார். பணத்தைப் பெற்றுவிட்டுப் பல்டி அடிக்கும் பலரை நான் பார்த்துள்ளேன். அந்த அம்மையாரின் கண்களில் ஓர் ஒளி தெரிந்தது. வாக்கில் தெளிவிருந்தது. கேட்டதைக் கொடுத்தேன்.

சுமார் 6 மாதம் கழித்து வந்து 'இந்தாருங்கள் உங்கள் பணம்' என்றார். என்ன நடந்தது என்று கேட்டேன். நீங்கள் தந்த பணத்துக்கு ஏலம், கறுவா, கராம்பு, வெந்தயம் போன்ற உணவில் சேர்க்கும் மூலிகை உணவுகளை வாங்கினேன். அவற்றைச் சிறுசிறு பக்கெற்றுக்கள் ஆக்கினேன். பாடசாலைகளில் சிறிய இடைவேளை நேரத்தைப் பயன்படுத்தி கல்லூரிகளில், பாடசாலைகளில் இந்தப் பொதிகளை விற்றேன். அதிபர்களைக் கண்டு போரில் பாதிக்கப்பட்ட என்னை நேர்மையுடன் வாழவழி விடுங்கள் என்று கேட்டேன். பலர் எனக்கு அனுமதி அளித்தார்கள். அந்தவாறு விற்றதில் தான் என் கடனை அடைக்க முடிந்தது. என்றார். நான் திருப்பிவாங்கவில்லை. அவரின் ஊக்கத்துக்கான பரிசு என்று கூறி அனுப்பி விட்டேன். இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுப்பதால் இடர்பட்ட எங்கள் மக்கள் வாழ்வில் ஒளி ஏற்ற முடியும் - என்றார். (ற-ஜ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையிலேயே நிர்மாணியுங்கள்

## வவுனியா கமக்கார அமைப்புக்கள் நேற்று போராட்டம்

வவுனியா, ஜூன் 29
பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்திலேயே அமைக்கப்பட வேண்டும் என்ற வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு எதிராக, வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.



வவுனியா கமக்கார அமைப்புக்களின் ஒழுங்கமைப்பில் இந்தப் போராட்டம் நடத் தப்பட்டது. பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையிலேயே அமைய வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.
வவுனியா காமினி வித்தியாலயத்தில் இந்தப் போராட்டம் ஆரம்பமானது. மாவட்டச் செயலகத்தில் முடிவடைந்தது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டார். வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திராசாவும் பங்கெடுத்தார்.
பெருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு சில இடங்கள் தெரிவு செய்யப்பட்டன. அவற்றில் தாண்டிக்குளமும் ஒன்று. தாண்டிக்குளத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம், விவசாயப் பண்ணை, அத்துடன் விவசாயக் கல்லூரியும் அந்தச் சூழலில் அமைந்துள்ளது. சுற்றுப்புறச் சூழலில் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். இவர்களின் புறச் சுகாதாரம் பாதிக்கப்படும். எதிர்காலத்தில் இங்கே விஸ்தரிப்புக்கள் மேற்கொள்ள முடியாது. மாவட்டத்தின் பசுமையான இடமாக தாண்டிக்குளம் மாத்திரமே உண்டு. அதனால் இங்கு பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுவதை நிராகரிக்கின்றோம். ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு போதியளவு நிலப்பரப்பு உள்ளது. சகல மாவட்டங்களையும் ஒருங்கிணைக்கக் கூடிய போக்குவரத்து வசதியும் உள்ளது. சூழல் மாசடையாது. ஏற்றுமதிக்குரிய உற்பத்தி, உணவுப் பொருள்கள் பதனிடல், தொழில்வாய்ப்புமையங்களை முன்னிலைப்படுத்தியும் எதிர்காலத்தில் வளமான நகராக ஓமந்தையை மாற்ற முடியும். இந்த நம்பிக்கையை முன்னிலைப்படுத்தி ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையத்தை அமையுங்கள்– என்று கமக்கார அமைப் புக் களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
இது தொடர்பான மனு ஒன்றையும் மாவட்டத்தின் மேலதிகச் செயலாளர் திரேஸ்குமாரிடம் கையளித்தனர்.
பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்தில் அமையவேண்டும் என்ற வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கத்தினர் நேற்று முன்தினம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.
முதலமைச்சருடன் இந்த விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய அவர்கள் போராட்டத்தை தற்காலிகமாக முடித்துக் கொண்டனர். (ற-ஐ-5-21)



நேற்றுமுன்தினம்யப்பானிய குழுவினர் கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் மேற்கொள்ளப்படும் கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகளைப் பார்வையிட்டனர். கண்ணி வெடிகள் தொடர்பான விளக்கங்களையும் கேட்டறிந்தனர். அண்மையில் அமெரிக்க அதிகாரிகாரிகளும் இந்த இடங் களைப் பார்வையிட்டனர். (ற-ஐ-ரி3)

## முல்லைத்தீவு டிப்போ பஸ் மீது விசுவமடுவில் கல் வீச்சு

முல்லைத்தீவு, ஜூன் 29
முல்லைத்தீவு டிப்போவுக்குச் சொந்தமான அரச பஸ் மீது விசுவமடுப்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு சாலை முகாமையாளர் தெரிவித்தார்.
இணைந்த போக்குவரத்து அட்டவணையை நடமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி நேற்று முன்தினம் வட இலங்கை தனியார் பஸ் சங்கம் சேவைப் புறக்கணிப்புச் செய்தது. மக்கள் பாதிப்படையாதவாறு எமது சேவைகளை நாம் முடிந்தளவு செய்து வந்தோம். எங்களது சாலைக்குச் சொந்தமான 22 பஸ்களை பயன்படுத்தி முடிந்தளவு பயணிகள் சிரமமின்றி பயணத்தை மேற்கொள்வதற்கு முயற்சி மேற்கொண்டிருந்தோம்.
அதிகாலை முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்ற அரச பஸ் மீது விசுவமடு 12 ஆம் கட்டைச் சந்தியில் இனந்தெரியாதோரால் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த பஸ் சேதத்துக்கு உள்ளான போதும், தொடர்ந்து தனது சேவையை மேற்கொண்டு வருகின்றது.– என்று அவர் தெரிவித்தார்.
கல்வீச்சுத் தாக்குதல் தொடர்பாக, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பான விசாரணைகள் மேற் கொள்ளப்படுகின்றன என்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-21,ரி7)

## சட்டவிரோதமாக கடல் அட்டை பிடித்த மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 29
பருத்தித்துறைக் கடற்பரப்பில் அனுமதிப் பத்திரம் இன்றி கடல் அட்டை பிடித்த மூன்று மீனவர்கள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள்மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக் களப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.
தென்னிலங்கை நிறுவனம் ஒன்றின் பெயரில், அனுமதி பெற்ற நிறுவனத்துக்காக பருத்தித்துறைக் கடலில் அட்டை பிடித்துக் கொண்டிருந்த படகை கடற்படையினர் சோதனையிட்டபோது அவர்களிடம் அனுமதிப்பத்திரம் இல்லை. குறித்த மூவரையும் கைது செய்த கடற்படையினர் எம்மிடம் கையளித்தனர்.
கையளிக்கப்பட்டவர்களில் ஒருவர் மன்னார் மாவட்டத்தையும், இருவர் தென்பகுதியையும் சேர்ந்தவர்கள். இவர்கள் மூவரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று நீரியல் வளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-ஐ-10)

## திருநாள் வழிபாடு

தென்மராட்சி, ஜூன் 29
சாவகச்சேரி கத்தோலிக்க பங்கு மக்களால் மீசாலையில் அமைக்கப்பட்ட மருதமடு செப மாலை மாதா ஆலய திருநாள் வழிபாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
எதிர் வரும் 3 ஆம் திகதி காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலி வழிபாடு இடம்பெறும். (ற-ஐ-9)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சர்வதேச நீதிபதிகள் விவகாரத்தில் கூட்டமைப்பின் அழுத்தம் போதாது

## தமிழர் மனித உரிமை மையம் சுட்டிக்காட்டு

ஜெனிவா, ஜூன் 29

போர்க் குற்றம் தொடர்பில் அரசு நடத்தவுள்ள விசாரணைப் பொறிமுறையில், சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்க வேண்டும். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தங்கள் போதுமானதாக இல்லை.

இவ்வாறு பிரான்ஸை தலைமையகமாகக் கொண்ட தமிழர் மனித உரிமை மையத்தின் செயலாளர் ச.வி.கிருபாகரன் தெரிவித்தர்.

ஜெனிவா மனித உரிமை சபையின் 32 ஆவது கூட்டத் தொடர் தற்போது நடைபெறுகின்றது. பிரதான கூட்டத் தொடருக்குப் புறம் பாக பக்க நிகழ்வாக உப குழு கூட்டங்களும் நடத்தப்படுகின்றன. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மிகவும் திறமையான முறையில் பன்னாடுகளுக்கும் சென்று இந்த விடயத்தை அழுத்தம் திருத்தமாக கூறி வருகின்றார். ஆனால் கூட்டமைப்பின் நான்கு கட்சிகளினதும் பிரதிநிதிகள் ஒன்றாக சேர்ந்து அழுத்தம் வெளியிடுவதே சிறப்பாக இருக்கும்.

> ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைன் இலங்கை தொடர்பில் வெளியிடவுள்ள வாய்மூல அறிக்கையானது அரசுக்கு மிகப் பெரிய அழுத்தங் களை கொடுப்பதாக அமைய வேண்டும். சர்வதேச நீதிபதிகள் உள்ளக விசாரணை பொறி முறையில் உள்ளடங்க வேண்டும் என்ற அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைன் இலங்கை தொடர்பில் வெளியிடவுள்ள வாய்மூல அறிக்கையானது, அரசுக்கு மிகப் பெரிய அழுத்தங்களை கொடுப்பதாக அமைய வேண்டும். சர்வதேச நீதிபதிகள் உள்ளக விசாரணை பொறிமுறையில் உள்ளடங்க வேண்டும் என்ற அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சர்வதேச நீதிபதிகள் என்ற விடயத்தை எந்தவோர் இடத்திலும் மறுக்கவில்லை. புலம்பெயர் அமைப்புக்களாகிய நாங்கள் அதனை உலகளவில் வலியுறுத்தி வருகிறோம். ஐ.நா. உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இந்த விடயத்தை கூறிவருகிறோம்.

தற்போதைய நிலைமையில் புலம்பெயர் அமைப்புக்கள் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். அதன் மூலமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியும். புலம் பெயர் அமைப்புக்கள் இந்த விடயத்தில் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். முன்னர் காணப்பட்ட ஒற்றுமையை தற்போது காண முடியவில்லை.

இலங்கை அரசு நல்லிணக்க குழுவை அமைத்து செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. அவை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். இந்த முறை வாய்மூல அறிக்கை மென்மைப் போக்கை கொண்டிருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அவ்வாறு அமைந்தாலும் கூட ஹுசை னின் இறுதி அறிக்கையானது மிகவும் அழுத்தம் கொடுப்பதாக அமைய வேண்டும். இவ்வாறு எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ற-ஐ-5)

---

# தகவல் அறியும் சட்டத்தால் மக்கள் உரிமை வலுப்படும்

## பிரதியமைச்சர் மனுச நாணயக்கார சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 29

தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர்களுக்கு தண்டனை வழங்க முடியும் எனப் பரவிய செய்திகளில் உண்மையில்லை. இந்தச் சட்டத்தின் மூலம் மக்களின் தகவல் அறியும் உரிமை மேலும் வலுப்படும்.

இவ்வாறு பிரதியமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்தார்.

காலி பிட்டிகல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

நாட்டுக்கு தேவையான அரசமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்ளவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கூட்டு அரசை ஏற்படுத்தின.

அரசமைப்பின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முறையின் அதிகாரங்கள் மற்றும் தேர்தல் முறையில் திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகள் தற்போது நடைபெறுகின்றன.

இவைக்கு இடையே மக்களுக்கு பொதுவாக முக்கியமான சட்ட மூலம் ஒன்றை நிறைவேற்ற எமக்கு முடிந்துள்ளது.

பல வருடங்களாக ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்த தகவல் அறியும் சட்டத்தை எம்மால் நிறைவேற்ற முடிந்தது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்துள்ள தேசிய அரசு காரணமாகவே, இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர் இந்த சட்டத்தை நிறைவேற்ற முடிந்தது.

இந்தச் சட்ட மூலத்தால் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் பயன் கிடைக்காது. கிராமத்தில் உள்ளவர்கள் எவரும் சென்று தற்போது அரசின் பணிகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். சிலர் இந்தச் சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர்களுக்குதண்டனை வழங்கலாம் என்று தெரிவித்து வருகின்றனர். இதனூடாக அவ்வாறு எதனையும் செய்ய முடியாது.- என்றார்.(ற-ஐ-5)

---

# பேரழிவு ஆயுதப் பரம்பலை தடுப்பது தொடர்பில் பயிற்சி

## அமெரிக்கா வழங்கியது



கொழும்பு, ஜூன் 29

பேரழிவு ஆயுதங்களின் பரவலைத் தடுப்பது தொடர்பாக பாதுகாப்பு மற்றும் சிவில் அதிகாரிகளுக்கு அமெரிக்கா பயிற்சிகளை வழங்கியது.

கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரையான ஐந்து நாள்கள், கொழும்பில் இது தொடர்பான கருத்தரங்கு அமெரிக்காவால் நடத்தப்பட்டது.

துறைமுக அதிகாரசபை, பொலிஸார், கடற்படை, கடலோரப் பொலிஸ் அதிகாரிகள் அதில் பங்குபற்றினர்.

பன்னாட்டு பேரழிவு ஆயுதங்களின் பரவலைத் தடுக்கும் திட்டத்தைச் சேர்ந்த, அமெரிக்க இராணுவ நிபுணர்கள்- எல்லைப் பாதுகாப்பு, தொழில் நுட்பம், அச்சுறுத்தல் மதிப்பீடு போன்றதொனிப்பொருள்களில் விளக்கங்களை வழங்கினர்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பை வலுப்படுத்துவதை உள்ளடக்கிய இலங்கை அமெரிக்க ஒத்துழைப்பை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ற-ஐ-5)

---

# புகையிலை நிறுவனங்களுக்கான வரியை அதிகரிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 29

புகையிலை உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் வரி அறவீட்டை 90 வீதமாக உயர்த்துவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை வெகு விரைவில் சமர்ப்பிக்கவுள்ளேன் என்று அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும், சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கடந்த வாரம் அரச தகவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களைத் தெரிவிக்கும் ஊடகச் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

தற்போது புகையிலை உற்பத்தி நிறு வனங்களிடமிருந்து 67 வீதமான வரியே அறவிடப்படுகின்றது. அவர்கள் விலைகளை அதிகரித் திருப்பதால் இன்று வரை 72 வீதமாக வரி உயர்வடைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவினுடைய காலத்தில் 90 வீதம் வரையிலும் வரி விதிப்பு செய்யப்பட்டது. புகையிலை நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படும் வரியை 90 வீதமாக உயர்த்த அமைச்சரவைப்பத்திரத்தை முன்வைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். வரி அறவீட்டின் பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் சுகாதார சேவைக்கு விதிக்கப்பட்டிருக்கும் அனைத்து பெறுமதி சேர் வரிகளையும் நீக்குவதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

எதிர்காலத்தில் வைத்தியசாலைகளில் இருந்து அறவிடப்படும் பெறுமதி சேர் வரியை நீக்குவது தொடர்பான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் - என்றார். (ற-ஐ-ரி2,22)

---

# வீடுகளை இடிக்க முயன்றதால் புளுமெண்டலில் பதற்றம்

கொழும்பு, ஜூன் 29

புளுமெண்டல் பகுதியில் சட்ட விரோதமாக வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த அதிகாரிகள் அவற்றை இடிக்க முற்பட்டனர். அந்தப் பகுதி மக்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டதால் அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டனர். அவர்களையும் மீறி வீடுகள் உடைக்கப்படும் இடத்தை நோக்கி மக்கள் செல்ல முயற்சித்தனர். பிரதேசத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

புளுமெண்டல் பகுதியில் பிரதான வீதியில் மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் காரணமாக போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளன.

சம்பவ இடத்துக்கு விரைந்த அமைச்சர் மனோ கணேசனும், நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மானும் பிரதேச மக்களை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இது எங்கள் பூமி. இந்த மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அரசுடன் நாம் பயணிக்க மாட்டோம்" என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்த மக்களுக்கு மாற்று வீடுகள் வழங்கப்பட வேண்டும். இதன் பின்னரே இவ்விடத்தில் உள்ள வீடுகள் உடைக்கப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் உயர் மட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதனையும் மீறி அரச அதிகாரிகள் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டார். (ற-ஐ-5)

---

# 10 கட்சிகளை ஆரம்பித்தாலும் சுதந்திரக் கட்சிக்கு சவாலில்லை

## துமிந்த திசாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 29

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இணைந்து 10 கட்சிகளை ஆரம்பித்தாலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அவை சவாலாக அமையாது. இவ்வாறு கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளமை மற்றும் இந்த அரசியல் நகர்வுகள் தேசிய அரசுக்குப் பெரிய அழுத்தங்களை விளைவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தபாயவின் உயிருக்கு தற்போதும் அச்சுறுத்தலாம்

"எனக்கு இன்னமும் உயிர் அச்சுறுத்தல் உள்ளது. இதனால் தொடர்ந்தும் எனக்கு இராணுவப் பாது காப்பு வழங்கப்பட வேண்டும்."

இவ்வாறு கோரியுள்ளார் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சில தரப்புகளால் எனது உயிருக்கு இன்னமும் அச்சுறுத்தல் இருக்கின்றது என்று நம்புகிறேன். எனது பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ள இராணுவத்தினருக்குப் பதிலாக, பொலிஸாரை ஈடுபடுத்த வேண்டாம் என்று பாதுகாப்புச் செயலரைக் கேட்டுக் கொள்கிறேன்." என்றார். (ற-ஐ-5)

# இலங்கைக்கு எதிராக தீர்மானம் மீண்டும் கொண்டுவரப்படலாம்

## நல்லிணக்கச் செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 29

"இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான நான்கு பொறி முறைகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னர் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடில் இலங்கைக்கு எதிராக அடுத்த ஆண்டு மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படக் கூடும்".

இவ்வாறு மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளரும், நல்லிணக்கச் செயலணியின் செயலாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அரசு இன்று பதில் வழங்கவுள்ளது. இந்த விடயத்தை இலங்கை எவ்வாறு கையாளப் போகின்றது என்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கை அரசு தான் இதுவரை மேற்கொண்ட சில விடயங்களைத் தெரிவிக்கக் கூடும். காணி விடுவிப்பு, புதிய அரச மைப்புத் தொடர்பான நடவடிக்கை, பயங்கரவாதத்தடைச்சட்டத்துக்கானமாற்று நடவடிக்கை, நல்லிணக்கப் பொறிமுறையின் செயற்றிட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்களை அரசு வெளிப்படுத்தக் கூடும்.

இந்தக் கூட்டத்தொடர் மற்றும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதக் கூட்டத் தொடர் என்பவை பெரிய தாக்கம் எதனையும் செலுத்தப் போவதில்லை.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடருக்கு முன்னர், கடந்தாண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய நான்கு விடயங்கள் தொடர்பில் அரசு கட்டாயம் நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எதனையும் எடுக்க அரசு தவறும் பட்சத்தில் மீண்டுமொரு தீர்மானம் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படுவதும் நிச்சயம்" - என்றார். (ற-ஐ-5)

# கோத்தபாய மீதான தாக்குதல் சம்பவம் விசேட மேல் நீதிமன்றில் விசாரணை

கொழும்பு, ஜூன் 29

தன்னைக் கொலை செய்ய முயற்சித்த சம்பவம் குறித்து, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, 7 வருடங்களாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை. 2013 ஆம் ஆண்டில் மட்டும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு ஒரே ஒரு வாக்குமூலம் மட்டும் வழங்கியுள்ளார்.

கோத்தபாய மீது கொள்ளுப்பிட்டியில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கு, விசேட மேல் நீதிமன்றில், மன்றின் ஆணையாளர் ஜராங்கனி பெரேரா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதில் சாட்சியமளிக்கும் போது, கோத்தபாய மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

"போர் நிறுத்தமொன்று நடைமுறையில் இருந்தபோதும், புலிகள் போருக்குத் தயாராகிக்கொண்டிருந்தனர் என்று உளவுத் தகவல்கள் ஊடாக உறுதி செய்து கொண்டேன். புலிகள் போர் நிறுத்தத்தை முறித்து தாக்குதல் நடத்தினால் மறுகணமே பதில் தாக்குதல் நடத்தும் வகையில் உளவுத் தகவல்களை சேகரித்து 76 விசேட படையணிகளை உருவாக்கி போருக்குத் தயாரானோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

### தற்கொலைத் தாக்குதல்

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள பித்தளை சந்தியில் 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவத்தில் கோத்தபாய ராஜபக்சவின் பாதுகாப்பு அதிகாரிகள் மூவர் உயிரிழந்தனர். 9 உத்தியோகத்தர் கள் படுகாயமடைந்தனர்.

### 41 சாட்சிகள்

இது தொடர்பான வழக்கில் பொன்னுசாமி, சிவலிங்கம் அருள், பத்மநாதன் ஐயர், சந்திரபோஸ், செல்லையா தயாளன் ஆகியோருக்கு எதிராக சட்ட மா அதிபர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்.

சம்பவம் தொடர்பில் தற்கொலைக் குண்டுதாரி எனக் குற்றம் சுமத்தப்படும் பாலசிங்கம் விஜேகுமார் அல்லது அப்துல் லதீப் முஹம்மது பரீத் அல்லது கதிர் அல்லது அன்பழகன் என்பவர் ஏனையவர்களுடன் சேர்ந்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளரைக் கொலை செய்யத் திட்டமிட்டமை, பாதுகாப்புத் தரப்பினர் மூவரைக் கொலை செய்தமை, அதற்கு ஒத்தாசையாக இருந்தமை உள்ளிட்ட 13 குற்றச்சாட்டுக்கள் சட்ட மா அதிபரால் சுமத்தப்பட்டன.

41 சாட்சியாளர்கள், 13 சான்றுப் பொருள்களுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஐந்தாவது சந்தேக நபர் இல்லாமலேயே விசாரணை செய்யப்பட்டது.

நீதிமன்ற அறிவித்தல்படி மன்றில் முன்னிலையான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச சாட்சியமளித்தார்.

தமது சாட்சியத்தில் அவர் தெரிவித்ததாவது–

"பாதுகாப்புச் செயலாளராகப் பதவியேற்க முன்னர் சுமார் 20 வருடங்கள் இராணுவத்தில் சேவையாற்றினேன். இராணுவத்தில் இருந்த போது கூடிய காலம் வடக்கில் பணியாற்றினேன்.

### அமெரிக்கக் குடியுரிமை

பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதல்களில் வடமராட்சி மீட்பின்போது நான்கு படையணிகள் பங்கேற்றன. அதில் பிரதான படையணியின் கட்டளைத்தளபதியாக இருந்தேன். 1990 ஆம் ஆண்டு இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமான போது யாழ். கோட்டையில் சிறைப்பட்ட இராணுவ வீரர்கள், பொலிஸாரை மீட்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்த படை நடவடிக்கையின் கட்டளைத் தளபதியாக இருந்தேன். அந்தக் காலப்பகுதியில் திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் பல படை நடவடிக்கைகளில் நான் பங்குகொண்டேன். 1991ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றதும், அமெரிக்காவில் குடியுரிமையும் கிடைத்தது. 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நான் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுப் பதவியேற்றேன்.

### வலையமைப்பு

அந்தக் காலத்தில் வவுனியாவின் பெரும்பாலான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. கிழக்கில் மூன்றில் இரண்டு பங்கு நிலப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. எனக்குக் கிடைத்த உளவுத் தகவல்களின் படி அப்போது 35 ஆயிரம் பேர் வரை புலி களின் ஆயுதப்படையில் இருந்தனர். 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் சுயேச்சை யாக புலிகளுடன் இணைந்திருந்தனர். இதனை விட கொழும்பு உள்ளிட்ட நகரங் களில் தாக்குதல் நடத்தும் வண்ணம் அவர்களது வலையமைப்புப் பரந்திருந் தது.

### ஒப்பந்த மீறல்

போர் நிறுத்தக் காலப்பகுதியில் மட்டும் புலிகள் 3 ஆயிரம் தடவைகள் ஒப்பந்தத்தை மீறியிருந்தனர். புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்குள் இராணுவம், பொலிஸார் செல்லவே முடியாத நிலை காணப்பட்டது.

### 76 படையணிகள்

பாதுகாப்பை உறுதிப்படுத்த முப்படைகளை ஒரே அணியில் திரட்டி உளவுத் தகவல்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் கொண்டு வந்தேன். உளவுப் பிரிவுகளை ஒன்று திரட்டி பயங்கரவாதத்தை எதிர்கொள்ள புதிதாக 76 புதிய படையணிகளை உருவாக்கினேன்.

### குண்டு துளைக்காத கார்

அப்போதைய ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர், இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகளுக்கு புலிகளிடமிருந்து பெரிய அச்சுறுத்தல்கள் இருந்தன. அதனால் இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பி.எம்.டப்ளியூ. ரகத்தை சேர்ந்த குண்டு துளைக்காத கார் பயன்பாட்டுக்குத் தரப்பட்டது. இது போன்ற 4 கார்கள் ஜனாதிபதி செயலக கட்டுப்பாட்டில் இருந்தன. அவை எனக்கும் முப்படைத் தளபதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. எனது பாதுகாப்புக்கு அப்போது (2006) 50 படையினர் வரையில் இருந்தனர்.

டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முற்பகல் வீட்டிலி ருந்து அமைச்சுக்கு செல்ல முன்னர் அலரி மாளிகைக்குச் சென்று கொண்டிருந்தேன்.

வாகனத்தில் நான் பின்னிருக்கையில், இடது புறமாக அமர்ந்திருந்தேன். எனக்கு முன் இருக்கையில் எனது பாதுகாப்பு உதவியாளர் இருந்தார். செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகம் அருகே தர்மபால மாவத்தக்குள் நான் பயணித்த கார் நுழைந்தது. அப்போது அங்கு சிவப்பு நிற சமிக்ஞை விளக்கு எரிந்துகொண்டிருந்த நிலையில் எதிர்த்திசையில் எமது வாகனம் பயணித்தது. அதனூடாக பித்தளை சந்தியை நாம் அடைந்தோம்.

### குண்டுத் தாக்குதல்

எனது வாகனத்தின் இரு பக்கங்களிலும் கதவுகளுக்கு நேரே இரு மோட்டார் சைக்கிள்கள் பயணித்தன. திடீரென பெரிய சத்தம் ஒன்று தீப் பிளம்புடன் கேட்டது. நான் காருக்குள் வலது புறத்தை நோக்கித் தூக்கி வீசப்பட்டேன். கார்க் கண்ணாடிகள் தூளாகாத போதும் வெடிப்புக்கு உள்ளாகின. எனக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் ஒன்று தீயில் எரிந்துகொண்டிருந்தது. அப்போது தான் எம்மை நோக்கி குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளதை உணர்ந்தேன். வெடிப்பின் பின் கார் அந்த இடத்திலேயே நின்றது. பின்னர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கதவை உடைத்து என்னை வெளியேற்றினர். அந்த இடத்தில் நடமாட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எனக்கு இடம் தரவில்லை. உடனடியாக டிபெண்டரில் ஏற்றி அலரி மாளிகைக்கு அழைத்துச் சென்றனர்.

குண்டு வெடிப்பில் எனது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவர் உயிரிழந்தனர் என்றும், 9 பேர் படுகாயமடைந்தனர் என்றும் செய்தி கிடைத்தது. குண்டு சரியாக எங்கு வைத்து எப்படி வெடிக்கச் செய்யப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. நான் காண வில்லை" – என்றார்.

பிரதி சொலிசிற்றர் ஜெனரல் ரொஹான் தனது சாட்சி நெறிப்படுத்தலை நிறைவு செய்தார். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜராங்கனி பெரேரா "குறுக்குக் கேள்விகள் உள்ளதா?" என சந்தேக நபர்களின் சட்டத் தரணிகளிடம் கேட்டார்.

இரண்டாவது சந்தேக நபரின் சட்டத்தரணியான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா, குறுக்குக் கேள்விகள் கேட்டார்.

"குண்டுவெடித்தது தொடர்பில் 7 வருடங்களின் பின்னர் வாக்கு மூலம் வழங்கியுள்ளீர்,அதுவும் ஒரே ஒரு தடவை மட்டும்?" என்று சட்டத்தரணி கேட்க "ஆம்" என்று கோத்தபாய பதிலளித்தார்.

அந்த கேள்விகளுடன் கோத்தா மீதான சாட்சி விசாரணை நிறைவுக்கு வந்தது. மன்றின் நடவடிக்கைகள் பிற்பகல் மீள ஆரம்பித்தன. அதன்போது, கோத்தாவின் பாதுகாப்பு உத்தியோகத்தரான கேர்ணல் சுர்ங்க ரந்தெனியவின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

வழக்குத் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் ஜூலை 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன. (ற-ஐ-4)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரின் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் கபடப் போக்கே!

**தே**சிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, முக்கிய காணிகள் விடுவிக்கப்படமாட்டா. அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படும். தேசியப் பாதுகாப்புக் கருதி, அதற்கென ஆகக்குறைந்த அளவுள்ள காணிகள் எத்தனை தேவை என்பது குறித்து ஆய்வுக்கு உட்படுத்தி வருகிறோம்--

அதனைச் செய்து முடிப்பதற்கு அதிக காலம் தேவை. அதன் பின்னரே, ஏனைய காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும். அதற்குப் போதிய கால அவகாசம் தேவை--

காணி விடுவிப்பு தொடர்ந்து இடம்பெறும். ஆயினும், அதற்கு நீண்ட காலத்தை எடுத்துக் கொள்ளமாட்டோம். யாழ்.மாவட்டத்தில், படையினர் வசம் 29,000 ஏக்கர்கள் இருந்தன. அந்த எண்ணிக்கை இப்போது மூவாயிரம் ஏக்கர்களாகக் குறைந்து விட்டது. 2018 ஆம் ஆண்டுக்குள், முக்கியமான காணிகளைத் தவிர, ஏனையவற்றை மக்களுக்கு விடுவித்து விடுவோம்.

மேற்கண்டவாறு நீட்டி முழக்கி உள்ளார், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி.

மேலும், 2018 ஆண்டு முடிவதற்குள் முக்கியமான காணிகளைத் தவிர ஏனையவற்றை விடுவித்து விடுவதாகவும் அவர் உறுதி அளித்திருக்கிறார்.

அதேவேளை,

விடுவிக்கப்படும் பகுதிகளில் சொந்தக் காணிகளை உடையவர்கள், உடனடியாகவே குடியமர வேண்டும்.

அதேபோன்று, விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் காலம் தாழ்த்தாமல் குடியமர வேண்டும். அத்தோடு அரச திணைக்களங்களும் உடனடியாகத் தமது பணிகளைத் தொடங்க வேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் அறிவுறுத்தி உள்ளார்.

ஆயினும்--

நம்பிக்கையோடு இருந்த இடம்பெயர்ந்த மக்களின் வாயில், மண் அள்ளிப்போடும் வகையில், கருத்துக்களை-நிலைப்பாடுகளை-பாதுகாப்புச் செயலர் வெளிப்படுத்திச் சென்றுள்ளார்.

ஆறு மாதங்களுக்கு முன்னர், வலி.வடக்குப் பிரதேசத்துக்கு வந்த ஜனாதிபதி, மிகப்பெரிய அளவில் பாதிப்புற்ற வலி.வடக்கு மக்களை சந்தித்து அளித்த வாக்குறுதியை--

அடித்துச் சிதைக்கும், புரட்டித் தள்ளும் நிலைப்பாட்டை பாதுகாப்புச் செயலாளர் விட்டெறிந்து போயுள்ளார்.

அதுவும், இலங்கை தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில், வாய்மூல அறிக்கை வெளியிடப்படும் தருணத்தில், தக்க வேளையில், இராணுவத்துறை சார்ந்த அதிஉயர் அதிகாரியான பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்டுள்ள கருத்து, தமிழ் மக்களின் பூர்வீக சொத்தான சொந்த நிலங்களை அபகரித்துக் கபளீகரம் செய்யும் உள்நோக்கை, வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது!

இந்த நிலைப்பாடு--

உலக மாமன்றத்தைக் கேலி செய்யும் வகையில், எமது விவகாரத்தில் தலையிட நீ யார் என்று ஆணவத்துடன், எட்டி உதைக்கும் போக்காக எழுந்து விரிந்துள்ளது!!

அச்சொட்டாகக் கூறுவதாயின், அனைத்துலக மட்டத்தில் தெரிவிக்கப்படும், விரும்பப்படும் எந்தவகை சார்ந்த அழுத்தங்களையும்--

எமது நல்லாட்சி அரசு கருத்தில் கொள்ளப் போவதில்லை-- என்று ஆவேசத்துடன் கங்கணம் கட்டி நின்று கூத்தாட்டம் போடும் போக்கிரித் தனமே தலைவிரித்து ஆடுகிறது என்று அனைத்துலகமும் பழிக்கும் நிலையை உற்பவிக்கிறது! வேறென் சொல்ல...

# பிரிட்டனின் ஒற்றுமையை கேள்விக்குறி ஆக்கியுள்ள கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு



**க**ருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கு முன்பு பிரிட்டனில் இருந்த நிலைமை, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகக் கூடாது என்பதற்கே ஆதரவு கிட்டும் என எண்ண வைத்தது. பரப்புரை தொடங்கியபோது தடுமாறிய பங்குச் சந்தைகள்கூட பின்னர் சுதாகரித்தன. சேர்ந்தே இருப்பது என்ற முடிவுதான் வெற்றி பெறும் எனப் பந்தயங்கள் கட்டப்பட்டன.

பிரிட்டனின் முக்கிய பகுதிகளான சண்டர்லேண்ட், பாசில்டன், வேல்ஸ் ஆகியவற்றில் எதிர்பார்த்ததற்கு மாறாக ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும் என்பதற்கு ஆதரவாகவே முடிவுகள் அமைந்தன. லண்டனிலிருந்தும்ஸ்கொட்லாந்திலிருந்தும் வந்த முடிவுகள், சேர்ந்தே இருப்பதற்கு ஆதரவைச் சற்றே அதிகரித்தன. ஆனால், கடைசியில் நிலமை தெளிவாகிவிட்டது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்று 52 வீதம் பேர் கருத்துத் தெரிவித்தனர். 43 ஆண்டுகளாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகித்த பிரிட்டன், வெளியேறுவதற்கு ஆதரவாக வாக்களித்து விட்டது.

**கமரூன் தான் காரணம்**

சேர்ந்திருக்க வேண்டும் என்பதற்கான பரப்புரை தோற்றதற்கு வாக்காளர்கள் மேல் பழிபோட முடியாது. 72 வீத வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது. பிரதமர் டேவிட் கமரூன் தான் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றவரே அவர்தான்! வெளியேறுவதால் உண்டாகும் இழப்பையும், தொடர்வதால் கிடைக்கும் பலன்களையும் தெளிவுபடுத்த அவர் தவறிவிட்டார். அவரது கன்சர்வேடிவ் கட்சியும் இந்த விவகாரத்தில் இரண்டுபட்டு விட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பதை வலுவாக எதிர்த்தவர்கள் வலது சாரிகள்தான். ஊடகங்களும் எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றின. ஐரோப்பாவைவிட உயர்ந்தது பிரிட்டன் என்ற எண்ணம் பெரும்பாலோரிடம் பதிந்துள் ளது.

நளினமான, நுட்பமான விவாதங்கள் பெரும்பாலோரின் கருத்துக்களை மாற்றிவிடாது என்பதே உண்மை. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கோடிக் கணக்கான பவுண்டுகள் மதிப்புள்ள மானியங்களையும் இதர உதவிகளையும் பெற்றவர்கள் இங்கிலாந்தின் தென் கிழக்கில் உள்ள கார்ன்வால் பகுதியினர். அவர்கள் வெளியேற வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளனர்.

**பின்னடைய வைத்த எதிர்மறை உத்தி**

அரசியல்தலைவர்களின் பேச்சுக்கள் சலித்துப்போய் அதிருப்தி ஏற்படுவது உலக நடைமுறை. அதுவும் இதில் எதிரொலித்திருக்கிறது. அமெரிக்க அதிபர் தேர்தல் வேட்பாளராவதில் டொனால்ட் டிரம்புக்குக் கிடைத்த வெற்றி, ஆஸ்திரியாவில் நார்பர்ட் ஹோஃபர் அதிபர் பதவிக்கான வேட்பாளராகியிருப்பது போன்று, இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பும், மேற்கத்திய நாடுகளில் மக்களுக்கும் பிரதான கட்சிகளின் அரசியலுக்கும்இடையேயானஇடைவெளியே. கன்சர்வேடிவ் கட்சி, இடதுசாரிக் கட்சியான தொழிலாளர் கட்சி என்பவற்றின் செயற்பாடுகள் காரணமாக, வெளியேற வேண்டும் என்று பரப்புரை செய்தவர்களால் ஏழைகள், தொழிலாளர்களிடையே ஆதரவைப் பெற முடிந் துள்ளது. அத னால்தான் நாட்டின் வட-கிழக்குப் பகுதியில்கூட வெளியேறுவதற்கு ஆதரவு பெருகியது.

வெளியேறினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை விளக்குவதற்குப் பதிலாக, சேர்ந்திருந்தால் கிடைக்கக்கூடிய பலன்களை விளக்கியிருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறியமை மேலும் பலரை அவர்களை விட்டு விலக வைத்தது.

போரிஸ் ஜான்சன் போன்றவர்கள் இதைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர்.

வெளியேறக்கூடாது என்ற தரப்பைச் சேர்ந்த நிஸ்ஸான் கார் நிறுவனத்தால், சண்டர் லேண்ட் பகுதி தொழிலாளர்களைக்கூட ஆதரவாக வாக்களிக்கச் செய்ய முடியவில்லை. இதர நாடுகளைச் சேர்ந்தவர்கள், பிரிட்டனில் குடியேறுவதைப் பற்றி பயந்தார்கள். வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தியவர்கள், தங்களை எவரும் பிற நாட்டவரை வெறுக்கும் நிறவெறியாளர் என்று முத்திரை குத்திவிடக் கூடாது என்பதற்காக பேச்சைக் குறைத்துக் கொண்டனர்.

**செல்ல வேண்டிய பாதை**


பிரிட்டன் இனிப்பயணிக்கவேண்டிய பாதை வித்தியாசமானது. தாங்கள் இனிச் செய்ய வேண்டியது என்ன? அரசியல் - சமூக ரீதியாக எதிர்காலத்தில் எப்படிச் செயற்பட வேண்டும். என்பதற்கான விடைகளுக்காக மக்கள் தவிக்கிறார்கள். இந்த வாக்கெடுப்பால் நாடே பிளவுபட்டு நிற்கிறது. பிரிட்டனின் ஒற்றுமையே கேள்விக்குறியாகிவிட்டது.

வடக்கு அயர்லாந்திலும் ஸ்கொட்லாந்திலும் பிரிட்டனிலிருந்து பிரிந்து செல்ல கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் தலைதூக்கிவிட்டது.

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது, ஐரோப்பிய ஒன்றியத்தின் வேறு சில நாடுகளிலும் இதே கோரிக்கையை எழுப்பும். வெளியேற வேண்டும் என்று பரப்புரை செய்த போரிஸ் ஜான்சன், ஐரோப்பிய எல்லைகளுக்கும் அப்பால் தொடர்புகொள்ள பிரிட்டனுக்குப் பொன்னான வாய்ப்புக் கிட்டியிருக்கிறது - என்கிறார்.

வெளிநாட்டவர்கள் என்றாலே வெறுப்பவர்கள்தான் பிரிட்டிஷ்காரர்கள் என்ற விசமப் பரப்புரையை அவதானித்து வந்த உலக நாடுகளின் கண்ணோட்டத்தை மாற்றுவதுதான் பிரிட்டனுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கப்போகிறது.

*சுருக்கமாக*
*தமிழில்: சாரி*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதன்முதலான குடும்ப அரசியல் கலாசாரத்தின் தோற்றம் என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

# அதிகாரத்தைப் பிடிப்பதற்கான பண்டாவின் வியூகமே இனங்களது தேசிய உணர்வைச் சிதைத்தழித்தது

லங்காதீப
தமிழில்: சரா

1953 ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சி அரசு, அரிசியின் விலையை அதிகரித்தமைக்கு எதிராக இடதுசாரிக் கட்சிகளின் தலைமையிலான தொழிற்சங்கங்கள் கடையடைப்புப் போராட்டமொன்றை ஒழுங்கு செய்து நடத்தின. அந்தக் கடையடைப்புப் போராட்டத்தின் போது, பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சோமபால என்ற தொழிற்சங்கத் தலைவரொருவர் உயிரிழந்திருந்தார். அந்தச் சம்பவத்தினால் அதிர்ச்சிக்குள்ளான பிரதமர் டட்லி சேனநாயக்க தமது பிரதமர் பதவியைத் துறந்து, மற்றொரு ஐ.தே. கட்சிப் பிரமுகரான சேர்.ஜோன் கொத்தலாவலையிடம் நாட்டின் நிர்வாகத்தை ஒப்படைத்தார்.

சேர்.ஜோன் கொத்தலாவல ஒரு புதுமையான அரசியல் பிரமுகர் ஆவார். எவரொருவருக்கும் அடிபணியாதவர், நேர்மையானவர், தைரியசாலி. அதேவேளை, அவர் ஒரு உல்லாசப் பேர்வழியாக இருந்தமையினால், அன்றைய அரசியல்வாதிகளது கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார். அவருக்குச் சொந்தமானதாக இருந்த பெறுமதிமிக்க சொத்துக்களை பொது மக்களின் நலன்களுக்காக அன்பளிப்புச் செய்திருந்தபோதிலும், ஏகாதிபத்தியவாதப் போக்குவடையவராக அவரது எதிராளிகளினால் அவர் அடையாளப்படுத்தப்பட்டார். சேர். ஜோன் கொத்தலாவலைக்கு இருந்த மக்கள் செல்வாக்கு படிப்படியாகக் குறைவடைந்து சென்றமை பண்டாரநாயக்காவின் வெற்றிக்கு வழி சமைத்த காரணியொன்றாகியிருந்தது.



**பண்டாரநாயக்காவின் வெற்றிக்கு வழி வகுத்த காரணிகள்**

எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க இலங்கையில் தோன்றிய சிறந்த அறிவாளியாக விளங்கியமை போன்றே ஆற்றல் மிக்க பேச்சாளரொருவருமாவார். ஆனாலும் அவரை சிறந்த அரசியல் நிர்வாகியாக அடையாளப்படுத்த நான் தயங்குகிறேன். அவர் வாழ்ந்த காலம் முழுமையும் பிரச்சினைகளும் சிக்கல்களும் மிக ஏராளம்.1956 இல் நடந்த பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி பெருவெற்றியை ஈட்டிக்கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சியினால் ஆகக் கூடி 08 ஆசனங்களையே பெற முடிந்தது. பொதுசன ஐக்கிய முன்னணியின் அந்த வெற்றிக்கு பல காரணிகள் துணையாக அமைந்தன. 1. சுதந்திரக் கட்சியுடன் சமசமாஜக் கட்சி உள்ளிட்ட சில சிறிய அரசியல் கட்சிகள் இணைந்த முன்னணியொன்றாக தேர்தலில் போட்டியிட்டிருந்தமை.

2.சிங்கள மக்களைக் கவரும் விதமாக தாம் பதவிக்கு வந்தால், 24 மணித்தியாலங்களில் நாட்டில் சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவோம் என வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தமை.

3.பௌத்த துறவிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என்ற 5 பெரும் சக்திகளை ஒருங்கிணைத்து அவற்றுக்கு உயிரூட்டியிருந்தமை.

4.ஐக்கிய தேசியக் கட்சியானது பணக்கார வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் மேற்குலகு சார்ந்த கட்சியென்ற எண்ணத்தை மக்களின் மனதில் பதியச் செய்திருந்தமை.

5. சோஷலிசவாத எண்ணக் கருக்கள் சமுதாய மயப்படத்தப்படுமென பொது மக்களை நம்ப வைத்தமை, என்பவை அவற்றில் முக்கியமானவை ஆகும்.

எவ்வாறோ, 1956 ஆம் ஆண்டின் அந்த ஆட்சிமாற்றத்தை பெரும்பாலானோர் அரசியல் புரட்சி ஒன்றெனக் கணித்திருந்தாலும் கூட, அதை மனோநிலைப்புரட்சி என்றே அடையாளப்படுத்த வேண்டும். பண்டாரநாயக்காவினால் மக்கள் செல்வாக்கைப் பெற முடிந்திருந்தாலும் கூட ராஜதந்திர ரீதியில் நாட்டை நிர்வகிக்க அவர் திறனற்றுப் போயிருந்தார். பல கட்சிகளின் கூட்டொன்றாகியிருந்ததால், அரசியல் தேசியக் கொள்கையொன்றோ, தெளிவான பார்வையொன்றோ இல்லாதிருந்தது. அந்தப் பலவீனம் காலப் போக்கில் தெளிவாகப் புலப்பட்டது.

இலங்கையில் சிங்கள மொழி அரச கரும மொழியாக இருக்கவேண்டும் என்பதில் எவரும் சவால் விடுக்க இயலாதுதான். ஆனாலும் ஆது நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை ஏற்கத்தக்கதாக இருக்கவில்லை. சிங்களவர்கள் தவிர்ந்த வேறு இனத்தவர்களும் நாட்டில் வாழ்கின்றனர் என்பதை அவர்கள் மறந்து போனார்கள். கடந்த 60 ஆண்டுகளாக நீடித்த இனவாத மோதல்களின் ஆரம்பமே 1956 பொதுத் தேர்தலின்போதே ஆரம்பித்தது. நாடு முழுவதிலும் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டங்களில் அரசியல்வாதிகள் இனவாத, மதவாத கருத்துக்கள் நிறைந்த உரைகளையே ஆற்றியிருந்தனர். இனங்களுக்கிடையே குரோதத்தையும் பகைமையையும் விதைத்தனர். இனத்துவேசத்தின் ஆரம்ப வித்துக்களும் அவ்வேளையிலேயே விதைக்கப்பட்டு வளர்க்கப்பட்டன. 24 மணித்தியாலங்களில் சிங்கள மொழி அரச கருமொழி ஆக்கப்படும் என்ற பிரபலமான போராட்டக்கோசம் சமுதாயத்தில் ஒன்றறக் கலந்துவிட்டதால், தெற்கிலுள்ள சிங்களப் பாடசாலைகளில் குறிப்பாக மத்திய மகா வித்தியாலயங்களில், தமிழ் மொழியைக் கற்பிப்பது தடைப்பட்டது. வடக்கிலுள்ள பாடசாலைகளில் சிங்கள மொழியைக் கற்பிப்பது தடைப்பட்டது. அன்று ஆங்கில மொழி மூலமாக கல்வி கற்ற பெரும்பான்மையின மாணவர்கள் சிங்களமொழி மூல கற்கைகளை ஆரம்பித்தனர்.

## பன்றியோடு சேர்ந்த பசுவும்....

கடந்த 24.06.2016 வெள்ளிக்கிழமை உதயன் பத்திரிகையில் வெளியான வாசகர் திருமுகத்தில் மாணவர்களை நல்வழிப்படுத்துவதே ஆசிரியர்களின் நோக்கமாகும் எனும் தலைப்பில் ஒருவர் தனது கருத்தைக் கூறியிருந்தார். இவரது கருத்தை உற்று நோக்கும்போது இவர் என்ன மனநிலையில் இருந்து தனதுகருத்தைவெளிப்படுத்தியுள்ளார்என்பது குறித்துசந்தேகிக்கவேண்டியுள்ளது. ஏனெனில் பத்திரிகையில் பிரசுரமான 'ஆசிரியர் விட்டார் அறை; கிழிந்தது மாணவனின் செவிப்பறை' எனும் செய்தியை உதயன் பெரிதுபடுத்திப் பிரசுரித்ததாகவும், இதனால் ஆசிரியர்களிடையே இந்தச் செய்தி ஒருவித அச்சத்தை ஏற்படுத்தி விடும் என்றும், அடியாத மாடுபடியாது என்பதற்கிணங்க ஆசிரியர் அடிப்பது (அது காதில் விழுந்தால் என்ன? கண்ணுக்குள் விழுந்தால் என்ன? ) தவறல்ல என்றும், கண்டிப்பற்ற கற்பித்தலினால்தான் இன்றைய இளம் சமுதாயம் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்பதாகவும் பலவகையான விளக்கங்களைக் கொடுத்துள்ளார்.

அன்பு வேறு; கண்டிப்பு வேறு; அன்போடு கூடிய கண்டிப்பு வேறு. ஓர் ஆசிரியரால் அன்போடு கூடிய கண்டிப்புத்தான் மாணவனுக்குத் தேவையேயொழிய, அராஜகத்தனமான செயற்பாட்டை வெளிப்படுத்துவதல்ல.

எந்தவொரு ஆசிரியரும் மாணவனின் செவிப்பறை கிழிய வேண்டும் என்று அடிப்பதில்லைத்தானே? என்று ஆசிரியரின் சண்டித்தனத்தை நியாயப்படுத்தும் இந்த வாசகர் (குணாளன், சாவகச்சேரி) நாளை ஒரு பாடசாலையில் ஓர் ஆசிரியர் ஓர் உயர்தர வகுப்பு மாணவியின் கையைப்பிடித்து இழுத்தார் என்றொரு செய்தி உதயன் பத்திரிகையில் வெளிவருமாக இருந்தால், எந்தவொரு ஆசிரியரும் வயது வந்த மாணவியின் கையை தவறான நோக்கத்தோடு பிடிப்பதில்லையே... என்று நியாயப்படுத்தவும் முனைவார்.

பன்றியோடு சேர்ந்த பசுவும் ஏதோ செய்யுமாம் என்பதுபோல் ஒரு மாணவனின் செவிப்பறை கிழிய அறையும் ஆசிரியருக்கு வக்காலத்து வாங்குபவர்களும் அதே ரகத்தைச் சேர்ந்தவர்கள் என்றே ஒரு மதிப்பிட்டுக் கொள்ள முடியும்.

பரந்தாமன், வன்னி

## முன்பள்ளி ஆசிரியர்களது நியமனம் உறுதிப்படுத்தப்படல் அவசியம்

முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட துறை சார்ந்த டிப்ளோமா கற்கை நெறியை, குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதன் மூலம் தமக்கான நியமனத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று சொல்லப்பட்டது.அதனடிப்படையில், முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் அந்தத் தகுதி நிலையைப் பெற்றுக் கொண்டுள்ளனர். பலர் பொருளாதார ரீதியிலே பின்தங்கியுள்ள போதிலும், கற்கைநெறிக்கான கட்டணப் பணத்தைச் செலுத்தி டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்துள்ளனர். இருந்தபோதிலும் அவர்களுக்கான நியமன உறுதிப்படுத்தல் சம்பந்தப்பட்ட தரப்பினரால் (கல்வி நிர்வாகம்) இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த சந்தர்ப்பத்திலே, பலரும் (தொண்டர் ஆசிரியர்கள்) தமக்கான நியாயத்தை போராட்டங்களினூடாக எடுத்துக்கூறுவதுடன், தமக்கான நியமனங்களையும் பெற்றுக் கொள்கின்றனர்.இருந்தும் முன்பள்ளி ஆசிரியர்கள் கூறப்பட்ட வரையறைகளை பூர்த்தி செய்துள்ள போதிலும், நியமனத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத பரிதாபநிலையிலே இருந்து வருகின்றனர்.முன்பள்ளி ஆசிரியர்கள் நியமனம் தொடர்பிலான அவதானிப்புக்கள் அவ்வப்போது பேசப்படுகின்ற போதிலும், அவர்கள் நியமனம் தொடர்பிலான எந்தவித நேர்முகமான நடவடிக்கைகளோ,வாய்ப்புக்களோ ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்பது பலரது கணிப்பு .முன்பள்ளி மாணவர்களது பெற்றோர்களான நாங்கள் இது தொடர்பில் கரிசனையை பத்திரிகையூடாக வெளிப்படுத்த விரும்புகிறோம். நியமனம் தொடர்பில் சம்பந்தப்பட்ட கல்வி நிர்வாகத்தினர் முன்பள்ளி ஆசிரியர்களின் இந்த நிலைமையைக் கருத்திலெடுத்து ஆராய்வார்களா? அவர்களது பிரச்சினைக்கான தீர்வை வழங்குவார்களா...?

த.செல்வமலர், பெற்றோர் அமைப்பு, யாழ் மாவட்டம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனாவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உலகின் நீண்ட உயரமான கண்ணாடிப்பாலத்தில் பாதுகாப்புப் பரிசோதனை நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. குனான் மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலம், அடுத்த மாதம் திறக்கப்படவுள்ளது. 20 பேர் பெரிய அளவிலான சுத்தியலால் கண்ணாடியை நொறுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பின்னர் 11 பேரை ஏற்றியபடி 2 தொன் எடையுள்ள வாகனம் பாலத்தின் பயணித்தது. மீண்டும் கண்ணாடியை நொறுக்கும் முயற்சியில் 10 பேர் ஈடுபட்டனர். கண்ணாடி உடையவில்லை. இவ்வாறு பாலம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது என உள்ளூர் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.

# 3 மில்.யூரோ பெறுமதியான கைக்கடிகாரங்கள் திருட்டு

## பாரிஸில் திருடர்கள் கைவரிசை

பாரிஸ், ஜூன் 29

பிரான்ஸின் பாரிஸ் நகரில் 3 மில்லியன் யூரோ பெறுமதியான கைக்கடிகாரங்கள் திருடப்பட்டுள்ளன. ஆடம்பர கைக்கடிகார உற்பத்தி நிறுவனமான 'ரிட்சாட் மில்' நிறுவனத்தின் களஞ்சிய அறையிலேயே திருட்டு நடந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். அந்தப் பகுதியில் குறித்த தினத்தன்று நடமாடியவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச அளவில் தரம்மிக்க ஆடம்பரப் பொருள்கள் பாரிஸில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றின் பெறுமதி மிக அதிகமாகும். (ற-ரி4)



# கார்க் குண்டுத் தாக்குதல்களில் ஏமனில் 42 பேர் சாவு; பலர் காயம்

ஏமனில் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதல்களில் 42 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர். 4 கார்க் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஹட்ர மவுட் மாகாணத்திலேயே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இறந்தவர்களில் பாதுகாப்புத் தரப்பினரும், சிறுவர்களுமே அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு தாக்குதல் உளவுத் துறையினரைக் குறிவைத்து நடத்தப்பட்டது. மற்றையவை இராணுவச் சோதனைச் சாவடிகளுக்கு அண்மையாக நடத்தப்பட்டுள்ளன. தாக்குதல்களுக்கு ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியுள்ளது.

ஏமனில் சிறுபான்மையாக உள்ள ஷியா முஸ்லிம்கள் மீது சன்னி பிரிவு முஸ்லிம்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சன்னிப் பிரிவினர் ஏமன் ஜனாதிபதிக்கு ஆதரவானவர்கள். (ற-ரி4)

17 நாடுகளில முன்னணியிலுள்ள காயத்தழும்புகள் மற்றும் சுருக்க அடையாளங்களுக்கான உற்பத்தி




"எனது உடல் பருமனை குறைத்துக் கொள்ள நான் அதிகளவு கஷ்டப்பட்டேன். இதனால், எனது சருமத்தில் ஸ்ட்ரெச் மார்க்ஸ் ஏற்பட்டதையிட்டு நான் மிகவும் வருத்தத்துடன் இருந்தேன். இந்த சந்தர்ப்பத்தில், நான் TVயில பயோ ஒயில் பற்றிய விளம்பரம் ஒன்று ஒளிபரப்பு செய்யப்படுவதை பார்த்தேன். தொடர்ந்து சில மாதங்களுக்கு நான் பயோ ஒயிலை பயன்படுத்தினேன். சருமத்தில் காணப்பட்ட ஸ்ட்ரெச் மார்க்ஸ் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து, சருமத்துக்கு புதிய தோற்றம் கிடைப்பதை பார்த்ததும், எனக்கு அதிகம் மகிழ்ச்சி ஏற்பட்டது. நான் அதை பயன்படுத்தி பார்த்தமையால் எனது உறவினர், நண்பர்கள் மற்றும் என்னுடன் பணியாற்றும் சகலருக்கும் நான் இதைப்பற்றி கூறினேன். எனது சருமத்துக்கு சிறந்த தோற்றத்தை வழங்கிய பயோ ஒயிலை நான் பாவிப்பது அதிகளவு நம்பிக்கையுடன். விளம்பரங்களில் காட்டப்படுவதை போல உண்மையில் பெறுபேறுகளை பெற்றுக் கொடுக்கும் தயாரிப்பு ஒன்று உள்ளதை அறிந்து கொண்டமை அதிகம் பெறுமதி வாய்ந்ததாக அமைந்துள்ளது" - கெஸி கிரே

Bio – Oil சருமத்தில் காணப்படும் காயங்களின் தழும்புகள், சருமம் விரிவடைவதால் ஏற்படும் தழும்புகள் மற்றும் சருமத்தில் மாறுபட்ட நிறங்கள் ஏற்படுவதை கட்டுப்படுத்தி சருமத்தோற்றத்தை மேம்படுத்த உதவும் தயாரிப்பாக அமைந்துள்ளது. பயோ ஒயில் மற்றும் அதில் அடங்கியிருக்கும் பர்சலீன் ஒயில் சேர்மானம் சருமம் வரட்சியடைதல் மற்றும் முதிர்வடைதலை தடுப்பதற்கு உதவியாக அமைந்திருக்கும். உற்பத்தி பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய பெறுபேறுகள் தொடர்பில் மேலதிக விபரங்களையும், மருத்துவசார் பரீட்சார்த்தங்களை பெற்றுக் கொள்ள bio-oil.com எனும் இணையத்தள முகவரியை பார்வையிடவும். நாடு முழுவதும் காணப்படும் முன்னணி பார்மசி மற்றும் சுப்பர் மார்க்கட்களிலிருந்து Bio – Oil ஐ (60 மி.லீ) 975 ரூபாவுக்கும் (125 மி.லீ) 1650 ரூபாவுக்கும் கொள்வனவு செய்து கொள்ள முடியும். நபரின் சருமத் தோற்றத்துக்கு அமைய பெறுபேறுகள் வேறுபடக்கூடும். நாடு முழுவதிலும் Bio – Oil ஐ விநியோகிப்போர் ஹேமாஸ் பார்மசி ... 077 4182809.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள் 8

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 8 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

மனம் விரக்தியடையும்போது தற்கொலை எண்ணங்கள்கூடச் சிலருக்குத் தோன்றும்.

இவர்கள் சிறந்த நீதிமான்கள், தெய்வத்துக்குப் பயந்தவர்கள். 8ஆம் எண்ணானது ஒரு மனிதனைப் புடம் போட்டு, அவனைத் தங்கமாக்கி விடும். இவர்களின் வாழ்க்கையில் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளும் 8 ஆம் எண் வரும் நாள்களிலேயே நடைபெறும். கிரேக்கர்கள் இந்த எண்ணை 'நீதியின் கண்' என்றும் அழைத்தனர். தாங்கள் எண்ணியதைக் கடைசி வரை நிறைவேற்ற வேண்டும் என்ற தீவிர எண்ணம் உடையவர்கள். தாங்கள் நினைத்ததை அப்படியே வெளியில் சொல்ல மாட்டார்கள். தங்கள் வாழ்வின் பிற்பகுதியில் தான் பெரும்பாலோர் இன்பத்தை அனுபவிக்கின்றனர். இவர்களுக்குத் தன்னம்பிக்கை குறைவு. எனவே, அதை அவசியம் வளர்த்துக் கொள்ள வேண்டும். தங்களை உலகத்தில் தனிமையாக இருப்பதாக உணர்வார்கள்.

எனவேஎளிதில் அடுத்தவர்களை நம்ப மாட்டார்கள். இவர்களுக்குப் பெயர் எண் நன்றாக இருந்தால் மட்டுமே, கெட்ட விதியை மாற்றிக் கொள்ள முடியும். அதில் கவனக் குறைவாகவோ, அலட்சியமாகவோ நடந்து கொள்ளும் போது, துன்பங்கள் தொடர்ந்து வரும். பிறர் படும் துன்பம் கண்டு சகிக்காத மனம் கொண்டவர்கள். தங்களால் உதவி செய்ய முடியா விட்டாலும், உதவிகிட்டும் இடத்தை யாவது காட்டுவார்கள்.

8 ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைந்தோர் திருட்டு, வழிப்பறி, கொலை, வன்புணர்வு போன்ற வழிகளில் துணிந்து ஈடுபடுவார்கள். அதனால் நிச்சயம் தண்டனையும் (சிறை) அடைவார்கள். எந்தச் செயலையும் சற்று மெதுவாகவே செய்வார்கள். தரையைப் பார்த்தே நடப்பார்கள்.

எந்த ஒரு பிரச்சினைக்கும், நடுவராக இருந்து நீதி சொல்லச்சிறந்தவர்கள்.

தம்மிடம் நட்புக் கொண்டவர்களையும்,பகைமைகொண்டவர்களையும், தமது வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டார்கள். உடல்உழைப்பில் இவர்களுக்கு நாட்டம் அதிகம். பெரும்பாலும் தனிமையாக இருப்பதையே விரும்புவார்கள்.

இவர்களது பேச்சில் விதி, வாழ்க்கை, தர்மம் என்று அடிக்கடி வார்த்தைகள் வரும். இவர்களுக்குக் காதல் விவகாரங்கள் வெற்றி கொடுக்காது.

திருமணமும் பொதுவாக வேறொரு இடத்தில்தான் நடக்கும். இவர்களது செல்வ நிலை ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். எந்த முன்னேற்றம் வந்தாலும் அதை அனுபவிக்க முடியாமல் பல சோதனைகள் கூடவே வந்து விடும்.

சுதந்திரமான தொழிலைக்காட்டிலும், அடுத்தவர்களின் கீழ் வேலை செய்வதையே விரும்புவார்கள். ஆனால் 8ஆம் எண் வலிமைபெற்றவர்கள்.

பெரும்தொழில் அதிபர்களாகவும், கடல் கடந்து தொழில் செய்யும் வல்லுநர்களாகவும் இருப்பார்கள். உடம்பிலோ அல்லது மனத்திலோ ஏதாவது ஒரு குறை அல்லது நோய் இருந்து கொண்டே இருக்கும்.

**அதிர்ஷ்ட நாள்**

இவர்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் வரும் 1, 10, 19, 28 ஆகிய நாள்கள் மிகச் சிறந்தவை. 8 ஆம் எண்ணின் தீய குணங்களை 5 ஆம் எண் மட்டுமே போக்கும் வல்லமை படைத்தது. எனவே, 5, 14, 23 ஆகிய நாள்களும் இவர்களுக்கு நன்மையே புரியும். எனவே கூட்டு எண் ஒன்று மற்றும் 5 வரும் நாள்கள் மிகவும் அதிர்ஷ்டமானவை. 4, 13, 22, 31 நாள்களில் நல்லவை தாமாகவே நடக்கும். ஆனால் புதிய முயற்சிகளில் இவர்கள் அந்த நாள்களில் தேடிச் செல்லக் கூடாது. 9 ஆம் எண்ணும் நல்ல பலன்களையே செய்யும்.

ஒவ்வொரு மாதத்திலும் 8, 17, 26 ஆகிய நாள்களும், 2, 11, 20, 29 நாள்களும் கெட்ட பலன்களையே கொடுக்கும். கூட்டு எண் 8 மற்றும் 2 வரும் நாள்களைத் தவிர்க்க வேண்டும்.

**அதிர்ஷ் நிறங்கள்**

இவர்களுக்கு மஞ்சள் நிறமே சிறந்தது. ஆழ்ந்த பச்சை, நீலம் ஆகியவை நன்மை தரும். மற்றவர்களை சந்திக்கச் செல்லும்பபோது எப்போதும் நீல நிறம் மற்றும் மஞ்சள் நிற ஆடைகள் சிறந்தவை.

(தொடரும்)

மக்கள் முகம்

## சமூக சேவையாளருக்கு தேசோதய தீபம் விருது



கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணியைச் சேர்ந்த லயன் சி.ஜெயசங்கர் (ஜே.பி) சர்வோதயம் அமைப் பின் இணை அமைப்பான தேசோதய சபையின் ஊடாக, சர்வோதயம் அமைப்பின்தலைவரும்அரசியலமைப்புபேரவையின் உறுப்பினருமான கலாநிதி ஏ.ரி ஆரிய ரத்தினவால், நல்லாட்சி சமூக சேவை, வறுமை ஒழித்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு வினைத்திறனாகவும்பொதுமக்களுக்குசேவையாற்றியமைக்காகவும்தேசோதயதீபம்விருதுவழங்கிகௌரவிக்கப்பட்டார். இவர் அகில இலங்கை சமாதான நீதிவானும், பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத் தலைவரும், தேசோதய சபையின் யாழ். மாவட்டச் செயலாளரும், யாழ்ப்பாண நுழை வாயில் லயன்ஸ் கழக அங்கத்துவப் பணிப் பாளரும் ஆவார். அத்துடன்எழுத்தாளரும்மூத்ததொழிற் சங்க வாதியும் ஆவார்.

சி.ஜெயசங்கர் (ஜே.பி)



## பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு இரண்டு கௌரவ விருதுகள்

கடந்த மாதம் 22 ஆம் திகதி தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கமும், திருவையாறு தமிழ்ஐயா கல்விக் கோட்டமும், வவுனியா கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேசுவரர் திருக்கோயிலும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடத்திய 14 ஆவது அனைத்துலக ஆய்வு மாநாட்டுத் தொடக்க விழாவில், மாநாட்டு இயக்குநரும், சப்ரகமுவ பல்கலைக் கழக மொழித்துறையின் பேராசிரியருமான கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரனுக்கு 'செந்தமிழ் மன்னர்', 'தமிழ் முகில்' ஆகிய இரு கௌரவ விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



# ஈரப்பலாக்காய்

## வீரியத்தை குறைக்குமா?

போர்த்துக்கேயர்கள் இந்தோனேசியாவுக்குப் போயிருந்த வேளையில் ஓர் இராணுவ அதிகாரி வேட்டையாடச் சென்றார். அப்போது ஒரு குரங்குக் கூட்டம் காலையிலேயே கங்கையொன்றைக் கடந்து கொண்டிருந்தது. மிகவும் அகலமான கங்கையின் இக்கரையிலிருந்து அக்கரைக்குக் குதித்துப் பாயும் குரங்குகளின் பலத்தைக் கண்டு அவர் வியப்படைந்தார். மாலைப்பொழுதில் அவருடைய வியப்பை மேலும் அதிகரிக்கும் ஒரு சம்பவத்தை அவரால் அவதானிக்க முடிந்தது. அதாவது கங்கையின் அக்கரைக்குச் சென்று உணவைத் தேடி உண்டு விட்டு வந்து கொண்டிருந்த எல்லாக் குரங்குகளும் நதியைத் தாண்டுவதற்காக இந்தக் கரையை நோக்கிக் குதிக்கும் பொழுது நடுக்கங்கையில் விழுந்து இறந்ததைக் கண்டார். இதை உற்று நோக்கிய அவர் குரங்குகள் உணவு உண்டு விட்டுத் திரும்பிவரும்போது அவற்றின் பலம் குன்றியிருந்ததைக் கண்டார். குரங்குகளுக்கு நேர்ந்த இந்தக் கதியைப் பற்றி பல நாள்களாகப் பரீட்சித்துப் பார்த்த போர்த்துக்கேய இராணுவ அதிகாரி ஓர் அற்புதமான விடயத்தைக் கண்டுபிடித்தார்.



ஏதோ ஒரு மரத்தில் இருந்த ஒரு வகைக் காயை உண்டதன் பின்பு குரங்குகளின் பலம் குன்றியதைக் கண்டார். இதனாலேயே குரங்குகள் கங்கையைக் கடக்கும் பொழுது அதிலே விழுந்து இறக்க நேரிட்டதென்பதே இராணுவ அதிகாரி மேற்கொண்ட பரிசோதனையின் முடிவாக இருந்தது. இந்தக் கண்டுபிடிப்பைப் பற்றி அவர் தமது உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தார். ஈரப்பலாக்காய் வகைக் காய்களையே அந்தக் குரங்குகள் உண்டிருக்கலாம் என்பதே அந்த ஆய்வு. பேராசிரியர் ஜய தேவ உயங்கொட 1990களில் வெளியிட்ட கட்டுரையின் தொகுப்பில் இந்தத் தகவல் காணப்பட்டது.

– வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 க.துஸ்யந்தன்



# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையின்

# அழுத்தங்களும் அதிர்வுகளும்

இன்றைய நிலையில் மாணவர்களுக்கு மட்டுமல்ல பெற்றோருக்கும் மிகப் பெரும் சவாலாகத் தரம்05 புலமைப் பரிசில் பரீட்சை விளங்குகின்றது. இந்தப் பரீட்சை பெற்றோருக்குரிய பரீட்சையாக மாறிவிட்டது. உண்மையில் இந்தப் பரீட்சையை பிரச்சினைக் குரிய பரீட்சையாக மாற்றியவர்களாக பெற்றோரே காணப்படுகின்றனர்.

குறைந்த பொருளாதார வருமானமுடைய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் திறமை மிகுந்த மாணவரின் கல்வியைத் தொடர்வதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் தரம்5 புலமைப் பரிசில் பரீட்சை முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பாடசாலைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவருக்கு உதவிப் பணம் வழங்குவதற்காகவும் 5ஆம் தர மாணவருக்கு நடத்தப்படும் பரீட்சை என தரம்5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பெயர் சூட்டி பரீட்சையை நடத்தி வருகின்றது.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்து உதவிப் பணம் பெறுவதற்கான தகுதி நிலையாக வருடாந்த வருமானம் ரூபா 54,000 அல்லது அதற்குக் குறைவாகப் பெறும் பெற்றோரின் பிள்ளைகளுக்கே மாதாந்த உதவிப் பணமாக ரூபா 500 ப்படி வருடாந்தம் ரூபா 6,000 வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான பொதுவான அம்சங்களாகும். எனினும் இந்தப் பரீட்சையானது சிறு குருவியின் தலையில் மிகப் பாரமான பனங்காயை வைப்பதற்கு ஒப்பானது என்று கூறப்படுகின்றது. தலைநிமிர முடியாது தத்தளிக்கின்ற அந்தச் சிறு பறவையின் நிலைமையிலேயே இந்தப் பரீட்சைக்குரிய மாணவர்களும் உள்ளனர்.

பெற்றோர் தமது பிள்ளை தரம் 3 இல் கல்வி கற்கும் வேளையிலேயே புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய தயார் படுத்தல்களை ஆரம்பிக்கத் தொடங்குகின்றனர். அந்தப் பரீட்சையில் சித்தியடைந்தாக வேண்டும் என்ற சிந்தனை பிஞ்சு மனதிலே அச்சத்துடன் விதைக்கப்படுகின்றது. இந்தப் பரீட்சையில் ஏற்கனவே சித்தியடைந்த பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு கிடைத்த கௌரவம், மதிப்பு தொடர்பாகத் தம் பிள்ளைகளுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றனர்.



தரம் 3 இல் ஆரம்பிக்கும் தயார் படுத்தல்கள் தரம் 4 இல் வேகமாகி தரம் 5 இல் உச்சக் கட்டத்தை அடைகின்றது. பாடசாலைச் சமூகத்தினர் பாடசாலை நேரம், மாலை நேர வகுப்பு, சனி ஞாயிறு வகுப்பு என இந்தப் பரீட்சைக்காக மாணவருக்கான கற்பித்தல் நேரங்களை அதிகரிக்கின்றனர். அதே வேளையில் தனியார் கல்வி நிறுவனங்கள் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துகின்றனர். பெற்றோரும் தம் பங்குக்கு மாணவரின் பரீட்சைக்காகக் கூடுதல் முனைப்புக் காட்டுகின்றனர்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைப் பின்பற்றியே வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன என்று கூறப்பட்டாலும், உண்மையில் அதன் எல்லைகளை வரையறை செய்ய முடியாதுள்ளது. இதற்காக இந்த மாணவருக்கு பருவத்துக்கு மீறிய கல்வித்திணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பரீட்சைப் பாடத்திட்டத்தின் ஆழ அகலப் பரிமாணங்களால் பிள்ளைகள் தடுமாற்றம் அடைகின்றனர்.

இந்தப் பரீட்சையில் சித்தியடையச் செய்வதற்காக பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களில் பெருமளவான மாதிரிப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. கூடுதலான பெற்றோர் இந்தப் பரீட்சையில் மட்டும் ஆசிரியர்களின் கடுமையான தண்டனைகளை ஏற்றுக்கொள்கின்றனர். எவ்விதத்திலும் தமது பிள்ளைகளை இந்தப் பரீட்சையில் சித்தியடையச்செய்து விட வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோளாக உள்ளது.

மாதிரிப் பரீட்சைகளில் கூட குறைவான புள்ளிகள் தமது பிள்ளைகளுக்கு கிடைத்தால் பெற்றோரே அதிக புலம்பல்களுக்கு உட்படுகின்றனர். பெரியதொரு இழப்பு தமக்கு ஏற்பட்டதாக இவர்கள் கருதுகின்றனர்.



> பரீட்சையில் சித்தியடையச் செய்துவிட வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோளாக உள்ளது. மாதிரிப் பரீட்சைகளில் கூட குறைவான புள்ளிகள் தமது பிள்ளைகளுக்கு கிடைத்தால் பெற்றோரே அதிக புலம்பல்களுக்கு உட்படுகின்றனர். பெரியதொரு இழப்பு தமக்கு ஏற்பட்டதாக இவர்கள் கருதுகின்றனர். பெற்றோ ரின் இத்தகைய மனநிலையானது பிள்ளைகளை மிகுந்த அச்சத்துக்குள்ளாக்குகின்றது

பெற்றோரின் இத்தகைய மனநிலையானது பிள்ளைகளை மிகுந்த அச்சத்துக்குள்ளாக்குகின்றது. எமது உடலுள் இசைவாக்கமடையும் செயற்றிறன்களில் ஏற்படுத்தப்படும் மிகையான அழுத்தமே உளவியலில் நெருக்கீடு என்று சொல்லப்படுகின்றது. அதிகரித்த பரீட்சைகள், பரீட்சைகள் தொடர்பான அச்சம், ஆசிரியர் பெற்றோரின் தண்டனை என்பன தரம் 5 மாணவரிடையே உள நெருக்கீட்டை ஏற்படுத்துகின்றன. தரம் 5 இல்கற்கின்ற மாணவர்களுக்கு உடல்வியர்த்தல், தலையிடி, வயிற்றுநோ போன்ற நோய்கள் காணப்படுகின்றன. இந்த நோய்களுக்காக மருத்துவ நிபுணர்களிடம் தமது பிள்ளைகளைப் பெற்றோர் அழைத்துச் செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது.

சுதந்திரமாக விளையாடுதல், மகிழ்ச்சியாக உறவுகளுடன் கலந்துரையாடுதல், விருப்பமான நிகழ்வுகளுக்குச் சென்று வருதல், தொலைக்காட்சியில் விருப்பமான நிகழ்ச்சிகளைப் பார்வையிடுதல் போன்ற பிள்ளை களுக்குரிய இந்தப் பருவத்துக்கான சுதந்திர உரிமைகள் யாவற்றையும் இந்தப் பரீட்சை பறித்து விடுகிறது.

பாடசாலையின் கௌரவத்திற்காகவும் உறவினர் மத்தியில் தமது மதிப்புக்காகவும் உயிருள்ள ஜீவன்கள் வதைபடும் இடமாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாற்றமடைந்துள்ளது.

மாணவர்களின் விவேகத்திறன், சிந்தனைத்திறன் வளர இந்தப் பரீட்சை உதவ முடியும். எனினும் இங்கு மேற்கொள்ளப்படுகின்ற அதிகரித்த கல்வித் திணிப்பு எல்லாவற்றையும் மங்கச் செய்து விடுகின்றது.

புலமைப்பரிசிலில் சித்தியடையத் தவறிய மாணவர் சிலர் உயர் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

மெல்லக்கற்கும் மாணவருக்கு இந்தப்பரீட்சை மிகுந்த சோதனையை ஏற்படுத்து கின்றது. இதனைவிட இந்தப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவருக்கு நடத்தப்படுகின்ற பாராட்டு விழாவானது சித்தி பெறத் தவறிய மாணவர்களுக்கு மிகப் பெரிய மனச் சோர்வையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துகின்றது.

இதற்கு மாணவரின் உளநலம் பாதிக்காத வகையில் அவை அமைய வேண்டும். இதற்குப் பொருத்தமான கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்த நடவடிக் கைகள் மேற்கொள்ளலாம். அரசு அரசியல் நலன்களுக்கு அப்பால் மாணவர் நலன்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

*கட்டுரையாளர்: ஆசிரியர்*
*யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லாமே தலை கீழ் தான்

> ❝ சரியாக உரிய பக்கத்தில் ஒருவர் போக சைக்கிள் பக்கம் மாறி வந்து பாதசாரிகளுக்கும், மற்றைய வண்டிகளுக்கும் இடைஞ்சல் செய்வது நித்தம் நடைபெறுகின்ற நிகழ்வாகி விட்டது. அனேகமாக சைக்கிள் ஓட்டிகளே இவ்வாறு நடந்து பிரச்சினைகளை உருவாக்குகின்றனர்.


இளமதி

ஒப்புர ஒழுகு அதாவது ஊரோடு சேர்ந்து வாழுமாறு ஔவைப் பாட்டி எப்போதோ எங்களுக்குச் சொல்லிவிட்டார். நாம் ஆசிரியரின் கொடுமைக்குப் பயந்து அதைப்பாடமாக்கி ஒப்புவித்ததே ஒழிய, அதன் கருத்தை உணர்ந்து, கைக்கொள்வது இல்லை. உலகம் உயர்ந்தோர் மாட்டே என்பதால் சான்றோர் வழி நாம் நடப்பதே அழகு. ஊருக்கு ஊர் குழப்புவோர்கள் இருப்பார்கள். தானும் செய்யமாட்டார்கள். செய்பவனையும் சும்மா விடமாட்டார்கள். சட்டம் என்பது பாதுகாப்புக்கும், எமது உடைமைகளின் பாதுகாப்புக்கும்தான். உதாரணமாக வளர்ப்புப் பிராணிகளைக் கட்டிவளர்க்கச் சொல்வதில் அவற்றின் பாதுகாப்பும் அடங்கும். பசு தோட்டத்தில் பயிரை மேய்ந்தால் தோட்டக்காரர் அதைத் துன்புறுத்தக்கூடும். சட்டத்தை நாம் மீறுவது பிறரின் நன்மைகளைப் பாதிக்கும். எமது தெருக்களில் நித்தம் நடந்தேறும் விபத்துக்கள், அதனால் ஏற்படும் சாவுகள் ஊனங்கள் எல்லாவற்றுக்கும் காரணம் நான் மேலே கூறிய குழப்பக் காரர்களும், தலை கீழாக நடந்து கொள்பவர்களுமே. எமது தெருக்களை இறப்பாறு என்றுதான் கருதவேண்டியுள்ளது. கடவுளின் கிருபை இருந்தால் ஒழிய அதைக் கடக்க இயலாது. எமது பாடும் அதே விதமாய்த்தான் உள்ளது. தெருவுக்கு வந்தால் திரும்பவும் வீட்டுக்குப் போவது அதிர்ஷ்டமே! சிறப்பாக இடம்பெற்றுள்ள நூலில் மோட்சம் அடைய விரும்பும் ஒருவர் சந்திக்கிற பயங்கரங்கள் பல. எமது வீதிகளில் பயணிப்பதும் அவ்வாறே உள்ளது.

நடப்பவர்கள் வலது பக்கமாக போவார்கள், வண்டிகளில் போகிறவர்கள் இடக்கைப் பக்கமாகப் போவார்கள். நடப்பவர்கள் வரும் வாகனங்களை பார்த்துக் கொண்டு நடப்பர். இதனால் வாகனங்கள் மோதுவதற்குச் சந்தர்ப்பம் மிக மிகக் குறைவு. பக்கம் மாறினால் பின்பக்கமாக வருகின்ற வண்டிகள் மோதுவதற்கான சந்தர்ப்பம் அதிகம். காலி வீதி போன்றவற்றில் நடக்க வசதியான நடைபாதை உண்டு. ஆனால் அது பெரும்பாலும் எல்லா வீதிகளிலும் கிடையாது. காப்பெற் வீதிகளில் வெள்ளைக் கோட்டுக்கு வெளியில் நடப்பதும், கடக்க அடையாளம் இட்ட இடங் களில் கடப்பதும் ஆபத்தில்லை. பக்கம் மாறிப்போய் இறந்தால் நட்ட ஈடுகூடப் பெறமுடியாது. இதுவும் ஒரு வகையில் சட்டத்தை மீறுவதே! சரியாக உரிய பக்கத்தில் ஒருவர் போக சைக்கிள் பக்கம் மாறி வந்து பாதசாரிகளுக்கும், மற்றைய வண்டிகளுக்கும் இடைஞ்சல் செய்வது நித்தம் நடைபெறுகின்ற நிகழ்வாகிவிட்டது. அனேகமாக சைக்கிள் ஓட்டிகளே இவ்வாறு நடந்து பிரச்சினைகளை உருவாக்குகின்றனர். இப்படியானவர்களும், அதிக வேகமாக வருபவர்களும் பிறருக்குப் பயத்தை ஏற்படுத்துகின்றனர். இப்படிச் செய்யக்கூடாது என வாகன ஓட்டுனர்களுக்கான விதி கூறுகின்றது. வீதியைக் கடக்கப் பயந்து சிலர் பக்கம் மாறி சைக்கிள் ஓட்டுவது சர்வசாதாரணமாகி விட்டது. சொந்த ஊரவர்களுக்குச் சட்டத்தில் சலுகை என்று இல்லை. இதை கேட்பார் எவரும் இல்லை, எமது யாழ்ப்பாணத்துக்கு இது சாபக்கேடாய்ப் போய்விட்டது. பக்கம் மாறிப் பிரயாணம் செய்பவர்கள் தாங்களாய் திருந்துவார்களா? இல்லை நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் பார்வையாளராக நின்றால் யார்தான் என்ன செய்வது? பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற பழமொழியில் பாலினுடைய பாடுதான் எமக்கு. 1995 இல் இடம் பெயரும் போது கோப்பாய்ப் பாலத்தில் மோட்டார் சைக்கிளில் பிழையான பக்கத்தால் வந்த மீன் வியாபாரியை மக்கள் ஏச அவர் சொன்ன பதில் ஷெல்லடிக்கிற காலத்தில சயிற் என்று ஒன்றும் இல்லை என்பதே, அப்படித்தான் இப்பவுமோ? இத்தோடு ஓட்டோவும் சில வாகனங்களும் சிலவேளைகளில் திரும்பும்போது சிக்னல் லைட்டை ஒருபக்கம் போட்டுக் கொண்டு எதிர்ப்பக்கம் திரும்புவார்கள். இதனால் அவர்களுக்கு பின்னால் செல்பவர்கள் பாடு அவரவர் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. படகில் போன குரங்கு மாதிரித்தான் இவர்களும். இவர்களால் எல்லோருக்கும் ஆபத்து. மருதானார் மடச் சந்தியில் வாரம் தோறும் விபத்து, சாவு. இது வைரவர் பெருமானின் பிழை அல்ல, சட்டத்துக்கு மதிப்பளிக் காத மனிதரின் தவறான செயல்களால் வந்த வினை.

சனநெரிசல் உள்ள நேரங்களில் பிறர் அச்சம் கொள்ளும் விதமாகவும், பிறருக்கு இடைஞ்சலாகவும் சைக்கிளில் இரண்டு, மூன்று பேர் சமாந்தரமாகப் போதல், தெருக்கரைகளில் தரித்து நின்றுவிட்டு சிக்னல் போடாது வாகனத்தை எடுத்துச் செல்லல், இவை கே.கே.எஸ். வீதி போன்றவற்றில் நடந்தேறும் சம்பவங்கள். உள்ளூர் வீதிகளில் தொடைக்கு மேல் சண்டிக்கட்டுடன் சைக்கிளின் மேல் இருந்து கால் ஊன்றிக் கொண்டு நடுறோட்டில் நின்று கதைப்பது, ஓட்டோக்கள், கார்களை முறைத்துப் பார்க்கிறது எல்லாம் இடம்பெறுகின்றன. அதன் அர்த்தம் உனக்கு வேறு பாதை இல்லையோ? இது எங்கட றோட்டல்லோ? என்பதுதான்.

இவர்களை என்னென்பது? வவுனியா, மன்னார் வீதியில் மாடுகள் நடுவீதியில் படுத்திருக்க வாகனங்கள் கரையால் போகும். இவை எமது தெருக்களில் நித்தம் நடைபெறும் சம்பவங்களாகும். திருடனாய்ப்பார்த்துத்திருந்த வேண்டும் என்பார்கள். சம்பளம் பெறுபவர்கள் வேறு என்ன செய்கிறார்கள்? அதுபோல இவர்களையும் உரியவர் கள் உரிய முறையில் கவனிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண் மீதும் மக்கள் மீதும் பற்றுக்கொண்ட கர்ம வீரர் தமிழரசு சின்னத்துரை

ஆவூரன் க.திரவியம் ஜே.பி.

அமரர் தமது பிள்ளைகளோடு இங்கிலாந்து சென்று வாழ்ந்தாலும், ஒவ்வோர் ஆண்டும் இலங்கை வந்து செல்கின்றமை, ஆவரங்கால் சிவதலம் மற்றும் மக்கள் மேல் அவர் கொண்டிருந்த அதீத அக்கறையை வெளிப்படுத்தி நின்றது.

ஆவரங்கால் தமிழரசு சின்னத்துரை இந்தப் பூவுலகை விட்டுப் பிரிந்து கடந்த 10 ஆம் திகதியுடன் ஓராண்டு பூர்த்தியடைந்துள்ளது. தமிழ் மக்கள் மேல் தீராத அன்பும், தன்னை வழிநடத்திய தமிழ்த் தலைவர்களிடத்தில் மதிப்பும், மரியாதையும் கொண்டவர் அமரர் தமிழரசு க.சின்னத்துரை.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழரசுக் கட்சியின் ஆணி வேராக நின்று பெரியவர்கள், இளைஞர்கள், கட்சியின் தொண்டர்களுடன் தன்னையும் தமிழரசுக் கட்சியின் அசையாத கொள்கைப் பற்றாளனாக மக்கள் முன் வெளிப்படுத்தி நின்றார்.

ஆவரங்கால் கிராமத்தின் பெருமையை உலக மக்கள் என்றும், எப்போதும், அறிந்தவர்களாகத் தெரிய வைத்தார். தமிழரசுக் கட்சிக் கூட்டங்கள், தமிழரசுக் கட்சியின் மாநாடு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாடு முதலியவற்றை ஆவரங்கால் கிராமத்தில் நடத்தியவர். ஆவரங்கால் சிவதலம் வாழ் மக்களின் முன்னணித் தலைவர்களைத் தன் வழி நடத்தினார். தமிழரசு என்றால் ஆவரங்கால் சின்னத்துரைதான் என்று சில ஆண்டுகள் பேசப்பட்ட தலைவர் அவர். புத்தூர் கிராம சபையின் அங்கத்தவராகவும் யாழ்.மாநகரசபை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்து, கட்சியின் பதவிகள் பலவற்றைப் பெற்றுக்கொண்டார். நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்த அவர், தோல்விகளைக் கண்டும் சளைக்காதவர். இவர் தனது வீட்டின் சொத்தாக தமிழரசுக் கட்சியை வழிப்படுத்தினார். தனது வீட்டுக்கு தமிழரசி வாசம் என்று பெயர் சூட்டிப் பெருமைப்பட்டார். அவரின் முழு வாழ்வு அவருக்கு நிம்மதியைக் கொடுத்தது.

வலி.கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளராகக் கடமையாற்றிய அமரர், தமிழரசுக் கட்சியை வளர்ப்பதில் அயராது உழைத்தவர். ஆவரங்கால் மக்களின் நலன்களில் பற்றுக்கொண்ட அவர் நெசவு நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார். புத்தூர் கிழக்கு மக்களின் குடிதண்ணீர் தேவைக்கு உதவினார். கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கிய அமரர் சி.கதிரவேலுப்பிள்ளையை அணுகி வாதரவத்தைக் கிராம மக்களுக்கென குடிதண்ணீர் பாவனைக்கு உதவினார். வாதரவத்தை மக்களின் போக்குவரத்துக் கஷ்டத்தை உணர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்து வாதரவத்தை கிராமம் வரை பாடசாலைப் பிள்ளைகள், அரச உத்தியோகத்தர்களின் போக்குவரத்துக்கு வழிசெய்தார்.

அமரர் ஆவரங்காலில் இருந்து கப்பூது வரை செல்லும் வீதியைச் செப்பனிட அரும்பாடுபட்டார். இந்த வீதி இதுவரை புனரமைக்கப்படாமல் இருப்பது கண்டு கவலைப்பட்டார். மாகாண சபை அங்கத்தவர்களிடம் சென்று கப்பூது வீதியை புனரமைக்குமாறு பல தடவைகள் கேட்டு நின்றார்.

அமரர் தமது பிள்ளைகளோடு இங்கிலாந்து சென்று வாழ்ந்தாலும், ஒவ்வோர் ஆண்டும் இலங்கை வந்து செல்கின்றமை, ஆவரங்கால் சிவதலம் மற்றும் மக்கள் மேல் அவர் கொண்டிருந்த அதீத அக்கறையை வெளிப்படுத்தி நின்றது. ஆவரங்கால் சிவன் கோயில் கொடியேற்றத் திருவிழாவை முன்னின்று தானே செய்த சமயப் பற்றாளர் அவர். ஆவரங்கால் சிவன்கோவில் கிழக்கு வாசல் இராஜகோபுரத்துக்கு அடிக்கல் நட்டு கோபுரத்தை விரைவாக முடிக்க புலம் பெயர் மக்களிடம் உதவி கோரி இராஜகோபுரத்தைக் கட்டி முடிக்கப் பாடுபட்டார்.

சமூக சேவை இவரது இரத்தத்தோடு கலந்தது- தன்கையே தனக்குதவி, தமிழரசே தமிழருக்கு உதவி என்கின்ற ஒரு வரையறையைத் தனக்குள் வகுத்து தமிழ்த் தலைவர்களோடு சேர்ந்து ஒரு தொண்டனாக அமரர் வாழ்ந்து காட்டினார்.

கோப்பாய் தொகுதியின் புத்தூர் மேற்கு கிந்துசிட்டி கிராமத்திலும், செல்வநாயகபுரத்திலும் வீட்டுத் திட்டங்களை அமைக்கவும் அன்னார் முன்னின்று உழைத்தார்.

அமரர் முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் மு. திருச்செல்வத்துடன் மிக நெருக்கமாகப் பழகி புத்தூர் கிராம சபையில் பதினேழு வட்டாரங்களை உருவாக்கி சகல மக்களும் பங்கு கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்தார். அமரரின் வாழ்வோடு சமூகப் பணியும் நிறைந்து காணப்பட்டது. 1926ஆம் ஆண்டு வைகாசி மாதம் 28 ஆம் திகதி அவர் பிறந்தார். கடந்த ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி தனது வாழ்வை 89 ஆண்டுகள் வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்தார். அமரர் விட்டுச் சென்ற பணிகள் சிலவற்றை அவரது பிள்ளைகள் முன்னின்று செய்யும் வகையில், அவரின் ஆவரங்கால் இல்லத்தில், அமரரின் பெயரில் கடந்த 11 ஆம் திகதி அன்று நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பக் கல்வியில் பெற்றோரின் பங்கு

வை.சுதாஸ்கரன்



இலங்கையின் கல்வி வரலாற்றில் ஆரம்பக்கல்வி இன்றியமையாத ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. இது ஐந்து வயது தொடக்கம் பத்து வயது வரையான காலப் பகுதியையே குறிக்கின்றது. அன்னைமடியில் அரவணைத்த பிள்ளை பள்ளிவரும் பிஞ்சுப் பாலகனாய்... என்ற ஆசிரியர் கீதத்தின் சீர்களில் இருந்து பெற்றோரின் அரவணைப்பில் முழுமையாக வாழ்ந்த பிள்ளை ஐந்து வயது நிரம்பியதும் தனது ஆரம்பக் கல்வியைக் கற்பதற்காக பாடசாலை நோக்கி பெரும் எதிர்பார்ப்புக்களோடு புதிய ஒரு சூழலை அறிந்து கொள்வதற்காக வருகின்றான். இந்த நிலையில் கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிள்ளையை அறிவோம் செயற்பாடுகள் பதினாறும் எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது கண்கூடு. இதன் மூலம் மாணவர்களின் இயலுமை இயலாமைகளை நன்கு இனங்கண்டு அதற்கேற்ப குறித்த ஆசிரியரால், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் பிரகாரம் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு ஆரம்பக் கல்வி பகுதித் தலைவர் மற்றும் அதிபரின் அனுமதி பெற்ற பின்னரே வகுப்பில் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்கள் குறித்த முதன்மை நிலைகளுக்கு ஏற்ப தேர்ச்சிமையக் கல்வியை இலக்காகக் கொண்டு அவை செயற்படுத்தப்படுகின்றன என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான நன்கு திட்டமிடப்பட்ட வகையில் புதிய கல்விச் சீர்திருத்தங்களுடன் செயற்படுத்தினாலும் ஆரம்பக் கல்வி என்பது கல்வியியலாளர்களால் பெற்றோருக்கான கல்வி என்பது வலியுறுத்தப்படுகின்றது. ஏனெனில் ஒரு நாளின் சிறுபொழுதையே ஆரம்பக் கல்வி முதன்மை நிலைக்கு ஏற்ப முதலிரண்டு தரங்களிலும் நான்கு மணித்தியாலங்களும் முதன்மை நிலை இரண்டில் ஐந்தரை மணித்தியாலங்களும் முதன்மை நிலை மூன்றிலே ஆறு மணித்தியாலங்களுமே பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வரையறுக்கப்பட்ட மணித்துளிகளில் பாடசாலைகளில் நடைபெறும் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் விஞ்சி கற்றல் கற்பித்தல் செல்நெறிகள் திட்டமிடப்பட்ட வகையில் நடைபெறுகின்றன. எவை எவ்வாறு நடைபெற்றாலும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்பார்த்த மட்டத்தை அடையவில்லை என்பது பெறுபேறுகளின் முடிவாகும். இந்த நிலையிலேயே ஆரம்பக் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகிறது. இதனை வண்டியோடச் சக்கரங்கள் இரண்டும் மட்டும் வேண்டும் இரண்டில் ஒன்று சிறியது என்றால் எந்த வண்டி ஓடும் என்ற தென்னிந்தியத் திரைப்படப்பாடல் இங்கு ஈண்டு நோக்கத்தக்கது. அதாவது ஆசிரியரின் பங்களிப்போடு பெற்றோரின் விழிப்புணர்வும் முழுமையான ஈடுபாட்டுடன் கூடிய பங்களிப்பும் காணப்படுமேயானால் நிச்சயமாக ஆரம்பக்கல்வி என்பது எட்டாக்கனியாகாது. பசுமரத்து ஆணிபோல பிஞ்சு உள்ளங்களில் இலகுவாகப் பதியக்கூடிய ஆரம்பக் கல்வியில் பெற்றோர் தமது வேலைச் சுமைகளுக்கு மத்தியிலும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தமது எதிர்காலச் சந்ததியின் உன்னதமான வாழ்வை கருத்திற் கொண்டு தமது பிள்ளைகளோடு தினமும் சில மணித்துளிகள் பயனுள்ள கல்விக்காக செலவு செய்வார்களானால் முதுமைக்காலத்தில் பிள்ளைக்காகச் சேர்த்து வைத்த பெரும் செல்வம் கல்வி என்று சொல்லக் கூடியதாக தானும் வாழ்ந்து தனது பிள்ளையையும் வாழவைக்க முடியும் என்பதில் ஐயமில்லை. இதனால் பெற்றோர்களே! 'கேடில் விழுச் செல்வம் கல்விச் செல்வம்' என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க எமது பிள்ளைகளுக்கான விலைமதிக்க முடியாததும் தன்தேசமல்லாது எத்தேசத்திலும் சீரும் சிறப்புடனும் தலை நிமிர்ந்து வாழ வைப்பதற்கு பாடசாலையோடு பெற்றோராகிய நீங்களும் சேர்ந்து செயற்பட வேண்டும். செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையோடு எனது சிறிய கட்டுரையைப் பூர்த்தி செய்கிறேன்.

இரு கரம் தட்டுவோம் ஓசை ஓங்கி ஒலிக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகத்தின் ஊற்று மானிப்பாய் இந்து

எஸ்.ரி.அருள்குமரன்



நாடகம் மக்களது வாழ்வில் உள்ள பிரச்சினைகளை வெளிப்படுத்துவதுடன் பங்குபற்றுபவர்களிடையே தளமாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. அரங்கிலே ஆற்றுகையாளர்களாகச் செயற்படுகின்றபோது தாம் எதிர்கொள்கின்றபிரச்சினைகளை இனம் கண்டு அந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளை அமைத்துக் கொள்வதிலும் வெற்றி பெறுகின்றனர். அரங்க அளிக்கையானது பார்ப்போருடன் நேரடித் தொடர்புடையதாக விளங்குவதனால் உயிர்ப்பான கலைவடிவமாகின்றது.

அரங்கின் தேவை சமூகத்தால் இன்றும் உணரப்படுவதற்கு அதன் தாக்கத்துடன் கூடிய செயற்பாடு காரணமாகின்றது. அரங்காடலின் மூலம் மாணவர்களிடையே தொடர்பாடல் திறன் விருத்தியடைவதுடன் தலைமைத்துவப்பண்பு, எல்லோரையும் சமமாக ஏற்றுக்கொள்கின்ற மனநிலை, குரூரம் அற்ற தன்மை, பிற்போக்கு அற்ற மனவுணர்வு, தன்னலமற்ற உணர்வு போன்ற பல பண்புகள் இயல்பாகவே உருவாகின்றன.

நாடகச் செயற்பாட்டுக்கான தளங்கள் விரிந்து காணப்படுகின்ற சூழ்நிலையில் பாடசாலைகள் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற களவெளிகள் காத்திரமானவையாக விளங்குகின்றன. எண்பதுகளில் முனைப்புப் பெற்ற அரங்க வடிவமாக பாடசாலை அரங்குகள் காணப்பட்டன. பாடசாலைகள் நிகழ்த்துகின்ற விழாக்களில் ஒரு பகுதியாக நாடகங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றபோதிலும் நாடகங்களுக்கென தனியொருநாள் ஒதுக்கி விழா நடத்தப்படுவதென்பது குறைவாக உள்ளது.



முன்னைய காலங்களில் பாடசாலைகளில் இல்லங்களுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகள் நிகழ்த்தப்படுவது போன்று நாடகப் போட்டிகள் நிகழ்த்தப்பட்டன. ஆயினும் காலப்போக்கில் அத்தகைய வழக்கொழிந்து போயுள்ள சூழ்நிலையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியானது அறாத்தொடர்ச்சியுடன் இன்றுவரை நாடகவிழாவைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றது. அந்த வகையில் இக்கல்லூரிக்கு நீண்ட வரலாறு உண்டு. நவீன நாடகத்தின் தந்தையான கலையரசு சொர்ணலிங்கம் கற்ற பாடசாலையாகவும் இது விளங்குகின்றது. அதன் தொடர்ச்சியாக பல கலைஞர்களைப் பிரசவித்ததுடன் இன்றும் இப்பாடசாலை பிரசவித்துக் கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் அரங்கத் துறையில் அண்மைக்ககாலத்தில் தேசியமட்டத்தில் மாணவர்கள் சாதனை படைத்து வருகின்றனர். 2012 ஆம்ஆண்டு கு.திலக்சனும், 2013ஆம் ஆண்டு யே.சானுஜனும், ந.மோகனராஜும் தேசிய வெற்றிகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர். இந்தவகையில் கல்லூரியில் இடம் பெறுகின்ற நாடக விழாவானது பல கலைஞர்களுக்கு வரப்பிரசாதமாக அமைகின்றது. நாடக விழாவில் மாணிக்கர், சம்பந்தர், சுந்தரர், வாகீசர் ஆகிய நான்கு இல்லங்களுக்கிடையேபோட்டிகள்நிகழ்த்தப்படுகின்றன. இந்த வகையில் இந்த வருடத்துக்கான நாடகவிழா எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரியின் முதல்வர் மே.இந்திரபாலா தலைமையில் இடம் பெறவுள்ளது.

> நாடகச் செயற்பாட்டுக் கான தளங்கள் விரிந்து காணப்படு கின்ற சூழ்நிலையில் பாடசாலைகள் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற கள வெளிகள் காத்திர மானவையாக விளங்கு கின்றன.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் நாடகக் கலைஞரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மொழிபெயர்ப்புக் கற்கைகளின் இணைப்பாளருமான மூத்த ஆங்கில மொழித்துறை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா-ஸ்ரீகணேசன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக நாடகக் கலைஞர் எஸ்.வி.தயாநிதி கலந்து கொள்ளவுள்ளார். இம்முறை கல்லூரியின் பழைய மாணவனும் நாடறிந்த நாடகவியலாள ருமான கந்தையா-ஸ்ரீகந்தவேளின் நாடகப் பிரதிகள்வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தர் இல்ல மாணவர்களது நடிப்பில் 'மீட்டும் நினைவுகள்', மாணிக்கர் இல்ல மாணவர்களது நடிப்பில் 'எதிர்பார்ப்பு நிஜந்தானா?', வாகீசர் இல்ல மாணவர்களது நடிப்பில் 'கருவறையிலிருந்து....', சுந்தரர் இல்ல மாணவர் களது நடிப்பில் 'தேரார் வீதியில்' ஆகிய நாடகங்கள் மேடையிடப்படவுள்ளன.

இங்கு வெற்றி தோல்விகள் மாணவர்களுக்கு முக்கியமாகக் கருதப்படவில்லை. நாடகப்படைப்புக்கள் சமகாலத்தில் குறைந்து செல்கின்றது என்ற கருத்தாடல்கள் முன்வைக்கின்ற பொழுது இத்தகைய விழாக்களின் மூலம் நாடகச் செயற்பாட்டுக்கான உயிர்ப்பை வெளிக்கொண்டு வருதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெறுமனே நாடகங்களை மேடையிடுதல் என்கின்ற மையவெளிகளைத் தாண்டி நவீன நாடகம் சார்ந்த புரிதல்களையும் அரங்கின் ஊடாக அடையக்கூடிய சாத்தியங்களையும் கண்டறிதலை இந்த நாடக விழாக்கள் அடைய எத்தனிக் கின்றன. இந்த விழா மாணவர்களது பங்குபற்றலுக்கான களவெளிகளை ஏற்படுத்தி அவர்கள் சுயசிந்தனையுள்ளவர்களாகவும் புதியன படைப்பவர்களாகவும் உருவாகவேண்டும் எனும்நோக்கில் இடம்பெறவுள்ளது. மேலும் அவர்களுக்கான மனத் தடைகள் அகற்றப்பட்டு எதையும் எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்கான புறச்சூழ் நிலைகள் உருவாக்கப்பட வேண்டும் எனும் வகையில் களவெளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



*கட்டுரையாளர்:*
*இணைப்பாளர் - நாடக விழா 2016,*
*மானிப்பாய் இந்துக்கல்லூரி.*



## நூல் வெளியீடு

சர்வதேச சித்திரவதைக்கு எதிரான தினத்தையொட்டி கடந்த 26ஆம் திகதி திருகோணமலை குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் ஏற்பாட்டில் மனவடுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிறந்த உளவியல் தலையீடுகள் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் கிழக்கு மாகாண பிராந்திய நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எஸ்.சத்தீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கத்தின் தவிசாளர் வைத்தியர். ஞானகுணாளன், சட்டத்தரணி. எஸ்.திருசெந்தில்நாதன், மூத்த ஊடகவியலாளர் பொ.சற்சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டதோடு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எஸ்.யேசுதாஸ்

# திருமறைக் கலாமன்றம் முன்னெடுத்த பெருமை மிகு

# கூத்துக் கலைக் கூடல்

இயல், இசை, நாடகம் என்பது தமிழர் வாழ்வோடு பின்னிப் பிணைந்த கலை அம்சங்களாகும். தமிழர் தம் வரலாற்றையும் பண்பாட்டையும் வீரதீரச் செயல்களையும் சமயக் கதைகளையும் மனித விழுமியங்களையும் சமகால தலைமுறைக்கு எடுத்துக் கூறுவதோடு, எதிர்காலச் சந்ததிக்கு ஒப்படைக்கும் சிறந்த ஊடகமாக இவை விளங்குகின்றன. இதில் நாடகம் காண்பிய அளிக்கைகள் வழியாக மக்கள் மனம் மகிழும் விதத்தில் கருத்துக்களை–கதைகளை சிந்தையில் பதிய வைக்கும் ஒப்பற்ற கலைவடிவமாகும்.

ஈழத் தமிழர் வரலாற்றில் நாடகம் கூத்து வடிவில் பாரம்பரியமாக ஆடப்பட்டு வருகிறது. தென்மோடி, வடமோடி, காத்தான், வசந்தன் கூத்துக்கள் போன்ற கலை வடிவங்கள் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபட்ட ராக தாள ஆட்ட முறைமைகளுடன் அந்தந்தப் பிரதேசத்துக்கு உரித்தான சொத்தாக இன்றுவரை பேணப்பட்டு வருகின்றன. இவ்வாறான கூத்துக்களை ஒரே மேடையில் காண்பதென்பது கிடைத்தற்கரிய பாக்கியமாகும். இந்த அரிய சாதனையை திருமறைக் கலாமன்றம் கடந்த வாரம் (18.06.2016) நடத்திய கூத்துக் கலைக் கூடல் மூலம் நிகழ்த்தியிருக்கின்றது. உண்மையில் இதைக் கூத்துக் கலைகளின் சங்கமம் என்று சொன்னால் மிகையில்லை. படச்சட்ட மேடையில் ஆற்றுகைகளை பார்த்து வந்த இரகசியர்களை மைதான மத்தியிலமைந்த பழைமைவாய்ந்த மரபுவழி வட்டக்களரிக்கு அழைத்துச் சென்றமை பலநூற்றாண்டுகளுக்கு முன்னைய நிலமையைச் சிந்திக்கத் தூண்டியது. மட்டக்களப்பு, முல்லைத் தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கட்டுவன், சுழிபுரம் பிரதேசக் கூத்துகள் இடம் பெற்றன.

திருமறைக் கலாமன்ற அரங்க மைதானத்தில் கூத்து நிகழ்வுகளும் நூல் வெளியீடும் கலைத்தூது மண்டபத்தில் கருத்தமர்வும் கண்காட்சியும் இடம்பெற்றன. திருமறைக் கலாமன்ற நிர்வாக இயக்குநர் அருட்திரு.ஜெறோ செல்வநாயகம் அடிகள் தலைமையில் இடம்பெற்ற



முதலாம் நாள் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தா கலந்து கொண்டார்.

முல்லைத்தீவு–முள்ளியவளை காட்டா விநாயகர் நாடக மன்றத்தின் கோவலன் கூத்து முதலில் இடம்பெற்றது. 150 வருடங்களுக்கு மேலாக மரபு வழியாகத் தொடர்ந்துவரும் இந்தக் கூத்து சிலாவத்தைக் கடற்கரையில் மிதந்து வந்த பெட்டகத்திலிருந்த ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு பாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பாடகர்கள் வாத்தியங்கள் சகிதம் மேடை நடுவே நிற்க நடிகர்கள், வட்டவடிவாக சுழன்று நடிக்கும் முறை வித்தியாசமாக இருந்தது.

இயற்கையையும் கலையால் வசமாக்க முடியும் என்பதற்கு உதாரணமான வசந்தன் கூத்து கட்டுவன் மு.சிவப்பிரகாசம் குழுவினரால் மேடையேற்றப்பட்டது. கையில் கோல் கொண்டு ஆடும் இந்தக் கூத்தின் 84 வகையான ஆட்டங்களில் 16 ஆட்டங்கள் அளிக்கை செய்யப்பட்டன. கட்புல செவிப்புல ரசனைக்கு இது மிகவும் ரம்மியமாக அமைந்தது. இறுதியாக சுழிபுரம் அண்ணா முத்தமிழ் கலாமன்றத்தின் தர்மபுத்திரன் வடமோடிக் கூத்து அரங்கை அதிர வைக்கும் ஆட்டத்துடன் நிகழ்த்தப்பட்டது.

இரண்டாம் நாள் காலை நிகழ்வுகள் கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. மாறுபட்ட கூத்துக்களின் வகை வகையான வேட உடைகள் ஒப்பனைப் பொருள்களைக் கொண்ட கண்காட்சியை நிர்வாக இயக்குநர் அருட்திரு .ஜெறோ செல்வநாயகம் அடிகள் ஆரம்பித்து வைத்தார். கூத்தையும் அதன் பாரம்பரியத்தையும் புரிந்து கொள்ளல் என்னும் தலைமையில், பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜ்குமார் தலைமையில் கருத்தமர்வு இடம் பெற்றது. விளக்கவுரைகள் காண்பியப்பகுதிகள், கூத்துக் கலைகளில் பிரதிபலிக்கும் சமூக ஊட்டம் தொடர்பான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன. நவீன இலத்திரனியல் நுகர்வுக் கலாசாரம் காண்பியக் கூத்துக்களைப் பலவீனமடையச் செய்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

பாரம்பரிய மரபுக் கூத்துக்களை அழிய விடாது அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்கும் நோக்கில் இடம்பெற்ற கூத்துக்கலைக்கூடல் விழிப்புணர்வின் ஆரம்பப்படியாக அமைந்தது எனக் கூறலாம். ஏனெனில் இரண்டு நாள் நிகழ்வுகளிலும் புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் நகரப் பாடசாலைகள் பளை மத்திய கல்லூரி மாணவர்கள் பெருமளவில் வருகை தந்திருந்தமை இதற்குச் சான்றாகும்.

இரண்டாம் நாள் நிகழ்வின் ஆரம்பத்தில் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜ்குமார் எழுதிய அற்றைத் திங்கள் கூத்துருவ நாடக நூல்வெளியீடு இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரிய மா.வேல்நம்பி நூலை வெளியிட் வைக்க, மன்றத்தின் சட்ட ஆலோசக சட்டத்தரணி ஜொனி மதுரநாயக பெற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு விபுலானந்த கலைக் க கத்தின் அலங்கார ரூபன் தென்மோ நாட்டுக் கூத்து மன்னார் விழிகள் க மன்றம் வழங்கிய மாதோட்டபா கிலான இராமபாணம் ஆட்டக்கூத்து தி மறைக் கலாமன்றம் வழங்கிய எஸ்த கியார் தென்மோடி நாட்டுக் கூத்து எ பன வட்டக்களரியில் அளிக்கை செய் பட்டமை வெகு சிறப்பாக அமைந்திருந் இந்தப் பிரமாண்டமான கூத்துக்கலை சங்கமத்தில் பங்கேற்ற அண்ணா மார் பொனாடை போர்த்திக் கௌர கப்பட்டதோடு, அனைத்துக் கலை களுக்கும் நினைவுக் கேடயம் வழ மதிப்பளித்தமை கலைத்தாய்க்கு சிக வைத்தாற்போல் சிறப்பைச் சேர்த் இத்தனை பெருமையும் ஆரவாரமி சலசலப்பின்றி தமிழையும் தமிழர் மரபுவழி கலை, கலாசாரங்களை பொக்கிசமாக பேணிக்காத்து இளை தலைமுறைக்கு ஆர்வத்தையும் வி பையும் ஏற்படுத்தி, கலைச் சேவை றும் திருமறைக் கலாமன்ற இயக்கு அருட்திரு நீ.மரியசேவியர் அடிகளை சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# சீர்தனம் (சீதனம்) வழங்கலும் வாங்கலும் நியாயமானதா?

தேவிபரமலிங்கம்

சீதனம் பற்றி வாதப்பிரதி வாதங்கள் இன்றைக்கு நேற்று ஆரம்பமான ஒன்றல்ல. ஆனாலும் மனித சமுதாயம் தோன்றிய காலந் தொட்டு நீடித்துக் கொண்டிருக்கும் சமாச்சாரமும் அல்ல. எத்தனையோ மாற்றங்களுக்கு உட்பட்டு வளர்ந்து கொண்டிருக்கும் நாகரிக வழி முறைகளில் இது எத்தனையாவதோ என்பதும் தெரியவரவும் இல்லை. சமீப காலங்களில் ஊடகங்களில் சீதனம் பற்றிய அலசல்களைக் காணவும், வாசிக்கவும் முடிகின்றது. அதனால் எழுந்த சிந்தனைகளே இந்தக் கட்டுரைக் கான அடித்தளம் இட்டது எனலாம்.

தன மென்றால் செல்வம். பொன், பணம் சேர்ந்த சம்பத்து என்பர். அதனை சீயென்று எவருமே இகழ மாட்டார். ஆகவே தனத்துடன் கூடிய சீர், காணி, வீடு, விவசாய, பூமி அடங்கியவையாக அமைகின்றது.

**சீர்தனமா, சீதனமா?**

சீர், தனம் என்பது காலப்போக்கில் மருவி சீதனமாகி இருக்க வேண்டும். சீர்தனத்தைச் சீதனமாக்கியதால் அதுவே சீயென்றாகி எங்கும் எதிலும் எப்போதும் சீதனமாகி விட்டது.

சீர், தனம் கொடுத்தல், வாங்கல் தொடர்பான கேள்விகளும் எழுகின்றன. இப்பொழுதெல்லாம் நடைமுறையில் இருக்கின்ற மாதிரி பெண்பிள்ளைகளைத் திருமணச் சந்தையில் காட்டி மாப்பிள்ளைகளை வாங்கும் நடைமுறை மட்டும்தான் இருந்தது என்பதுமில்லை.

பெண்களைக் கல்யாணம் செய்வதற்குத் தகுதியாக ஆண்கள் பெண்களுக்கு சீர்தனம் வழங்கிய நடைமுறைகளும் தமிழர் பண்பாட்டு வரலாற்றில் பதிவாகி இருப்பதையும் காண்கிறோம். எப்படியோ சீர்தனம் வழங்கும் பண்பாட்டியல் தோன்றுவதற்குக் காரண காரியங்கள் இருந்திருக்க வேண்டும்.

அதனைச் சீர்தூக்கிப் பார்த்தால் சீர்தனம் வழங்கும் அல்லது வாங்கும் அல்லது சீர் தனத்தின் முக்கியத்துவம் பற்றி அறியமுடியும்.

**காப்புறுதி செய்தல்**

எமது சமுதாயம் ஆணொருவனின் உழைப்பில் மனைவி, மக்கள் சார்ந்து வாழும் நிலமையை அடித்தளமாகக் கொண்டதாக இருப்பதை நோக்கலாம். தற்போது மனைவியும் உழைத்து வாழும் குடும்பங்களைக் காணமுடிகின்றது.

இந்த அடிப்படையிலேயே பெண்ணொருவரைத் திருமணம் செய்து வைக்கும் பெற்றோர், தமது பிள்ளை கணவனை இழக்கவோ, பிரியவோ நேர்கையில் அவள் தன்னுடைய வாழ்வை தொடர்வதற்கான காப்புறுதி செய்வதாகச் சீர்தனம் வழங்கும் பண்பாடு நிலைபெற்றது.



அதுபோலவே திருமண பந்தத்தில் பெண்ணை இணை சேர்க்கும்ஆண்மகன் தான் உழைக்க முடியாமல் போனாலோ நோய்,விபத்துக்களால் தன்னை இழக்க நேரிடும் போதோ மனைவியும் மக்களும் வேறொருவ டமும் கையேந்தாமல் வாழவைக்கும் நோக்குடன் திருமணத்துக்கு முன்பாகத் தன்னிடமும் பொருளாதார ஸ்திரத்தை மேற்கொள்ளும் விதமாகச் சீர்தனம் கொண்டு வரவும், வாங்கவும் ஏதுவாகின்றது.

இவ்விதம் பெண்ணுக்கு வழங்கும் சீர்தனமும், ஆண் தன்னுடன் கொண்டுவரும் சீர்தனமும் எதிர்கால வாழ்வு சந்ததிகளின் நலன் கருதியதாக அமைந்து வந்து தமிழர் பண்பாட்டியல் இன்றி அமையாத மிகச் சிறந்த வழக்கமாக அமைந்திருந்தது.

எமது சமுதாயம் ஆணொருவனின் உழைப்பில் மனைவி, மக்கள் சார்ந்து வாழும் நிலமையை அடித்தளமாகக் கொண்டதாக இருப்பதை நோக்கலாம். தற்போது மனைவியும் உழைத்து வாழும் குடும்பங்களைக் காணமுடிகின்றது.

காலப்போக்கில் ஆணுக்கோ பெண்ணுக்கோ சீர்தனமாகக் கொள்ளப்பட்ட பரிமாற்றக் கலாசாரம் சந்தைப் பொருளொன்றைப் பேரம் பேசி வாங்குவதும் விற்பது போலவும் மாறிவிட்டது.

**சீர்தனம் வழங்கும் நோக்கம்**

இதனிடையே தற்கால நடைபெறும் கலாசார அமைப்பில் சீர்தனம் வாங்குவதோ கொடுப்பதோ இல்லாமல் சேர்ந்து வாழும் தம்பதிகளிடையே கப்பும், வளையும், பொறுக்கும்போது வாழ்வில் விரிசல்களை ஏற்படுத்தி விடுவதையும் பரவலாகக் காணக் கூடுகின்றது.

தற்போது சீர்தனம் என்னும் பொருளாதார அணுகுதல் இல்லாமல் திருமண பந்தங்களில் நுழைந்து கொள்ளும் கீழ்மட்டக் கலாசாரமே நாட்டில் புதிய பின்தங்கிய சேரி வாழ்வைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது.

சீர்தனம் எமது சமுதாயத்தில் இன்னொரு விதமான பண்பாட்டியலை வளர்த்து வந்துள்ளதும் கண்கூடு. வறுமைக் கோட்டில் இருக்கும் ஓர் ஆண் கல்வியால் அல்லது தொழில் துறையால் முன்னேறிவிட்டால். அவன் விற்பனைப்பொருளாக பேரம்பேசப்பட்டுதிருமணங்கள் நடைபெற்றும் வருகின்றன.

**சூறையாடப்படல்**

அத்தகைய ஒருவனைப் பொருளா தார வட்டத்துள் பெண்ணெடுப்பதனூடாகப் பெறப்படும் லட்சங்கள் அவனது பெற்றோருக்கும், திருமணம் ஆகாமல் காத்திருக்கும் பெண் சகோதரிகளுக்கும் வாழ்வெடுக்கவும் பயன்படுத்தப் பட்டு வருவ தொன்றும் புதியதல்ல.

தன்னுடைய பெண்பிள்ளை வாழப்போகும் குடும்பத்தில் சீரும் சிறப்புமாக வாழ வேண்டுமென வழங்கப்படும் சீர்தனம் இவ்வாறு சூறையாடப்படுகையில் மேற்கொண்டும் தாக்குப்பிடிக்கக்கூடிய குடும்பமெனில் தப்பித்துக்கொள்ளும். இல்லையேல் நடுத் தெருவுக்கு அல்லவா வர வேண்டும்?

மேற்கண்டவாறு சூறையாடப்படுகின்ற சீர்தனத் தொகை பற்றி ஏற்கனவே இருபகுதியினரும் ஒத்துப்போக முடியாத நிலையில் குடும்பங்களில் எரிமலை வெடிக்க நேரமா செல்லும்?

இந்தவிதம் சீர்தனத்தின் புனிதத் தன்மைக்கு மாசு ஏற்படுத்தப்பட்டுள்ள இன்றைய காலத்தில் சீர்தனம், சீதனமாகி விட்டிருப்பதை பரக்கக் காணலாம்.

சீர்தனம், பேரம் பேசியோ கண்டிப்பாகக் கேட்டுப் பெறுவதோ, வழங்கப்படுவதோ அல்ல. அதனை நவீன சட்ட வரைவுகளும் நிராகரித்துள்ளன. மனப்பூர்வமாக பெற்றோர், பிள்ளைகளும் சந்ததியும் நல்வாழ்வை அமைத்துக் கொள்ளக் கொடுக்கும் நன்கொடையே இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காலத்தின் விளிம்பு' நூல் வெளியீடு இன்றைய காலத்தின் தேவையாகும்

**து.துசியந்தன்**

எமது சமுதாயம் நோக்கிய நூல்களின் வருகை அருகி வரும் காலப்பகுதியில் மரபுரிமைகளைப் பாது காக்கவும், சமுதாய மட்டத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 'காலத்தின் விளிம்பு' என்ற நூலின் பிரசவம் காலத்தின் தேவையாகக் கருதப்படுகிறது. இந்த நூலானது யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் என்பவரின் தொகுப்பாக அமைந்துள்ளது.

உலகெங்கும் மரபுரிமை (Heritage) என்பது நாடுகள், தேசங்கள் இனக்குழுக்கள் ஆகியவற்றின் அடையாளமாக வும் அதன் வரலாறு மற்றும் பண்பாட்டின் சின்னங்களாக வும் அவற்றுக்கான தடயங்களாகவும் பார்க் கப்படுகின்றன. மேலும் பொருளாதார அபி விருத்திக்கான அடிப்படையாகவும் இது தொழிற்படுகின்றது. அதனால் நாடுகள் தோறும் மரபுரிமைகளைப் பாதுகாக்கவும் பேணவும் சட்டரீதியான செயற்பாடுகள் உள் ளிட்ட பலவகையான காப்புச் செயற்பாடுகள் உள்ளன. அதே நேரம் அவற்றில் மனித குல முதன்மை கருதி யுனெஸ்கோ முதலான சர்வ தேச நிறுவனங்கள் பலவிதமான சர்வதேச சட்டங்கள் மற்றும் காப்புச் செயற்பாடுகளா லும் அவற்றைப் பாதுகாக்கின்றன.



ஆனால் உலக வங்கியின் அறிக்கை யொன்று கூறுவது போல மூன்றாம் மண் டல நாடுகளில் அபிவிருத்தியின் பெயரால் மரபுரிமைகள் பெரிய அச்சுறுத்தலுக்குள்ளா கின்றன. மேற்படி கணிப்பீடு இலங்கைக்கு அதிலும் குறிப்பாக இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு அதிகம் பொருந்தும்.

இந்த அடிப்படையில் இந்த நூலானது எமது பாதுகாக்கப்பட வேண்டிய மரபுரிமைச் சொத்துக்களை அடையாளப்படுத் திக் காட்டுவதோடு அவற்றின் பழைமை, சிறப்பு என்பவற்றை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இந்த நூலிலே கதிரேசன் கோயில், சட்டநாதர் கோயில், மணிக்கூட்டுக் கோபு ரம், வட்டுக்கோட்டையில் உள்ள போர்த்துக்கேயர் கால தேவாலயம், கீரிமலை சிறாப்பர் மடம், புனித மாட்டினார் குரு மடம், யாழ்ப்பாணத்துக் கோட்டை, இணுவில் மக்லியோட் வைத்தியசாலை, சுதுமலை அம்மன் கோயில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபம் போன்ற பல மரபுரிமைச் சொத்துக்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எம்மவர்கள் மரபுரிமைகளை அழித்தும் அவற்றைப் பேணா தும் விடுவதால் அவை அழிந்து போகவும் காரணமாகிவிட் டார்கள். தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் அவர்கள் தம்முடைய மரபுரிமைகளைப் பாதுகாப்பதிலும் பேணுவதிலும் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள்.

பா.அகிலனின் காலத்தில் விளிம்பு என்ற இந்த நூல் நூலுக்குரிய அம்சங்களைச் சிறப்பாகக் கொண்டுள்ளது. இதன் அட்டைப் படம் சிங்கள ஓவியரான பிரதீப் தளுவத்த என்பவரால் சிறப்பான முறையில் கணினியில் வடிவமை க்கப்பட்டுள்ளது. உட்பகுதியில் காணப்படும் எமது மரபுரிமை சின்னங்களின் அமைப் புக்கள் ரேகைச் சித்திரமாக ப.பிரஷாந்தி னால் மிக நேர்த்தியாக வரையப்பட்டுள்ளது. அச்சுப் பதிப்பு கூட மிக நேர்த்தியாகவும் அழகுறவும் ஹரிகணன் அச்சகத்தாரால் அச்சிடப்பட்டுள்ளது.

இந்த நூலை முழுமையாகப் பார்க்குமிடத்து எம்மவர் மரபுரிமைச் சின்னங்களை அடை யாளப்படுத்தும் முதன்மையான முதல் நூலாக அமைவதோடு ஆவணப்படுத்தலில் ஓர் அங்கமாகவும் விளங்குகிறது. 2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வீதி அகலிப்பு நடைபெற்ற வேளையில் யாழ். பல்கலைக் கழக நுண்கலைப் பீடத்தின் நீதியான விழிப் பூட்டல் காரணமாக எம்மவர்களின் மரபுரி மைச் சொத்துக்கள் பல இடித்து அழிக்கப்படா மல் காப்பாற்றப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடக் கூடிய ஒன் றாகும். வடக்கின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியில் சுற்று லாத்துறை முக்கிய இடத்தைப் பெறப் போகிறது. எனவே இதனை வலுப்படுத்த எம்மவர்களின் மரபுரிமைச் சொத்துக்கள் பாது காக்கப்படுவதோடு சுற்றுலாவுக்குரிய பகுதியாக மாற்றிய மைக்கப்பட வேண்டியதும் அவசியமாகும். இந்த அடிப்படை யில் இந்த நூலானது இந்தப் பணிக்கு வலுச்சேர்க்கும் என்பது என்போன்றவர்களின் நம்பிக்கையாகும்.










கட்டுரையாளர்,
ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்),
யாழ்.கல்வி வலயம்.

# வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறிகள்

**ஆ.கோகுலகிருஷ்ணன்**

அகர முதல எழுத்தெல்லாம்... என்று தொடங்கி ஈரடிக் குறளில் உலகதத்துவங்கள் அனைத் தையும் திருக்குறள் என்னும் உன்னதப் படைப்பில் மக்களுக்கு எடுத்துச் சொன்னவர் திருவள்ளுவர். உலகளாவிய தத்து வங்களாகக் கொண்ட திருக்குறளைப் படைத்து உலக இலக்கிய அரங்கில் தமிழ் மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைபெறச் செய்தவர். இந்த உண்மையைப் பாரதியார், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்று புகழாரம் சூட்டியுள்ளார். இவர் உலக மக்களால் தெய்வப்புலவர், பொய் யாப்புலவர், நாயனார் தேவர், செந்நாப்போதர் பெருநாவலர், பொய்யாமொழிப் புலவர் என் றெல்லாம் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார். இவர் எழுதிய திருக்குறள் வாழ்வியலில் எல்லா அங்கங்களையும் இனம்,மொழி பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவது போல் கூறி உள்ளது. இதனால் திருக்குறளைச் சிறப்பிக்கும் முகமாக உலகப்பொதுமறை, முப்பால், ஈரடிநூல், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, தமிழ் மறை, வாயுரை வாழ்த்து, திரு வள்ளுவம், பொய்யாமொழி போன்ற பல பெயர் களில் சிறப்பித்து அழைக்கின்றனர்.



திருக்குறள் சங்கமருவிய காலத்தில் தோன்றிய நூலாகும். இந்த நூல் அறத்துப்பால், காமத்துப்பால், பொருட்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண் டது. இதில் 133 அதிகாரங்களும் 1330 குறள்களும் உள்ளடக்கியதாக வள்ளுவர் வடிவமைத்துள்ளார். செந்நாப்போதர் வாயுறை வாழ்த்தினூடாக மனிதர்கள் தம் அகவாழ்விலும் சுமுகமாகக் கூடி வாழவும், புற வாழ்விலும் இன்பமுடனும் இசைவுடனும், நலமுடனும் வாழவும் தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்குகின்றார்.

அறத்துப்பால் மனசாட்சி மற்றும் மரியாதை மற்றும் நல்ல நடத்தை போன்றவற்றை பாயிரவியல், இல் லறவியல், துறவியல், ஊழியல் என உட்பிரிவுகளில் தெளிவாக எடுத்துரைக்கின்றது. உதாரணமாக பாயிரவியல் அதிகாரம் இரண்டு நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து... என்னும் குறளில் உறுதி மிக்க சான்றோர் பெருமை உலகத்தில் அவர்கள் கூறும் மறைமொழிகள் காட்டிவிடும் என்பதை பறைசாற்றுகின்றார் வள்ளுவர்.

பொருட்பாலில் உலகவிவகாரங்களில் எவ்வாறு ஒழுங்கு முறையில்நடந்துக் கொள்வது என்பதை அரசியல், அமைச்சியல், அங்கவியல், ஒழிபியல் போன்ற உட்பிரிவுகளில் விளக்கியுள் ளார் உதாரணமாக அரசியல் அதிகாரத்தில் வருகின்ற அறன் அறிந்து மூத்த அறிவுடையோர் கேண்மை திறன் அறிந்து தேர்ந்து கொளல் என்னும் குறளடியினூடாக அறமும் முதிர்ந்த அறிவும் உள்ளவரது நட்பையே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற உன்னத சிந்த னையை விதைந்துரைக்கின்றார்.

இன்பத்துப் பாலில் ஆண்கள் மற்றும் பெண் களுக்கிடையேயான காதல் மற்றும் இன்பத்தை தெளிவாக களவியல், கற்பியல் என்ற தலைப் புக்களில் கூறுகின்றார். உதாரணமாக கற்பியல் அதிகாரத்தில் காதல் இவ்வழி மாலை கொலைக் களத்து ஏதிலார் போல வரும் எனும் குறளி னூடாக மாலைப் பொழுது காதலர் இல்லா விடத்து கொலைக் களத்திலே கொல்ல வருபவ ரைப் போல் வருகின்றது என்று காதலை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளார்

உலகப்பொதுமறை நூலினூடாக பெருநாவலர் உலக இலக்கிய அரங்கில் தமிழர்களை பெருமிதம் கொண்டு நெஞ்சில் நிமிர நிற்கும் படி செய்த உன்னத படைப்பாளி என்று கூறினால் மிகையாகாது.

கட்டுரையாளர்,
ஆசிரிய மாணவர்,
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







முன்னாள்
அதிபர் அமரர் சிவகொழுந்து காளிராசா
வின் நினைவு தினத்தை முன்னிட்டு, வவுனியா
கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ந. பார்த்தீபனின் 'மொழி'
கட்டுரை நூல் வெளியீட்டு விழா திருகோணமலை, உவர்மலை
விவேகானந் தாக் கல்லூரியில், கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அதி
பர். க. யோகானந் தன் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போது அவர் தலைமையுரையையும் ஆற்றினார். இந்த நிகழ்வின் முதன்மை
அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண கல்வி அமைச்சர்
சி. தண்டாயுதபாணி மங்கல விளக்கேற்றி வைத்தார். "நீங்களும் எழுதலாம்"
ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் விமர்சன உரையாற்றினார்.
நூலாசிரியர் பார்த்தீபன் நூலை வெளியிட்டு வைத்தார்.
(40)

# "ஆறிப்போன காயங்களின் வலி" நூல் வெளியீடு மன்னாரில்







பெண் போராளிகளின் பம்பைமடு தடுப்பு முகாம் வாழ்க்கை தொடர்பான ஒரு வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட நூல் ஒன்று கடந்த சனிக்கிழமை காலை மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

18 வருடங்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஒரு போராளியாக செயற்பட்டுத் தற்போது புனர்வாழ்வு பெற்றுள்ள வெற்றிச் செல்வி எழுதிய ஏழாவது நூலான, பெண் போராளிகளின் பம்பைமடு தடுப்பு முகாம் வாழ்வு தொடர்பான வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட "ஆறிப்போன காயங்களின் வலி" எனும் நூல் வெளியீடே இவ்வாறு இடம் பெற்றது.

ஆசிரியை தனலெட்சுமி கிறிஸ்துராஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நூல் வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மருத்துவப் போராளி திருமதி தனேஸ்குமார் சத்தியபாமாவும், கௌரவ விருந்தினராக சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் கலந்து கொண்டனர்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம், முன்னாள் போராளிகள், எழுத்தாளர்கள், மதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு, நூலைப் பெற்றுக் கொண்டனர்.

குறித்த நூலின் வெளியீட்டுரையை தீபச் செல்வன் ஆற்றினார். மதிப்பீட்டுரையை கோகிலவாணியும், ஏற்புரையை நூலாசிரியர் வெற்றிச்செல்வியும் நிகழ்த்தினர்.

குறித்த நூலில் என்ன அடங்கியுள்ளது என்பதை அறிந்து கொள்ளப் புலனாய்வுத் துறையினர் பலர் நூல் வெளியீடு செய்யப்பட்ட அடம்பன் மத்திய மகா வித்தியாலயப் பாட சாலையையும் நிகழ்வு இடம்பெற்ற மண்ட பத்தையும் சூழ்ந்து கொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் அறையில்...

**கிரைன்டர் பயன்படுத்தும் முறை**
கிரைன்டரில் மா அரைக்கும் போது நின்ற நிலையில்தான் கிரைன்டரைப் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஏற்றவாறு கிரைன்டரைச் சற்று உயரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதை விடுத்து கிரைன்டரைத் தரையில் வைத்துவிட்டு அடிக்கடி குனிந்து, நிமிர்ந்து வேலை செய்யும்போது முதுகுப் பகுதிகளில் இருக்கும் தசைகளில் இறுக்கம் ஏற்பட்டு, முதுகுவலி உண்டாகும்.

**பொருள்களை எடுக்கும் முறை**
சமைக்கும் போது திடீரெனப் பின்னால் இருக்கும் ஒரு பொருளை எடுக்க வேண்டி இருந்தால், கைகளை மட்டும் பின்னே நீட்டி அந்தப் பொருளை எடுப்பது முற்றிலும் தவறு. அப்போது இடுப்புப் பகுதித் தசைகளில் இறுக்கம் ஏற்பட்டு இடுப்புவலி வரும். அதாவது, கண்ணுக்குத் தென்படும் தூரத்தில் இருக்கும் பொருள்களை மட்டுமே உடலைத் திருப்பாமல் கைகளை மாத்திரம் நீட்டி எடுக்கலாம். பார்வைத் தூரத்துக்கு அப்பால் இருக்கும் பொருள்களை எடுக்க, நாம் முழுவதுமாக அந்தப் பொருளை நோக்கித் திரும்பியே ஆக வேண்டும். அதுதான் நல்லது.

**காய்கறிகளை வெட்டும் முறை**
காய்கறிகளை வெட்டும்போது, நின்றுகொண்டு வெட்டுவது தான் நல்லது. அப்போதுதான் எமது உடலில் இருக்கும் மொத்த சக்தியும் முறையாகப் பயன்படுத்திக் காய்கறிகளை வெட்ட முடியும். உடலில் தேவை இல்லாமல் வலி ஏற்படாது. அமர்ந்து வெட்டினால், கைகளில் இருக்கும் சக்தியை மட்டுமே பயன்படுத்தி வெட்ட முடியும். இதனால் கைகளில் வலி ஏற்படும்.





# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 500 | 600 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 700 | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 600 | 600 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 450 | 500 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 400 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 300 | 360 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | – | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 300 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 350 | 400 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |



## இது புதுசு
### கிளாஸ் பேப்பர் வெயிற்

கிளாஸ் பேப்பர் வெயிற்றுக்கள் அறிமுகமாகியுள்ளன. வெவ்வேறு பட்ட வடிவங்களில் விற்பனை செய்யப் படுகின்றன. இவற்றை அன்பளிப்புப் பொருளாகவும், மேசை அலங்காரப் பொருளாகவும் பயன்படுத்த முடியும். இது 200 ரூபாவில் இருந்து 400 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

## நாளை ஆனி-16

வியாழக்கிழமை - 30.06.2016
திதி: ஏகாதசி பி.இ.01.42 வரை
நட்சத்திரம்: பரணி பி.இ.12.52 வரை
ராகுகாலம்: 01.26-02.56 வரை
சுபநேரம்: 07.26-08.56 வரை
ஏகாதசி விரதம்

# மாங்காய் சட்னி


## தேவையானவை

பெரிய மாங்காய் – 2
வினிகர் – 200 மி.லி.
செத்தல் (காய்ந்த) மிளகாய் – 5
இஞ்சி ஒரு துண்டு
உள்ளி –3 பற்கள்
சீனி– ஒன்றரைக்கரண்டி
உப்பு – ஒரு தேக்கரண்டி

## செய்முறை

தோலைச் சீவி கழுவி வெட்டிய மாங்காயுடன் வினிகரைச் சேர்த்து அரைக்கவும். அரைத்தவற்றை ஒரு தட்டில் எடுத்து வைக்கவும். மிக்ஸியில் காய்ந்த மிளகாய், இஞ்சி, உள்ளி, வினிகர் ஆகியவற்றைச் சேர்த்து அரைக்கவும்.
அரைத்தவற்றை இன்னொரு தட்டில் எடுத்து வைக்கவும். அடுப்பில் சட்டியை வைத்து சூடாக்கி அதில் அரைத்த மாங்காய், அரைத்த மிளகாய் இஞ்சி, உள்ளிக் கலவை, சீனி, உப்பு, வினிகர் ஆகியவற்றைச்சேர்த்து நன்றாகக் காய்ச்சவும். அடுப்பில் உள்ள கலவை கொதித்து கூழ்ப்பதமாக வரும்போது அந்தக் கலவையை அடுப்பிலிருந்து இறக்கவும்.
அடுப்பிலிருந்து இறக்கிய கலவையை ஆறவிடவும். அந்தக் கலவையை ஓரளவு சூட்டுடன் தொற்று நீக்கிய போத்தலில் போட்டு இறுக்கி மூடி வைக்கவும்.
சட்னி தேவைப்படும்போது ஒரு தட்டில் சாதம், இடியாப்பம், புட்டு இவற்றில் ஒன்றைவைத்து அதனுடன் சுவையான இந்தச் சட்னியை வைத்துப் பரிமாறலாம்.





# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 160 | 80 | 60 | – | 60 |
| கத்தரி | 80 | 80 | 80 | 100 | 60 | 100 | – | 40 |
| கரட் | 300 | 250 | 160–300 | 240 | 300 | 250 | – | 160 |
| மரவள்ளி | 100 | 70 | 70 | 80 | 80 | 60 | – | 50 |
| பயிற்றை | 100 | 100 | 100 | 120 | 140 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 200 | 240 | 180 | 120 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 200 | 120 | 120 | 160 | 140 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 140 | 180 | 140 | 120 | – | 160 |
| பூசணி | 80 | 80 | 80 | 120 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 200 | 260 | 240 | 240 | 200 | 200 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 | 120 | 60 | 60 | – | 40 |
| கீரை | 15 | 30 | 30 | 20 | 20 | 20 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 45 | 20 | 30 | – | 10 |
| பச்சை மிளகாய் | 700 | 600 | 600 | 600 | 600 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 80 | 70 | 120 | 120 | 80 | – | 100 |
| கோவா | 150 | 140 | 180 | 240 | 140 | 150 | – | 140 |
| வெண்டி | 100 | 100 | 100 | 120 | 140 | 120 | – | 80 |
| போஞ்சி | 200 | 140 | 180 | 240 | 220 | 240 | – | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 140 | 240 | 160 | 120 | – | 150 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–35 | 20–30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 80 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 | 240 | 200 | 160 | – | 280 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10–15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 200 | 240 | 300–350 | – | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 700 | 500 | 550 | 800 | 800 | 600 | – | 350 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: விதயா



**மேடம்:** செயல் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழிலில் வியாபாரத்தில் தடை குறுக்கிடலாம். எதிர்பார்த்ததை விட இலாபம் குறையும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது அவசியம்.

**இடபம்:** நற்குணம் உள்ளவரின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் வளர்ச்சி பெறும். பெண்கள் வீட்டுச் செலவில், ஆடம்பர நோக்குடன் செயற்படுவர். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** பெருந்தன்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். வருமானம் திருப்தியளிக்கும். அரசியல்வாதிகளுக்குப் பிரச்சினையில் சாதகமான முடிவு கிடைக்கும்.

**கடகம்:** இடம் சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழிலில் இடையூறைத் தாமதமின்றிச் சரி செய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**சிங்கம்:** நண்பரிடம் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாவர். சீரான ஓய்வு உடல் நலனுக்கு வழிவகுக்கும்.

**கன்னி:** எதிர்பார்ப்பு சிறப்பாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் உயரும். அமோக இலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனருக்கு இயன்ற வகையில் உதவுவீர்கள்.

**துலாம்:** கடவுள் அருளால் நன்மை காண்பீர்கள். தொழில் வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும். குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**விருச்சிகம்:** பணிகளில் தாமதம் உருவாகலாம். சக தொழில் வியாபாரம் சார்ந்தவர்களிடம், நிதானமுடன் பேசுவது நல்லது. பெண்களுக்கு செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**தனுசு:** அன்றாட வாழ்வில் மாறுபட்ட சூழலைச் சந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய அணுகுமுறையால் நஷ்டத்தை ஈடுகட்டுவீர்கள். பண விடயத்தில் எச்சரிக்கை தேவை. தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**மகரம்:** உற்சாக மனதுடன் பணிபுரிவீர்கள். தொழில் வளர்ச்சியால் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து, பாராட்டுப் பெறுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கும்பம்:** அடுத்தவரிடம் குடும்ப விடயம் பேச வேண்டாம். கடின உழைப்பால் தொழிலில் தடைகளை முறியடிப்பீர்கள். சீரான இலாபம் கிடைக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்கக் கூடாது.

**மீனம்:** மனதில் புத்துணர்வு நிலைத்திருக்கும். தொழிலில் விற்பனை அதிகரிப்பால், சாதனை படைப்பீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும்.

10 வருடத்துக்கு முன்னர் பிரிந்து போன காதலிய மறக்க முடியல என்று புலம்புறானுங்க...



ஆனா, 10 நாளுக்கு முன்னர் எங்களிட்ட வாங்கின கடனை மட்டும் மறந்து விடுறாங்க...!

அடடா... என்ன வெயிலுடா...



கூலிங் க்ளாஸ் போடவில்லை எண்டால் இரண்டு கண்ணும் அவிஞ்சிடும் போலருக்கே!



*T.THILEEPAN* @thilee24

பல நேரங்களில் கசக்கும். சில நேரங்களில் இனிக்கும். இருந்தாலும் நமக்காக வாழவிடிலும் எம்மை விரும்பும் உறவுகளுக்காக இந்தப் பயணம். வாழ்க்கை!

நீதி
பதியிடம்
கணவன்....
"ஐயா, என் மனைவி எனக்கு விஷம் கொடுத்துக் கொல்ல நினைக்கிறாள்..! என்ன செய்வது..?"
"நான் அவளிடம் பேசிப் பார்க்கிறேன்.. அவளை அழைத்துக் கொண்டு நாளை வா."
மறுநாள் நீதிபதி கணவனிடம்
"நான் உன் மனைவியிடம் பேசினேன். சுமார் 3 மணி நேரம் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்."
"என்ன ஐயா அந்த முடிவு.?"
"இப்படிப்பட்ட மனைவியுடன் வாழ்வதை விட நீ விஷம் குடித்துச் சாவதே மேல்!"




# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 5 | | | | |
| 7 | | | | | | | 3 | 2 |
| | | 2 | | | 9 | 8 | | 1 |
| | 1 | | | 2 | 3 | | | |
| 2 | 8 | 6 | | | 1 | | | |
| | | 3 | | | | | 1 | 8 |
| 9 | | | 2 | 1 | | | | 5 |
| | 4 | | | | 6 | | | |
| | | | 5 | 9 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 4 | 5 | 7 | 3 | 1 | 8 | 9 |
| 8 | 1 | 7 | 2 | 4 | 9 | 3 | 6 | 5 |
| 9 | 3 | 5 | 1 | 6 | 8 | 2 | 7 | 4 |
| 1 | 8 | 6 | 4 | 3 | 5 | 9 | 2 | 7 |
| 4 | 7 | 2 | 8 | 9 | 1 | 6 | 5 | 3 |
| 3 | 5 | 9 | 6 | 2 | 7 | 8 | 4 | 1 |
| 5 | 9 | 3 | 7 | 8 | 2 | 4 | 1 | 6 |
| 7 | 4 | 8 | 3 | 1 | 6 | 5 | 9 | 2 |
| 6 | 2 | 1 | 9 | 5 | 4 | 7 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சர்வதேச அல்பத்துக்கு தயாராகும் அனிருத்



இசை அல்பம் ஒன்றுக்காக அமெரிக்கத் தயாரிப்பாளருடன் ஒப்பந்தம் செய்துள்ளார் அனிருத். 'கொலவெறி' மூலம் உலகமெங்கும் கவனம் பெற்ற இசையமைப்பாளர் அனிருத், தற்போது தமிழ் சினிமாவில் கொடிகட்டிப்பறக்கும் இசையமைப்பாளர்களில் ஒருவர். படங்களுக்கு இசையமைப்பதோடு அவ்வப்போது தனிப்பட்ட இசை அல்பங்களையும் வெளியிடுவார் அனிருத். விரைவில் சர்வதேச இசை அல்பம் ஒன்றையும் வெளியிடவுள்ளார். இதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த தயாரிப்பாளரும், பாடலாசிரியருமான டிப்லோவுடன் ஒப்பந்தம் செய்துள்ளார் அனிருத். இந்தச் செய்தியை டிப்லோ தனது ருவிட்டரில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். இதன் மூலம் வெளிநாட்டில் அனிருத்தின் புகழ் இன்னும் உச்சத்துக்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது ரெமோ. தல 57 உட்பட பல தமிழ்ப்படங்களுக்கு இசையமைத்து வருகிறார் அனிருத்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்கிழக்குப்

தார் பல்கலைக்கழக உபவேந்தரும் பேராசிரியர் எம்.எம்.நஜூம்.

'தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினுள் புகுமுக மாணவர்களுக்கு பகிடிவதை மேற்கொள்ளப்படுவதாக, முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இதனையடுத்து புகுமுக மாணவர்கள் மீது பகிடிவதை மேற்கொள்ளக் கூடாது என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதற்கான உறுதிமொழி அனைத்துப் பீடங்களிலிருந்தும் பெறப்பட்டது. இதை பல்கலைக் கழகத்தினுள் உள்ள 5 பீடங்களில் 4 பீடங்கள் ஏற்றுக்கொண்டு உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

ஆனால் முகாமைத்துவ பீடத்தின் இரண்டாம் வருட கற்கை மாணவர்கள் மாத்திரம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை ஏற்றுக் கொள்ளாத 331 மாணவர்களையும் இடைநிறுத்தம் செய்துள்ளோம். அத்துடன் பல்கலைக்கழகங்களினுள் நுழைவதற்கும் அவர்களுக்குத் தடைவிதித்துள்ளோம்' – இவ்வாறு உபவேந்தர் பேராசிரியர் நஜூம் தெரிவித்தார். (வ-5)

## கொத்துக்குண்டு

வாய்மூல அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னர், அந்த அறிக்கையின் எழுத்துவடிவ ஆவணம்வெளியிடப்பட்டது. இந்த ஆவணத்திலேயே சையிட் அல் ஹுசேன், போரின் இறுதிக் கட்டத்தில் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அண்மைய கால அறிக்கைகளில் புதிய ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீனமான - பக்க சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளார். (வ-5)

## வீதியில்

மட்டுவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த பேரின்பராசா ஶ்ரீரஞ்சன் (வயது 25) என்ற இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்தார். மந்துவில் பகுதியில் வேலைக்குச் சென்றுவிட்டு, அங்கிருந்து சைக்கிளில் வீட்டுக்கு வந்த போதே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. .

கனகன்புளியடிச் சந்தியூடாக மீசாலை புத்தூர் சந்திக்கு வந்துகொண்டிருந்த கொழும்பு நிறுவன வாகனம் திடீரென வீதியை விட்டு விலகி மறுகரையில் சைக்கிளில் வந்த இளைஞரை மோதியதாக விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது. அத்துடன் வாகனம் அருகில் காணப்பட்ட மதிலை உடைத்த பின்னரே நின்றதெனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

வீதியை விட்டு வில கிய வாகனம் வீதியின் மறுகரையில் சைக்கிளில் வந்த இளைஞரை மோதித் தள்ளிவிட்டு அருகில் உள்ள மதிலையும் உடைத்து நின்றது. வாகனத்தினால்மோதுண்டவர் சம்பவ இடத் திலேயே சாவடைந்தார்.சைக்கிள் சுக்குநூறாகியது சம்பவம் தொடர்பாக அறிவிக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி வைத்தியசாலை நோயாளர்காவு வண்டி சம்பவ இடத்துக்குச் சென்று சாவடைந்தவரின் சடலத்தையும் வாகன சாரதி மற்றும் உதவியாளரையும் வைத்தியசாலைக்கு கொண்டு வந்தது.

வாகனச் சாரதியான கண்டி தம்பதெனியவைச் சேர்ந்த ஜே.எம்.கபில ஜெயசுந்தர (வயது 54) உதவியாளரான டி.ஆர்.சந்திம டில்சான் (வயது 19) ஆகியோர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (வ-9,131)

## அரசு

யுள்ளது. எனினும் அரசு அளித்த நிலைமாற்றுக்கால நீதி, ஆட்சிச் சீர்திருத்தம் மற்றும் பொருளாதார மறுமலர்ச்சி குறித்த வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இந்த வாக்குறுதிகள் இடைநிறுத்தப்படும் அல்லது சிதறடிக்கப்படும் அபாயம் உள்ளது.

இலங்கை அரசு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் பெரும்பான்மைக் கலாசாரத்தை மாற்றுவதை நோக்கிய முக்கியமான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் அரசு புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மீது விதிக்கப்பட்ட தடையை அகற்றியது. 1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுதந்திரதின நிகழ்வில் தமிழில் தேசிய கீதத்தை இசைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை வலுவானதொரு சமிக்ஞை. அதற்கு மறுநாள் வடமாகாண முதலமைச்சர் யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த ஆலயமொன்றிற்குச் சென்றார். மே 19ஆம் திகதி 2016இல் முன்னைய இராணுவ வெற்றி தினம் ஞாபகார்த்த தினமாக மாற்றப்பட்டது, இலங்கை ஜனாதிபதியும், பிரதமரும் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்களைச் சென்று பார்வையிட்டனர். மேலும் ஜனாதிபதி தன்னை கொல்வதற்கு திட்டமிட்ட தண்டனை வழங்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கினார்.

இவ்வாறான, துணிச்சலான, பார்வைக்கு தென்படக்கூடிய நடவடிக்கைகள் நம்பிக்கையை ஏற்படுத்துவதில் ஆக்கபூர்வமான பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என நான் உறுதியாக நம்புகின்றேன். அதேவேளை இதனுடன் இணைந்து நிறுவன ரீதியான மாற்றங்களையும் முன்னெடுக்கவேண்டியதும் அவசியம். இலங்கையின் இன மத சிறுபான்மை சமூகத்திற்கு எதிரான உணர்வுகளைத் தூண்டும் விதத்தில் சமூக ஊடகங்கள் மூலமும் ஏனைய வழிகளிலும் முன்னெடுக்கப்படும் பரப்புரைகள் குறித்து கவலைகொண்டுள்ளேன். சமீப காலங்களில் முஸ்லிம்கள், கிறிஸ்தவ மதத்தின் ஒரு பிரிவினர் மற்றும் ஒருபால் சேர்க்கையாளர்களை இலக்கு வைத்து வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கை அரசு இந்த வன்முறைகளை எதிர்த்து மிகவும் வெளிப்படையாகவும் உறுதியாகவும் போராடவேண்டும் என நான் விரும்புகின்றேன்.

சிறுபான்மைச் சமூகத்தினர் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த உதவக்கூடிய ஏனைய உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசு போதிய வேகத்துடன் செயற்படவில்லை.

2015இல் வடக்கு கிழக்கில் இராணுவத்தினரின் பிடியிலுள்ள பொதுமக்களின் நிலங்களை மீள கையளிப்பதில் அரசு சில சில முன்னேற்றங்களை காண்பித்தது. 2016இல் யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் படையினர் 2,652 ஏக்கர் நிலத்தை விடுவித்தனர்.

எனது இலங்கைப் பயணத்தின்போது நிலங்களை விடுவித்து படையினரின் கட்டமைப்புகளை வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்வதில் சில பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் ஜூன் மாதத்திற்கு முன்னர் புதியசெயலணி இதற்கான தீர்வைக் காணும் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டது.

ஆனால், இதன் பின்னர் சிறிதளவு முன்னேற்றம் மட்டுமே இந்த விடயத்தில் ஏற்பட்டுள்ளதாக சிவில் தலைவர்கள் தெரிவித்தனர். மேலும் இந்த விடயத்தில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெறுவதில் அதிகாரிகள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இராணுவம் தொடர்ந்தும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள இடம்பெயர்ந்த மக்களை சென்று பார்வையிட்டவேளை, போதியளவு வெளிப்படைத் தன்மையும் தரவும் இல்லாததால் மக்கள் மத்தியில் விரக்தி நிலவுவதை நான் உணர்ந்தேன். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நிலை தமிழ் சமூகத்தின் கரிசனைக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

2015 முதல் 16 வரையலான காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 40 பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. யாழ்ப்பாணத்தில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து மார்ச் முதல் மே வரையிலான காலப்பகுதியில் 25 பேர் வரை கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் கண்மூடித்தனமாக உரிய விதிமுறைகள் பின்பற்றப்படாமல் கைதுசெய்யப்பட்டமை, கடந்தகால வெள்ளை வான் கடத்தல்களுடன் இதனைச் சிலர் ஒப்பிடும் நிலையை ஏற்படுத்தியது. இவ்வாறான கைதுகள் சமூகத்தினர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதுடன், அரசின் மீதான நம்பிக்கையையும் பாதித்துள்ளது. சித்திரவதை குறித்த சிறப்பு அறிக்கையாளரும் இலங்கைக்கான தனது பயணத்தின்போது பாதுகாப்பு காரணங்களுக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதை செய்யப்படுவது தொடர்வதைச் சுட்டிக்காட்டினார். முன்னர் போன்று தீவிரமாக இல்லாவிட்டாலும் இது இடம்பெறுகின்றது என்கிறார் அவர். இது இராணுவ மற்றும் புலனாய்வுக் கட்டமைப்பு மீது செல்வாக்குச் செலுத்துவற்கு அரசு மிகவும் சிரமப்படுவதைப் புலப்படுத்தியுள்ளது. மேலும் கடந்த கால மனித உரிமைகள் மீறல்களுக்குக் காரணமான கட்டமைப்பை அகற்றுவதில் அரசு எதிர்கொணடுள்ள சவால்களையும் புலப்படுத்துகிறது.

இராணுவத்தை அகற்றுவதற்கான வரவேற்கத்தக்க நட்வடிக்கைகளிற்கு மத்தியிலும் இன்னமும் வடக்கில் பெரும் இராணுவ இருப்புக் காணப்படுகின்றது. இது கண்காணிப்பு மற்றும் சில வேளைகளில் அச்சுறுத்தப்படுதல், மிரட்டப்படுதல் கலாசாரத்திற்குக் காரணமாக இருக்கிறது. புனர்வாழ்வை அனுபவித்த பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை, கண்காணிப்பை எதிர்கொள்கின்றனர்.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் அரசு முழுமையான நிலைமாற்றுக்கால நீதி நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த இணங்கியது. அரசு குறிப்பிட்ட பொறிமுறைகளை அமைப்பதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோதிலும் பல் வேறு நிலைமாற்றுக்கால நீதி பாகங்களை உருவாக்குவதற்கு, நிறுவன ரீதியான கட்டமைப்புகளை ஏற்படுத்துவதில் முன்னேற்றம்என்பது மெதுவானதாகவும், தயக்கம் மிகுந்ததாகவுமே காணப்படுகின்றது.

நிலைமாற்று கால நீதியில் சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளை உள்வாங்குவதே முக்கிய விடயமாக காணப்படுகின்றது. மே 2016இல் மூத்த இராணுவத் தளபதிகளுடனான கலந்துரையாடலின்போது, இலங்கையின் உள்நாட்டு நீதிப் பொறி முறையில் சர்வதேச பங்களிப்பை ஜனாதிபதி நிராகரித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பொறுப்புக்கூறும் பொறிமுறை பக்கச்சார்பற்றது, சுதந்திரமானது என்ற நம்பிக்கை ஏற்படுவதற்குச் சர்வதேச பங்களிப்பு மிகவும் அவசியம் என நான் உறுதியாக நம்புகின்றேன். பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான நம்பகத் தன்மை இலங்கையின் நீதித்துறையிடம் இல்லாததே சர்வதேச பங்களிப்புக்கான அவசிய காரணமாகக் காணப்படுகின்றது.

அரசு பொறுப்புக்கூறல் குறித்த தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி சர்வதேச சமூகத்தினதும் பொது மக்களினதும் நம்பிக்கையைப் பெறுவதற்கு மற்றுமொரு வழி காணப்படுகின்றது. அது தற்போது நீதிமன்றத்தின் முன்னால் உள்ள வழக்குகளுக்குத் துரிதமாக நீதி வழங்குவதாகும்.

இலங்கையின் பாதுகாப்புத் துறையைச் சீர்திருத்தத் திற்கு உட்படுத்துவது அரசு எதிர்கொள்ளும் இன் னொரு பெரும் சவாலாகும்.

இலங்கையில் பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேசட்ட மீறல்களில் ஈடுபட்டதாக நம்பகத் தன்மை மிக்க நீதி நடை முறையால் தீர்ப்பு வழங்கப்பட்ட எவரும் பாதுகாப்புத் துறையில் தொடர்ந்து பணி புரிவது அல்லது உள்வாங்கப்படுவதை தவிர்ப்பதற்கான முழுமையான ஆய்வு நடை முறை அவசியமானது. சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்பில் தங்களுக்கு உரிய இடத்தை இலங்கைப் படையினர் பெறுவதற்கு அது அவசியமானது. அரசின் ஆலோசகர்களின் செயற்குழுவொன்று காணாமற்போனவர் களின் அலுவலகத்தை ஏற்படுத்துவதற் கான சட்ட மூலத்தின் நகல்வடிவை உருவாக்கியுள்ளது. எனினும் அது குறித்த பகிரங்க விவாதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. பாதிக்கப்பட்டவர்களும் சிவில் சமூகத்தினரும்இதுகுறித்த தங்கள் கரிசனைகளை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து இந்த விடயத்துடன் தொடர்புபட்டவர்களின் கருத்துக்களை உள்வாங்குவதற்கான இறுதிநேர முயற்சிகள் இடம்பெற்றன.

அரசு நிலைமாற்றுக்கால நீதிப்பொறிமுறைக்கான பல்வேறு மாதிரிகளை உருவாக்கும் முயற்சிகளை ஒருங்கிணைப்பு இல்லாமலும் வெளிப்படைத் தன்மையில்லாமலும் முன்னெடுக்கின்றது– இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ–சி)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் கெங்காதரம்



பிறப்பு 1926.07.25 — இறப்பு 2016.06.27

யாழ். நல்லூர் மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கெங்காதரம் 27.06.2016 திங்கட்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்ணர் - சிவகாமம் தம்பதிகளின் அன்பு மகளும் மயில்வாகனம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கெங்காதரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற காங்கேயன் மற்றும் கமலாசினி, ஈஸ்வரி, லோகேஸ்வரி, பூங்கோதை (பிரான்ஸ்), கலாவதி, காலஞ்சென்ற றஞ்சினி மற்றும் சிவகுமார்(கனடா), தயாளன், விமலன்(பாரின்), அம்பிகை, அம்பிகைபாகன்(லண்டன்), மங்களம் ஆகியோரின் அன்பு தாயாரும் கமலாம்பிகை, காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் நடராசா, காலஞ்சென்ற ஜெகநாதன், சிறிதரன் (பிரான்ஸ்), விக்னேஸ்வரன், காலஞ்சென்ற தியாகராசா, ராஜி(கனடா), கலையரசி, இந்திராணி, விமலன், அசோக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் பேர்த்தியும் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2016) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.14, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் பழனியாண்டவர் கோயிலுக்கு தெற்குப் பக்கமாக 200Metre தூரத்தில் 4பரப்புக் காணி (1LMS=8Laks) விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 7037058**

**26 தமிழர்கள்**

யில் கிராமத்திற்குள் நுழைந்த இராணுவத்தினராலேயே இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள் ளது. இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந் தவர்கள் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த தமிழர்கள் ஆவர்.

இந்தப் படுகொலை தொடர்பாக ஆரம்பத்தில், மூதூர் நீதிவான் மன்றில் நடைபெற்ற விசாரணைகளின் போது, தெகியத்த இராணுவ முகாமில் கடமை யாற்றிய எட்டு இராணுவச் சிப்பாய்கள் சம் பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சாட்சிகளினால் அடை யாளம் காணப் பட் டிருந்தனர்.

அந்தக் காலத்தில் நில விய போர் சூழ்நி லையை கருத்திற் கொண்டு எதிரிகளின் பாதுகாப்புக் கருதி, சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் கண்டவர்கள், சிவில் சமூகத்தி னர் உள்பட 121 பேர் சாட்சிகளாக மூதூர் போலிஸாரால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜூரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன் றத்தில் தற்போது நடைபெற்று வரும் இந்த விசாரணைக்கு, சாட்சிகளில் 20 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் 16 பேர் மட்டுமே சமுகமளித்திருந்தனர். ஏனைய, நான்கு பேரும் உயிரிழந்து விட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் நாள் விசாரணையின் போது சாட்சியமளித்த பெண் ணொருவர், எதிரிக ளில் ஒருவரை தனது கணவனை சுட்டுக் கொன்றவர் என்று அடையாளம் காட்டி னார். எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள எட்டு இராணுவச் சிப் பாய்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். தற்போது அநுராத புரம் நீதிமன்றத் தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணை யில் ஏனைய ஆறு பேரும் முன்னிலை யாகியுள்ளனர்.

விசாரணை நடை பெற்று வரும் நிலை யில், ஏற்கனவே பிணை யில் செல்ல அனுமதிக்கப்பட் டிருந்த ஆறு இரா ணுவச் சிப்பாய் களுக்கும், அநுராத புரம் மேல் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள னர். (வ-5)



**கண்ணீர் அஞ்சலி**

**விக்டர் அலோசியஸ் மரியதாஸ்**
**(பொலிஸ் சார்ஜன்ட்)**

யா/வறுத்தலை விளான் அ.மி.த.க.பாடசாலையின் அதிபராகக் கடமை யாற்றும் திருமதி வி.யூடித் கொலஸ்ரிக்கா அவர்களின் அன்புக் கணவரின் திடீர் மரணத்தையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்களும்**
**அதிபர் சங்கம், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்.**

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



**கணபதி தங்கராசா**



**தங்கராசா இரத்தினகுணசிங்கம் பிரியதாரணி**

கடந்த 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த கணபதி தங்கராசா அவர்களதும் 30.05.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த தங்கராசா இரத்தினகுணசிங்கம் பிரியதாரணி அவர்களினதும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (29.06.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இருவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

அத்துடன் இவர்களது சிவபதமடைந்த செய்தி அறிந்து நேரடியாக இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையம், துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தி யவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல், முகநூல் ஊடாக துயர் பகிர்ந்தவர்களுக்கும் எம் மனம் நெகிழ்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**(இவ் அழைப்பை எம் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)**

தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு ,கோண்டாவில்

குடும்பத்தினர்.

**வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை**
**மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை**
**ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்**

**வட்டாரம் :- 02**
**ஆதன இலக்கம்.:-** 38
**வீதி: எச்சாட்டி (ஈஞ்சடி)**
**கிராமசேவையாளர் பிரிவு** :- J/129

வட்டாரம் 02, எச்சாட்டி (ஈஞ்சடி) வீதி, ஆதன இல 38 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோயிற்பற்று சுதுமலை இறை **"தென்கராயன் ஓலையும் அதுவானிவான் கூடலும்"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 15.90 கொண்ட இவ்வாதனமானது யாழ்ப்பாணம், சுதுமலை தற்போது கனடாவில் வசிக்கும் தம்பிராஜா மகள் சிவகலா, அப்பையா பாலேந்திரன் பெண் சிவகாமசுந்தரி ஆகிய இவர்களால் சுதுமலை வடக்கு, ஈஞ்சடியைச் சேர்ந்த தியாகராஜா கைம்பெண் புவனேஸ்வரி அம்பாள் என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் மேனகா கேசவன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 66 ஆம் இலக்க 12.05.2012 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. மு. இராசையா அவர்களால் வரையப்பட்ட 421 ஆம் இலக்க 2005.09.21 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " தென்கராயன் ஓலையும் அதுவானிவான் கூடலும் " நிலப்பரப்பு 02 குளி 15.89 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தியாகராஜா கைம் பெண் புவனேஸ்வரி அம்மாள் என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**கடந்த 2016.05.31 சிவபதமடைந்த**
**எமது குடும்ப விளக்கு**
**அமரர்**

## பொன்னையா கணேஸ்

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், சமாதான நீதிவான் (JP), முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்)**



**மலர்வு** **1942.04.05**

**உதிர்வு** **2016.05.31**

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பொன்னையா கணேஸ் அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர் களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தார் சார்பில் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அந்தியேட்டிக் கிரியைகள் 30.06.2016 வியாழக்கிழமை அவ ரது வீட்டில் அதிகாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**யாழ்.பிரதான வீதி,**
**வல்வெட்டி, வல்வெட்டித்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்தவின் குறிப்புப் புத்தகத்தை பகுப்பாய்வுக்கு உட்படுத்துங்கள்

## நீதிமன்றம் உத்தரவிட்டது

கொழும்பு, ஜுன் 29

ஊடகவியலாளர் லசந்த விக்ர மதுங்க பயன்படுத்திய குறிப்புப் புத்தகத்தை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. கல்கிஸ நீதிமன்றில் லசந்த கொலை தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. லசந்தவின் குறிப்புப் புத்தகத்தை பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு நீதிவான் மொஹமட் சஹாப்தீன் உத்தரவிட்டார்.

இராணுவத் தளபதிக்கு வழங்கப் பட்ட உத்தரவின் அடிப்படையில் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டன. அதில் சிலவற்றைக் காணவில்லை. அது குறித்து விசாரணை செய்ய இராணுவ மேஜர்ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று இராணுவத் தளபதியின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

லசந்த பயன்படுத்திய குறிப்புப் புத்தகத்தில் அவர், தன்னைப் பின்தொடர்ந்த மோட்டார் சைக்கிள் இலக்கங்களை குறிப்பிட்டுள்ளார். அது பற்றிய விவரங்கள் முன்னர் காணப்பட்ட போதிலும், தற்போது அவை இல்லை - என்று லசந்தவின் குடும்பத்தினர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அதுல ரணகல தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் ஒன்றரை ஆண்டுகள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் நுவரெலியா வங்கியொன்றின் ஊடாக அவருக்கு சம்பளத்துடன், அனைத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன என்றும் சட்டத்தரணி ரணகல தெரிவித்தார்.

அனைத்து அறிக்கைகளையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-ஐ-5)

## கற்சிலைமடுவில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டங்கள்

கடந்த பெருமழையை அடுத்து முல்லைத்தீவு கற்சிலைமடு பகுதியில், டெங்கு ஒழிப்பு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கற்சிலைமடு கிராம அலுவலர் தனபால் ராஜ் தெரிவித்தார். டெங்கு ஒழிப்பு தினத்தை முன்னிட்டே இந்த செயற்பாடுகள் கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் கற்சிலைமடுக் கிராமத்தில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஒவ்வொரு வீடுகளிலும் நுளம்பு பெருகுவதற்கான இடங்களைப் பார்வையிட்டு அவற்றை அகற்றி வருகின்றனர்.

இந்தச் செயற்பாட்டின் மூலம் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என எண்ணியுள்ளோம். பொதுமக்களுடைய வீடுகளும், வீடு சார்ந்த பகுதிகளும் துப்புரவு செய்யாது காணப்படின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கிராம அலுவலர் தனபால் ராஜ் தெரிவித்தார். (ற-ஐ-500)

## மரண அறிவித்தல்கள்

### புண்ணியமூர்த்தி திருச்செல்வம்

(செல்வம் சவுண்ஸ் உரிமையாளர்)



பிரான்பற்று பண்டத்தரிப்பை சேர்ந்த புண்ணியமூர்த்தி திருச்செல்வம் நேற்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி புண்ணியமூர்த்தி தம்பதியரின் அன்பு மகனும்காலஞ்சென்ற இராச மணியின் அன்புக் கணவரும், மோகன், விஜயா, மங்கையர்க்கரசி, சாந்தி ஆகியோரின் அன்பு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரான்பற்று, பண்டத்தரிப்பு. (J/2515) (10.17) தகவல்: குடும்பத்தினர்.

### ஆறுமுகம் தர்மலிங்கம்



காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் நேற்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.06.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கரை, களபூமி, காரைநகர். தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பிஜயா பரராஜசிங்கம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மூன்று கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா பரராஜசிங்கம் கடந்த (27.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருபாகரமூர்த்தி, கிருதரமூர்த்தி, சிவானந்தமூர்த்தி, லோகேஸ்வரமூர்த்தி, ஐங்கரமூர்த்தி, சிலோசனா, சுபாஜினி, கலைவாணி, பத்மராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2016) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூன்று கோயிலடி, உரும்பிராய். தகவல்: குடும்பத்தினர். 077 0457830, 077 7352185

### திருமதி சிவபாக்கியம் கணேசபிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியை யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்)



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கணேசபிள்ளை நேற்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பு-சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கணேசபிள்ளையின் (ஓய்வு பெற்ற அதிபர் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் தயாபரனின் (ஆசிரியர் கோண்டாவில் இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும் சோபனாவின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2016) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில். தகவல்: க.தயாபரன் (மகன்)

### சின்னவி அருமைத்துரை



கோயில் ஒழுங்கை, நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவி அருமைத் துரை நேற்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித வில்லூன்றி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/23, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (J/2506) (13.18.17) தகவல்: குடும்பத்தினர். 770 096 095, 770 822 839

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சாந்தி மகேந்திரராஜா

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தி மகேந்திரராஜா 27.06.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மகேந்திரராஜாவின் (உதயன் பத்திரிகை விநியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சர்வலோசினி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், பிரியா (Nippon Paint Lanka (Pvt) Ltd). ஷாளினி, மயூரி ஆகியோரின் பாசமிகு தாயும், தர்ஷனின் (லண்டன்) பாசமிகு மாமியும், லலிதாராணி (ஜேர்மனி) மாலினி (உரும்பிராய்) திரவியநாதன் (ஜேர்மனி) மனோகரி (கனடா) சிறிகாந்தன் (கனடா) ரவிச்சந்திரன் (ஜேர்மனி) சசிக்குமார் (கனடா) சுபாணி (உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நகுலேஸ்வரன் (அளவெட்டி பிரகாஷ் பதிப்பகம்) திரவியராணி (கொழும்பு) காலஞ்சென்ற நிர்மலானந்தன், ராசமலர் (தாவடி), சுசிலாதேவி (ஜேர்மனி), குணேந்திரராஜா (ஜேர்மனி) ரவீந்திரன் (லண்டன்) கணேசமூர்த்தி (ஜேர்மனி) காலஞ்சென்ற கிரிதரன் மற்றும் லதா (ஜேர்மனி), தபேந்திரன் (கனடா), கௌரி (கனடா), வதனி (ஜேர்மனி) ரஞ்சனா (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2016) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காட்டு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (C/21143) (10.17) தகவல்: கணவர், பிள்ளைகள்.

### திருமதி போதநாயகம் சுப்பிரமணியம்



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி போதநாயகம் சுப்பிரமணியம் 27.06.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - அம்பிகைப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், சிவக்கொழுந்து, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சிவகாமிப்பிள்ளை, சாந்தநாயகி, குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்னேஸ்வரன், சிவஞானேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன், ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌரி, காலஞ்சென்ற ஜெயராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவசோதி, சிவராமகிருஷ்ணன், மயூரன், பைரவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜனவதனன், தக்ஷன், விருத்திகா, உமேசா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது கைதடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி. (J/2505) (11.17.18) தகவல்: விக்னேஸ்வரன் (மகன்)

077 731 0588


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சறுக்கிய ஸ்ராக்

குறைந்த இன்னிங்ஸில் 100 இலக்குகள் வீழ்த்திய வீரர் என்ற சாதனையை முத்தரப்புத் தொடரில் படைக்கத் தவறியுள்ளார் ஆஸியின் ஸ்ராக்.

பாகிஸ்தானின் முன்னாள் வீரரான முஸ்டாக் 53 ஆட்டங்களில் 100 இலக்குகள் வீழ்த்தியதே இன்றுவரை சாதனையாக இருந்து வருகிறது. ஆஸ்திரேலியா, தீவுகள், தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஆஸி. சம்பியனானது. தொடர் ஆரம்பிப்பதற்கு முன்பாக ஸ்ராக் 46 ஆட்டங்களில் விளையாடி 90 இலக்குகளை வீழ்த்தியிருந்தார். குறைந்த இன்னிங்ஸில் 100 இலக்குகள் என்ற மைல்கல்லை எட்டுவதற்கு ஸ்ராக்குக்கு 6 இன்னிங்ஸில் 10 இலக் குகள் தேவைப்பட்டன. முத்தரப்புத் தொடரில் 5 ஆட்டங்களில் களமிறங்கிய ஸ்ராக் 8 இலக்குகளையே வீழ்த்தினார். இதனால் அவர் தற்போது 51 இன்னிங்ஸில் 98 இலக்குகளுடன் உள்ளார். இதனால் முத்தரப்புத் தொடரில் குறித்த இலக்கை அவரால் அடையமுடியவில்லை. ஸ்ராக் அடுத்ததாக களமிறங்கும் ஒரு நாள் ஆட்டத்தில் இரு இலக்குகளை வீழ்த்தினால் முஸ்டாக்கின் சாதனையை தகர்க்க முடியும். (ம)





# விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்; ஜோகோவிக் முதல் வெற்றி

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஜோகோவிக் வெற்றிபெற்றார்.

தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான ஜோகோவிக்கை எதிர்த்து மோதினார் 177 ஆவது இடத்திலுள்ள ஜேம்ஸ் வார்டு. ஆட்டத்தின் முதல் செற்றை 6:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் மிகமிக இலகுவாகக் கைப்பற்றினார் ஜோகோவிக். ஆனால், இரண்டாவது செற்றில் வார்டு பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தினார். இழுபறியாக நீடித்த அந்த செற்றை தட்டித்தடுமாறி 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் ஜோகோவிக். மூன்றாவது செற் 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஜோகோவிக்கின் வசமாக, முடிவில் அவர் 3:0 என்ற நேர் செற் கணக்கில் சம்பியனானார். (ம)

## நெருக்கடியில் இலங்கை

இலங்கை- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களின் அடிப்படையில் இங்கிலாந்து 1:0 என்று முன்னிலையில் உள்ளது. முதல் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவதில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. மூன்றாவது ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இதனால் எஞ்சியுள்ள இரு ஆட்டங்களில் ஒன்றில் வெற்றிபெற்றாலும் தொடர் இங்கிலாந்திடம் சென்றுவிடும். இலங்கை தொடரைக் கைப்பற்ற வேண்டுமாயின் எஞ்சிய இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற வேண்டிய கட்டாயம் உள்ளது. மொத்தத்தில் வாழ்வா? சாவா? என்ற நிலையில் இன்று களமிறங்குகிறது இலங்கை. (ம)

## சுருண்டது சுலோவாக்கியா

யூரோ கிண்ண கால்பந்து தொடரில் நேற்று நடைபெற்ற சுப்பர் 16 சுற்றின் ஆட்டமொன்றில் சுலோவாக்கியாவை சுருட்டி காலிறுதிக்கு முன்னேறியது ஜேர்மனி.

ஆட்டத்தின் 8ஆவதுநிமிடத்தில்ஜேர்மனி வீரர் போவாடங் முதல் கோலைப் பதிவுசெய்தார். 43ஆவது நிமிடத்தில் கோமஸ் ஜேர்மனியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய, சுலோவாக்கியாவுக்கு அடிமேல் அடியாக விழுந்தது. ஜேர்மனியின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 63ஆவது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் டிராக்ஸ்வர் மூன்றாவது கோலையும் ஆட்டத்தின் இறுதிக் கோலையும் பதிவுசெய்ய, முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னே றியது ஜேர்மனி. (ம)


பிடியெடுப்பைக் கோட்டை விடும் சுலோவாக்கிய கோல் காப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிமன்னே விலகல்

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் லகிரு திரிமன்னே காயம் காரணமாக விலகினார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் திரிமன்னே இடம்பெற்றிருந்தார். ஆனால் அவர் சொல்லிக் கொள்ளும் அளவு சிறப்பாகச் செயற்படவில்லை. ஒருநாள் தொடரில் இடம்பெற்ற போதிலும், முடிந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் விளையாடும் பதினொருவர் அணியில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் திரிமன்னே காயம் காரணமாக ஒருநாள் தொடரில் இருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு பதிலாக இலக்குக் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான நிரோசன் டிக்வெல்ல அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார். (ம)

## வீனஸ் முன்னேற்றம்

விம்பிள்டன் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் குரோசியாவின் டுன்னாவைத் தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார் வீனஸ் வில்லியம்ஸ்.

மொத்தமாக மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 7:6, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வீனஸ் வில்லியம்ஸ் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார். (ம)



## ஆமிரில் மிஷ்பா நம்பிக்கை

பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஆமிரால் உலகின் முதல்தர பந்து வீச்சாளராக முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் டெஸ்ட் தலைவரான மிஷ்பா உல் ஹக்.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த டெஸ்டில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் மொகமட் ஆமிர் விளையாட இருக்கிறார். சூதாட்டத்தில் ஈடுபட்டு, எந்த மைதானத்தில் ஐந்தாண்டு தடை பெற்றாரோ?, அந்த மைதானத்தில் இருந்து மீண்டும் டெஸ்ட் வாழ்க்கையை ஆரம்பிக்க இருக்கிறார்.

அவர் வேகமாக பந்து வீசுவது, பந்துகளைத் திருப்புவது, அவருடைய கட்டுப்பாடு ஆகியவற்றை பார்த்தீர்கள் என்றால், எல்லாமே அப்படியே இருக்கிறது. அவர் உலகின் சிறந்த பந்து வீச்சாளராக முடியும். ஆமீர் தடையில் இருந்து மீண்டு வந்தபின், சிறப்பாக பந்து வீசுகிறார். இந்த தொடரில் நெருக்கடி இருக்கும் என்பது அவருக்குத் தெரியும். இருந்தாலும், அதை அவர் சிறப்பான முறையில் எதிர்கொள்வார். இங்கிலாந்தில் மறுபிரவேசம் செய்து அவரது ரசிகர்களிடம் மீண்டும் இடம்பிடிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த வாய்ப்பு என மிஷ்பா மேலும் தெரிவித்தார். (ம)

# யாழ். சம்பியன்

கரணவாய், ஜூன் 29
மாகாணமட்ட கரப்பந்தாட்டத் தொடரில் மன்னார் மாவட்ட அணியை 3:2 என்ற செற் கணக்கில் வீழ்த்தி சம்பியனாகியது யாழ். மாவட்ட ஆடவர் அணி.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை மன்னார், யாழ். அணிகளுக்கு இடையில் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. முதல் செற்றை மன்னார் அணி 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. சரிவில் இருந்து மீண்டு இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்களை முறையே 25:23, 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது யாழ். நான்காவது செற் 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மன்னாரின் வசமாக நிலமை 2:2 என்றானது. இறுதிச் செற்றைக் கைப்பற்றும் அணி எதுவோ அந்த அணியே சம்பியன். திக்திக் நிலையில் ஆரம்பமானது ஆட்டத்தின் ஐந்தாவதும் இறுதியானதுமான செற். பெரும் போராட்டத்தின் மத்தியின் 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றை கைப்பற்றி 3:2 என்ற செற்கணக்கில் வாகை சூடியது யாழ் அணி. (ம-108)

# இறுதியில் ஜோசெப்

யாழ்ப்பாணம், ஜூன் 29
ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது சென். ஜோசெப் அணி.

யுனைற்ரெட் வி.கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசெப் அணியை எதிர்த்து விடத்தற்தீவு ஐக்கிய அணி மோதியது. இதில் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசெப் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)


ஏஞ்சல், யாழ். இந்து அணிகளுக்கு இடையிலான அரையிறுதியின் போது

# இளையோர் கூடைப்பந்தாட்டம்; ஏஞ்சல் – மத்தி. இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இளையோர் கூடைப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்கு உட்பட்ட பிரிவில் யாழ். மத்திய கல்லூரி அணி, மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி என்பன இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி மோதியது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 73:53 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதியது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 86:43 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

# பொதுசனசேவைகள் வி.க. சம்பியன்

மன்னார் மூன்றாம்பிட்டி சென். அன்ரனிஸ் வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் முருங்கன் பொதுசனசேவைகள் விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.

சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் முருங்கன் பொதுசனசேவைகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அந்தேனியார்புரம் சென். அன்ரனிஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணியினரும் கோல்கள் எதனையும் பதிவு செய்யாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் முருங்கன் பொதுசனசேவைகள் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் சம்பியனானது. (ம-23)

# போராடி வென்றது சென். அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 29
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து விக்னேஸ்வரா அணி மோதியது. இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இராமநாதன் மகளிர் இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 28:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)



# உடுவில் பிரதேசம் சம்பியன்

கரணவாய், ஜூன் 29
பிரதேச இளைஞர் சம்மேளனங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் உடுவில் பிரதேச அணி சம்பியனானது.

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனம் நடத்திய விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் ஒட்டுமொத்தமாக 49 புள்ளிகளைப் பெற்று உடுவில் பிரதேச இளைஞர் கழகம் நடப்பு வருடத்தின் சம்பியனானது. யாழ். பிரதேச இளைஞர் கழகம் 47 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தை தனதாக்கியது.

தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் சிறந்த சுவட்டு வீரராக நல்லூர் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த ஏ. நியூட்டனும் சிறந்த களவீரராக அதே கழகத்தைச் சேர்ந்த ரி.சிந்துஜனும் தெரிவானார்கள். பெண்களில் சிறந்த சுவட்டு வீராங்கனையாக வேலணைப் பிரதேச இளைஞர் கழகத்தைச் சேர்ந்த மேரி சுரேணியும் களவீராங்கனையாக நல்லூரைச் சேர்ந்த எஸ். விதுசாவும் தெரிவாகினர்.

20 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவில் சிறந்த சுவட்டு வீரராக கரவெட்டியைச் சேர்ந்த எஸ். மாதுஜனும் களவீரராக நல்லூரைச் சேர்ந்த எஸ். செந்தூரனும் தெரிவாகினர். பெண்களில் சிறந்த சுவட்டு வீராங்கனையாக பருத்தித்துறையைச் சேர்ந்த வி.தனுசியாவும் கள வீராங்கனையாக உடுவிலைச் சேர்ந்த கே. சுபாசினியும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-108)

# விடைபெறத் தயாராகும் ஆர்ஜென்ரீனா வீரர்கள்

ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸி பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்றுவிட்ட நிலையில், அந்த அணியின் வேறுசில முன்னணி வீரர்களும் ஓய்வினை அறிவிக்கத் திட்டமிட்டுள்ளதாக சக வீரர் செர்ஜியோ அக்யூரோ தெரிவித்தார்.

கோப்பா அமெரிக்காத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆர்ஜென்ரீனாவும் சிலியும் பலப்பரீட்சை நடத்தின. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 4:2 என்ற கோல் கணக்கில் சிலி சம்பியனானது. ஆர்ஜென்ரீனா இறுதிவரை முன்னேறி கிண்ணத்தைத் தவறவிடுவது இது முதல்முறையல்ல. 1993ஆம் ஆண்டு கோப்பா அமெரிக்கா கிண்ணத்தை வென்றதன் பிற்பாடு இதுவரை அந்த அணி வேறொரு பெரிய கிணணத்தையும் வெல்லவில்லை. நான்கு தடவைகள் இறுதிவரை முன்னேறி கிண்ணத்தைத் தவறவிட்டுள்ளது. நான்கிலும் மெஸ்ஸி இருந்துள்ளார். இதனையடுத்து கிண்ணத்தைப் பறிகொடுத்த விரக்தியில் மெஸ்ஸி பன்னாட்டு ஆட்டங்களில் ஓய்வை அறிவித்துச் சென்றார். மெஸ்ஸியின் ஓய்வை ஆர்ஜென்ரீனா ரசிகர்களாலும் வேறுசில கால்பந்தாட்ட ரசிகர்களாலும் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் அந்த அணியின் வேறுசில வீரர்களும் ஓய்வுபெறத் திட்டமிட்டிருப்பதாக சக வீரர் செர்ஜியோ அக்யூரோ வெளிப்படுத்தியுள்ளார்.

மெஸ்ஸி மட்டும் அணியில் இருந்து விலகவில்லை. மேலும் வீரர்கள் விலக வாய்ப்புள்ளது. என்னைப்போல் பல வீரர்கள் அணியில் நீடிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்று ஆலோசனை செய்துகொண்டிருக்கிறோம். ஓய்வு பற்றி சிந்திக்க வேண்டிய



தில்லை. எமக்கு வயதுள்ளது. ஆனால் இறுதியாட்டத்தில் கிண்ணத்தைத் தவறவிடுவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆகையால் ஓய்வுபெறுவதென்பது நடக்கலாம் என அக்யூரோ மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யூரோக் கிண்ண கால்பந்தாட்டத் தொடர் நடையைக் கட்டியது நடப்புச் சம்பியன்

ஐரோப்பிய கால்பந்துத் தொடரில் நடப்புச் சம்பியனான ஸ்பெய்னை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது இத்தாலி.

யூரோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற சுப்பர் 16 சுற்றின் ஆட்டமொன்றில் (காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டம்) ஸ்பெய்ன் - இத்தாலி அணிகள் மோதின. நீண்ட போராட்டத்தின் மத்தியில் ஆட்டத்தின் 35 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தது இத்தாலி. பின்கள வீரர் ஜியார்ஜியோ இந்தக் கோலை அடித்தார். முதற் பாதியின் முடிவில் இத்தாலி 1:0 என்று முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியிலும் இத்தாலியின் ஆதிக்கமேமேலோங்கி இருந்தது. ஆட்டம் முடியும் தருவாயில் (91ஆவது நிமிடத்தில்) அந்த அணி இரண்டாவது கோலை அடித்து ஸ்பெய்னுக்கு மேலும் அதிர்ச்சி கொடுத்தது. பெல்லோ இந்தக் கோலைப் பதிவு செய்தார். நடப்புச் சம்பியனான ஸ்பெய்னால் இறுதிவரை பதிலடி கொடுக்க முடியாத நிலையில் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றது இத்தாலி.

(ம)

# தொடர்கிறது பற்றிக்ஸின் வெற்றிநடை நாலந்தா நேற்று சின்னாபின்னமானது



யாழ்ப்பாணம், ஜூன் 29

கொத்மலை கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுநடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் கொழும்பு நாலந்தாக் கல்லூரியை ஊதித்தள்ளி காலிறுதிக்குள் கால் பதித்தது சென். பற்றிக்ஸ்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே பற்றிக்ஸின் ஆதிக்கமே மிகையாக நிலைத்திருந்தது. நாலந்தவால் சிறிதும் எதிர்த்துப் போராட முடியவில்லை. 7:0 என்ற கணக்கில் முடிந்தது முதற்பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். எதிரணியைப் படாதபாடு படுத்தியது பற்றிக்ஸ். இரண்டாம் பாதியில் 5 கோல்கள் பதிவாக, முடிவில் 12:0 என்ற கோல் கணக்கில் நாலந்தாக் கல்லூரியை வீழ்த்தியது பற்றிக்ஸ். சாந்தன் 4 கோல்களையும், கெயின்ஸ் 3 கோல்களையும், சுபாஸ் 2 கோல்களையும், அன்றுட், டிலக்சன், அபிசன் மூவரும் தலா ஓர் கோலையும் பதிவு செய்தனர். இந்தத் தொடரில் இதுவரை விளையாடிய 6 ஆட்டங்களிலிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# இங்கிலாந்து அதிர்ச்சித் தோல்வி ஐஸ்லாந்து வரலாற்றுச் சாதனை



யூரோ கிண்ணத் தொடரில் பலம் மிகுந்த இங்கிலாந்துக்கு அதிர்ச்சி வைத்தியம் வழங்கி முதன்முறையாக காலிறுதிக்குத் தகுதிபெற்றது ஐஸ்லாந்து.

ஆட்டத்தின் ஆரம்பம் என்னமோ இங்கிலாந்துக்குச் சாதகமாகவே அமைந்தது. நான்காவது நிமிடத்தில் ரூனி முதற் கோலைப் பதிவுசெய்து இங்கிலாந்துக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார். ஆனால் இந்த ஆதிக்கத்தை நீடிக்க அனுமதிக்கவில்லை ஐஸ்லாந்து. ஆறாவது நிமிடத்தில் சிகுர்சன் மூலம் பதில் கோலைப் பதிவு செய்தது. 18 ஆவது நிமிடத்தில் ஐஸ்லாந்து இரண்டாவது கோலை அடித்து இங்கிலாந்துக்கு அதிர்ச்சி கொடுத்தது. மாற்றம் இல்லாமல் முடிந்தது முதற்பாதி. ஐஸ்லாந்தின் ஆதிக்கத்துடன் ஓடி மறைந்தது இரண்டாம் பாதி. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் காலிறுதிக்குத் தகுதிபெற்றது ஐஸ்லாந்து. ஐரோப்பிய கால்பந்தாட்டத் தொடரின் வரலாற்றில் ஐஸ்லாந்து காலிறுதிக்குத் தகுதிபெறுவது இதவே முதற்றடவை.

(ம)

# ஒலிம்பிக் வீரர்கள் தங்குவதற்கு கட்டடத் தொகுதிகள் நிர்மாணம்



பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில், தொடரில் பங்கேற்க வரும் வீர, வீராங்கனைகள் தங்குவதற்கு வசதியாக கட்டடத் தொகுதிகள் திறக்கப்பட்டுள்ளன.

மொத்தம் இரண்டு லட்சம் சதுர மீற்றர் அளவில் 3 ஆயிரத்து 604 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கொண்டதாக 835 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் குறித்த தொகுதி கட்டப்பட்டுள்ளதாக பிரேஸில் விளையாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக்கில் கலந்துகொள்ளுவதற்காக வரும் ஒட்டுமொத்த வீர வீராங்கனைகளும் இதில் தங்க முடியும் என்றும், சிகா வைரஸ் பாதிப்பில் இருந்தும் பயங்கர வாதத் தாக்குதல்களில் இருந்தும் நூறு சதவீதம் உத்தரவாதம் தரமுடியும் என்றும் குறித்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(ம)

FRENCH LANGUAGE CENTRE
FLC "FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1. A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

SPOKEN ENGLISH
மூன்று மாத, சனி,ஞாயிறு மற்றும் வாரநாள் பயிற்சிநெறி
இளைஞர், யுவதிகள், O/L,A/L எழுதியோர், தொழில்தேடுவோர் தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
2 ஆவது சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 02.07.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00 - 05.00 இடமில்லை
வாரநாள் (திங்கள்,புதன்) பிரிவுகள் ஆரம்பம்.
காலை 10.00-12.00
பாடப்புத்தகங்கள் சான்றிதழ்;Video DVD, அனைத்தும் இலவசம்.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு
1. Electrician
2. Showroom Marketing Sales & Executives. (Girls)
3. Data Entry Operators (Ms Office, Ms Excel, Quick Book)
4. Designer (Corel draw,Photoshop)
விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் அலுவலகத்துக்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.
KINGS ELECTRONICS PVT (LTD)
No.12, POINT PETRO ROAD,
JAFFNA.
021 454 6699
(J/2495) (13.18)

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை வகுப்புக்கள்
• அரச முகாமைத்துவ உதவியாளர்
• அபிவிருத்தி உத்தியோகத்தர்
• மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கு
சனி, ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளன.
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமஷல் வங்கி அருகில்)

SLEAS
இறுதி விசேட கருத்தரங்குகள்
யாழ்ப்பாணத்தில்
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில்
வவுனியாவில்
CBA கல்விநிலையம் கதிரேசன்வீதி
வெள்ளவத்தை
உருத்திராமாவத்தையில் உள்ள தமிழ்சங்க வளாகம் கல்வி நிலையம்
மேலதிக விவரங்களுக்கு
T.P 076 6883394

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org